கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை
199
சித்திரை 20.04.2023
ஆவணச்சிறப்பிதழ்

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்
100/-

## ஈழத்து அரசியல் நாவல்கள் சிறப்பிதழ் - 2











































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

-கலை இலக்கிய மாத சஞ்சிகை-

ஆவணச் சிறப்பிதழ்

2023 சித்திரை இதழ் - 199


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-


**பிரதம ஆசிரியர்**

க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**

வெற்றிவேல் துஷ்யந்தன்

ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**

கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**

கலை அகம்

சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி

அல்வாய் வடமேற்கு, அல்வாய்

இலங்கை.

**ஆலோசகர் :**

திரு.கி.நடராஜா

**தொலைபேசி :**

0775991949, 0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**

K.Bharaneetharan

Commercial Bank, Nelliady

A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.


# பொருளடக்கம்


குணாகவியழகனின்
நஞ்சுண்டகாடு - ஒரு பார்வை
- கலாநிதி சு.குணேஸ்வரன் -

செங்கைஆழியானின் மனக்குமுறல்
`ருத்திர தாண்டவம்` நாவல்
- இன்பமகன்-

எண்பதுகளின் ஆவணம்
பார்த்தீனியம்
- இ.சு.முரளிதரன் -

தமிழ்க்கவியின்
ஊழிக்காலம்
- த.அஜந்தகுமார் -

போர்தின்ற வாழ்வின் ஒரு தெறிப்பே
நடுகல்
- தி.செல்வமனோகரன் -

ஒரு போராளியின் தன் வரலாறாக
சாந்திநேக்கரம் படைத்த `உயிரணை` நாவல்
- சிவ. ஆரூரன்

மு.பொன்னம்பலம் எழுதிய
சங்கிலியன் தரை நாவல்
- வரதன் குமார் -

சிதைவுறும் வாழ்க்கை :
கொரில்லாவால் நட்சத்திர அடிக்குறிப்பெழுதல்
-ந.மயூரரூபன் -


## ஈழத்து அரசியல் நாவல்கள் - 2 சிறப்பிதழ்

ஈழத்து அரசியல் நாவல்கள் சிறப்பிதழ் - 1, 2023 தை மாதம் வெளியாகி வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. ஈழத்து போராட்டம் தொடர்பான பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவை போராட்ட காலத்திலும் போராட்டத்திற்கு பின்னரும் வெளிவந்துள்ளன. போராட்ட காலத்தில் வெளி வந்த நாவல்களிலும் பார்க்க 2009 இன் பின்னர் பல நாவல்கள் வெளியாகியுள்ளன; தொடர்ந்து வெளி வந்த வண்ணமுள்ளன. இந்த நாவல்களில் உள்ள அரசியல் என்ன என்பதை அறிய எத்தனிப்பதோடு, உண்மைத் தன்மைகளையும் ஆராய்ந்து வெளியுலகிற்கு கொண்டு வர வேண்டும் என்பதே இத்தொடர் முயற்சியின் நோக்கமாகும். நாவல்களில் வெளிப்படும் பக்கச் சார்பு, பொய்யான பிரசாரங்கள், ஒற்றைப் பார்வை, வீணான பழிசுமத்தல்கள் என்பவற்றை இவ்வாறான விமர்சனங்கள் மூலம் கண்டறியலாம். யாருக்காக இந்த போராட்டம் ஆரம்பிக்கப் பட்டது? இந்தப் போராட்டத்தின் நோக்கம் என்ன? தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன? இந்த போராட்டத்திற்கான தீர்வு என்ன? இந்தப் போரினால் ஏற்பட்ட பாதிப்புகள் எவை? போன்ற பல்வேறு வினாக்களுக்கான விடைகளை பல நாவல்கள் வழி கண்டடைகின்றோம். சில நாவல்கள் வெறும் பழிசுமத்தல் நாவல்களாகவும் தமக்கு விருப்பற்ற தரப்புகள் மீது வசைபாடும் நோக்கிற்காக எழுதப்பட்ட நாவல்களாகவம் காணப்படுவதையும் இவ்வாறான விமர்சனங்கள் மூலம் கண்டு கொள்ள முடிகின்றது. மேலும் இந்த இதழில் மேலும் இரு நாவல்கள் பற்றிய கட்டுரைகளை சேர்க்க எண்ணியும் குறித்த நாவல்கள் பற்றி எழுதித்தருவதாக கூறிய படைப்பாளர்கள் இறுதி வரை தராத காரணத்தால் அவை விடுபட்டுள்ளன. மேலும் ஒரு சிறப்பிதழ் ஈழத்து அரசியல் நாவல் விமர்சன சிறப்பிதழாக வருமாயின் அவற்றையும் மேலும் சில நாவல்களையும் பற்றிய கட்டுரையை இணைக்கலாம்.

- க.பரணீதரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08 JUN 2023

# குணாகவியழகனின் நஞ்சுண்டகாடு - ஒரு பார்வை

■ கலாநிதி சு.குணேஸ்வரன் ■




தமிழ் மக்கள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக போருக்குள்ளே வாழ்ந்தவர்கள். அந்த வாழ்க்கைப்பாடுகளை ஈழத்துப் புனைகதைகள் விரிவாகப் பதிவு செய்துள்ளன. ஒருபுறத்தில் போரால் மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட சிதைவுகளும் மறுபுறத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட இருபுறத்தார் மீதான விமர்சனங்களும் ஈழ - புகலிடப் படைப்புக்களில் அதிகம் பதிவாகி யுள்ளன. பொதுவாகவே மக்களின் பக்கமிருந்து பொது எதிரியை விளித்து எழுதப்பட்ட புனைகதைகளும் அதிகமதிகம் வெளிவந்தன. விலகல்கள் எனும் போது தமிழ்ப் போராட்டக் குழுக்களின் அரசியல் முரண்பாடுகள், அமைப்புக் களின் தன்னிச்சையான அதிகாரப்போக்கை எதிர்த்து எழுதப்பெற்ற படைப்புக் கள் 80களின் இறுதியில் இருந்து அதிகம் வெளிவரத் தொடங்கியுள்ளன. புகலிடச் சூழலும் இதற்கு அதிக வாய்ப்பை ஏற்படுத்தியது. இன்னொரு புறத்தில் போராட்டத்தின் தேவை சார்ந்தும் அதன் அமைப்பு சார்ந்தும் உள்ளிருந்து எழுதப்பெற்ற படைப்புக்களும் வெளிவந்தன. அருளரின் லங்கா ராணி (1978), தா. பாலகணேசனின் விடிவுக்கு முந்திய மரணங்கள் (1986), மலரவனின் போருலா (1993) முதலான புனைவுகளை உதாரணமாகக் கூறலாம்.

இந்த அடிப்படையில் குணா கவியழகன் தான் சார்ந்த அமைப்புக்குள் இருந்துகொண்டு போராட்டத்தில் ஈடுபடுவோரின் பார்வையில் இந்நாவலை எழுதியுள்ளார். ஒரு கொள்கைக்காகத் தங்களைத் தியாகம் செய்வதில் எதிர்கொள்கின்ற இடர்ப்பாடுகள், அவர்களுக்கு இருக்கக்கூடிய வசதியீனங்கள் இவற்றைத் தாண்டித்தான் தம் வாழ்வைத் தியாகம் செய்கிறார்கள் என்பதை நாவல் காட்டுகிறது. விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட இளைஞர்களது குடும்பங்கள் அக்காலங்களில் பட்ட வாழ்க்கைப் பாடுகளைக் கருவாகக் கொண்டமைந்ததே நஞ்சுண்ட காடு. இது இவரது முதல் நாவ லாகும். இதற்குப் பின்னரும் தொடர்ச்சியாக வேறு நாவல்களை எழுதியுள்ளார்.

ஓர் அமைப்பைச் சார்ந்தோர் அதன் உள்விவகாரங்களை எழுதிய காரணத்தால் உயிர் அச்சுறுத்தலுக்கும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் ஆளானார்கள் என்பது நாம் அறிந்த வரலாறு. இதற்கு நல்ல உதாரணமாகக் கோவிந்தனைக் (புதியதோர் உலகம்) குறிப்பிடலாம். ஆனால் இது வித்தியாசமானது. இந்நாவலில் பிற்பகுதியில் கூறப்படும் மக்களின் வாழ்வு அதிகமும் ஈழப்படைப்பாளிகளால் பதிவாக்கப்பட்டமை நாம் அறிந்ததே.

இந்நாவல் 2004இல் "ஏணைப்பிறை" என்ற பெயரில் எழுதப்பெற்றது. 2006 இல் இதற்கொரு முன்னுரையை க.வே.பாலகுமாரன் எழுதினார். இந்நாவல் வன்னியில் உள்சுற்று வாசிப்பில் இருந்ததெனவும் ஒரு தகவல் உண்டு. பின்னர் தமிழ்நாட்டில் அகல் பதிப்பகம் 2014இல் முதற்பதிப்பைக் கொண்டு வந்தது.

நாவலின் முதற்பாதிக் கதைக்களம் விடுதலைப்புலிப் போராளிகளின் பயிற்சி முகாமாக அமைகின்றது. காடும் காட்டின் மத்தியில் அமைந்திருந்த முகாமும் விபரிக்கப்படுகிறது. போராட்டத்திற்குத் தம்மை அர்ப்பணம் செய்தவர்களின் அன்றாடப் பயிற்சி அனுபவங்களையும் கூறுகின்றது. மறுபாதி யில் வீட்டுச்சூழல் வருகின்றது. எவ்வகையான வீட்டுச்சூழலில் இருந்து இளைஞர்கள் போராட்டத்திற்கு வந்தார்கள். அவர்தம் பெற்றோரது கனவுகள் எவ்வாறாக இருந்தன? அக்குடும்பங்கள் அக்காலகட்டங்களில் எவ்வகையான வாழ்க்கைப் போராட்டங்களை எதிர்கொண்டார்கள், யுத்தத்திற்குப் பின்னரான சமாதான காலத்திலும் குடும்பங்களின் நிலைமை இன்னமும் மாற்றம் பெறவேயில்லை என்பது வரையான கதைகள் கூறப்படுகின்றன.

இந்நாவலின் கதைப்போக்கு 13 பேர் இயக்கத்தில் இணைவதற்காகக் கன்ரர் வாகனம் ஒன்றில் பயணம் செய்வதுடன் ஆரம்பிக்கின்றது. அவர்கள் காட்டுப்பாதையில் நடந்து செல்கிறார்கள். இயக்க முகாம் ஒன்று அங்கு அமைந்திருக்கின்றது. அங்கு அமைக்கப்பட்ட கொட்டில்களில் இருந்து கதையின் பெரும்பாகம் விரிகின்றது.

காலைக்கடன் கழிப்பதில் உள்ள வசதியீனங்கள், மரத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டு உரப்பைகளால் மறைப்புக் கட்டப்பட்ட தற்காலிக மலசலகூட வசதி பற்றி சொல்லப்படுகிறது. வந்தவர்களில் ஒருவன் எப்படியோ தப்பிவிடுகிறான். அவனைக் காடெல்லாம் தேடுகிறார்கள். கண்டு பிடிக்க முடியவில்லை. பயிற்சிக்காலத்தில் காவற்கடமை, சாப்பாடு, உரையாடல்கள், தண்டணைகள் யாவும் கூறப்படுகின்றன.

பயிற்சி முகாமை நிர்வகிப்பவர்கள் அதனை நடாத்துபவர்களது மனநிலைகள் பயிற்சி பெறுவர்களது மன எண்ணங்கள் போன்றவற்றை இந்நாவலில் அறியமுடிகின்றது. மறுபுறத்தில் போராளிகளின் குடும்பங்களின் நிலைப்பாடு பற்றிச் சொல்லப்படுவதிலும் போராட்டத்திற்கு வந்த பல இளைஞர்கள், வாழ்வில் பல ஏற்ற இறக்க அனுபவங்களைப் பெற்றவர்களாக வும் இருக்கிறார்கள். இதனாலேதான் முன்னுரையில் "ஏணைப்பிறை முழுவதும் ஒரு வலி பரவிக் கிடக்கின்றது. வாழ்வின் இருண்ட பக்கங்கள், வறுமை, இல்லாமை என்ற பெரும் துயர் இதற்குள் வாழத்துடிக்கும் மனிதர்கள் வெகு யதார்த்தமான பதிவுகளின் தொகுப்பாகின்றது" (பாலகுமாரன், முன்னுரை) என்று குறிப்பிடப்படுகின்றது.

இயக்க நடைமுறைகளை நாவலில் ஆங்காங்கே ஆசிரியர் கூறிச் செல்கிறார். அதற்கூடாகவே கதை நகர்ச்சியும் வளர்ச்சியும் ஏற்படுகிறது. இயக்கத்தில் சேர்ந்தவர்களுக்குப் பெயர் வைத்தல், இயக்கப் பொறுப்பாளர் பயிற்சியாளர்களை உற்சாகப்படுத்தி உரை நிகழ்த்துதல், இயக்க நடை முறைகள் பற்றி புதியவர்களுக்குச் சொல்லுதல் என நாவல் நகர்கிறது.

"இனி நீங்கள் சாதாரண ஆக்களில்லை. விடுதலைப் புலிகள், போராளிகள், வீரமும் தியாகமும் உள்ளவர்கள். பயிற்சி முடிந்து வெளியில் போனால் சனங்கள் உங்களை இயக்கப் பொடியள் போறாங்கள் என்று சொல்லுவார்கள்" (ப.23)

உரப்பையில் bag தைத்தல், பயிற்சியின்போது மரத்தாலான கொட்டன் களை துவக்குகளாகப் பாவனை செய்தல், அவற்றைத் தம்மோடு வைத்திருக் காத சந்தர்ப்பங்களில் தண்டனை பெறுதல், அரிக்கோன் லாம்பை "கையான்" எனக் கூறுதல், காவுதடி உதவியுடன் நீர் நிரப்பிய கான்களைத் தூக்கி வருதல், காற்சட்டையை வெந்நீரில் அவித்து அணிதல், கடுமையான பயிற்சிகளைச் செய்யாது மீறுவோர் தண்டனைக்கு உட்படுதல், (பயிற்சியின்போது மயங்கி விழுவதுபோல் நடித்த கோபிக்கு அடி விழுகிறது) காட்டில் புகைக்காத விறகாய் முதிரைக் கட்டையை எடுத்து எரித்தல், சங்கேதச் சொற்கள் ஆகியன இயக்க நடைமுறைகளாகக் கூறப்படுகின்றன.

இரவுக் காவலில் கொட்டில்களைச் சுற்றி வரும்போது எஸ்.எம். ஜி என்று சங்கேதச் சொல்லைச் சொல்லுதல், பதிலுக்கு பொருத்தமான அன்றைய சங்கேதச் சொல்லைச் சொல்லுதல் அல்லாவிடில் சந்தேகப்படுதல். "அன்றைக்கு ஒன்பதாம் அணியில கரடி போக சங்கேத மொழியைக் கேட்டிருக்கிறான் சென்ரிக்காரன். அது பேசாமற் போக திரும்பக் கேட்டிருக்கிறான். பிறகு விளங்கீற்று கத்திக்கொண்டு ஓடிற்றான்." (பக்.68)

பண்பான வார்த்தைப் பிரயோகங்களுக்கு மாறாக தூஷண வார்த்தை பேசியதற்காக தண்டனை வழங்கப்படுகின்ற சந்தர்ப்பமும் கூறப்படுகிறது. சுகுமார் தூஷணம் பேசியதற்காக இரவு சில மணித்தியாலங்கள் கேபிளில் ஏறி நிற்கும்படி பணிக்கப்படுகின்றான்.

"முதலில நல்ல பழக்க வழக்கங்களைப் பழகுங்கோ. சண்டியர் கூட்டத்தையாடா இயக்கத்தில வளர்க்கிறம். ஒழுக்கமில்லாத ஓர்மம் வீரமாடா? அதுக்கு வேற பேர் சண்டித்தனம், காடைத்தனம், றவுடித்தனம் எண்டுவரும். ஒழுக்கமுள்ளவனிட்ட ஓர்மம் இருந்தால்தான்ரா அது வீரம்" (ப.62)

ஏற்கெனவே கோவிந்தனின் "புதியதோர் உலகம்", ரவியின் "குமிழி" நாவல்களிலும் போராளிகளின் பயிற்சிக் களங்கள் விபரிக்கப்பட்டிருக்கின்றன. போராளிகளின் பயிற்சிக் காலங்களில் நித்திரைக்கு மிகக் குறைந்த நேரம் ஒதுக்கப்படுகிறது. நித்திரைக்கு நேரம் கிடைத்தல் பெரிய அதிஷ்டமென எண்ணுகிறார்கள்.

"இந்தப் பயிற்சி முகாமில் நித்திரை என்பது சாதாரண விடயமில்லை. இந்த உலகத்திலேயே ஆகப்பெரிய அதிஷ்டம் நித்திரையாகத்தான் இருந்தது. அதுவும் இப்பவெல்லாம் இரவில் "அலேட்" விசில் ஊதத் தொடங்கிற்றாங்கள். அதனால இரவில் விசிலுக்கு எழும்பி ஓடவேண்டியும் அதுக்காக அடிவாங்க வேண்டியும் குறித்த நேரத்தில் வராமை, பொருள் தவறியமை, என்றதுக்காக இரவுத்தண்டனை வாங்க வேண்டியும் இருந்தது. இந்தக் காலத்தில பார்த்தால் நித்திரை என்பது ஒரு வரம்." (பக். 40-41)

இவ்வாறான மிக நுட்பமான இயக்க நடைமுறைகள் இந்நாவலில் பதிவு பெற்றுள்ளன. ஒருவன் போராளியாக உருவாகின்றபோது எவ்வகையான பயிற்சிகளையும் மனநிலையையும் பெற்றிருக்க வேண்டும் என்பதும் இவற்றுக் கூடாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நாவலில் மிக அதிகமான பாத்திரங்கள் வந்தாலும் சுகுமாரும் அக்கா பாத்திரமும் மனத்தில் நிறையும்படி வார்க்கப்பட்டுள்ளனர். இவற்றுக்கு அடுத்ததாக கதைசொல்லி இனியவன் என்ற பாத்திரத்தைக் குறிப்பிடலாம்.

சுகுமார் மற்றவர்களுக்கு உதவக்கூடியவனாகவும் நியாயத்திற்குக் கட்டுப்பட்டவனாகவும் இருக்கின்றான். பயிற்சிக் காலத்திலேயே மற்றவர் களால் நேசிக்கப்பட்ட பாத்திரமாகவும் சில சந்தர்ப்பங்களில் தன்னையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்திக்கொண்ட பாத்திரமாகவும் வார்க்கப்பட்டுள்ளான். சக தோழன் ஒருவனுக்கு பயிற்சியின்போது காலின் காயம் ஏற்பட்டபோது பலவேளைகளில் அவனுக்கு உதவி செய்கிறான். இதனால் சிக்கல்களிலும் மாட்டிக்கொள்கிறான். இயலாத நண்பனுக்காகத் தண்ணீர் நிரப்புவதிலும் பங்கெடுக்கிறான், வேதநாயகம் மற்றொரு நண்பனை இழிவுபடுத்திக் கதைத்தபோது கோபம் கொண்டு வாய்த்தர்க்கம் புரிந்தபோதும் பொறுப்பாளர்களுக்கு குற்றம் செய்தவரைக் காட்டிக்கொடுக்காமல் நண்பர்களுக்காகத் தண்டனைகளைத் தானே ஏற்றுக்கொள்கிறான். இவ்வாறான பண்புடைய பாத்திரமாக சுகுமாரை ஆசிரியர் படைத்திருப்பார்.

இயக்கத்திற்கு வந்தவர்களிடம் பல காரணங்கள் இருக்கின்றன. புண் நாகேந்திரன் பாதருக்குப் படிச்சவன். அப்படிப்பை நிறுத்திவிட்டு இயக்கத்திற்கு வந்தவன்.

"அந்தத் துறவைவிடவும் இந்தத் துறவு அர்த்தமுள்ளதெண்டு நினைக்கத் தொடங்கினன். அது மக்களுக்காக எண்டால் இதுவும் மக்களுக்காகத்தானே, மலைப்பிரசங்கத்தில யேசு சொல்லுறார் கனி கொடாத மரங்களை வெட்டி நெருப்பில போடவேண்டும் என்று. இப்ப இந்த மக்களின்ர பாதுகாப்பு இப்ப உள்ள இளம் தலைமுறையின்ர கையிலதான். அதில நானும் ஓராளாய் இருக்கேக்க மலட்டு மரமா இருக்கேலாதுதானே? பாதிரிக்குப் படிச்சால் மக்களுக்கு ஆண்டவனைப் பற்றிப் போதிக்கலாம். இதில ஆண்டவன்போல அவர்களைக் காப்பாற்றலாம். இப்பிடியெல்லாம் யோசிச்சன். ஆசையப்பர் வாள் வச்சிருக்கேல்லையே சாத்தான்களை விரட்ட. நான் துவக்கு வச்சிருப்பன் சாத்தான்களை விரட்ட எண்டு நினைச்சன். வந்திட்டன்." *(பக்.111-112)*

சுகுமார் பெற்றோருடன் இருந்தபோது உழைப்பதற்கு எடுக்கும் பிரயத்தனங்கள் இக்கதையில் கூறப்படுகிறது. மரக்கறி வியாபாரம் செய்தல், சைக்கிள் கடையில் வேலை செய்தல், பத்திரிகை விநியோகம் செய்தல், சுருட்டுச் சுத்தச் செல்லுதல் ஆகியவை கூறப்படுகின்றன.

"நான் உழைக்கிறதுக்கு வழி தேடினன். சயிக்கில் கடையிலையும் நிண்டுகொண்டெல்லே ஒரு தொழிலத்தேடோணும். கடைசியில ஒரு மார்க்கம் பிடிபட்டிது. ஈழநாதம் பேப்பர் வைமன் ரோட்டில இருந்து வடமராட்சிக்குக் கொண்டுபோக ஆள் வேணுமெண்டு அறிஞ்சன். காலமை இருட்டோட மூண்டரைக்கு அங்க நிக்கோணுமாம். விடியிறதுக்க முன்னம் வடமராட்சிக்குக் கொண்டுபோய்க் குடுக்கோணும். ஒரு நாளைக்கு ஐம்பது ரூபா தருவாங்கள். ஈழநாதத்திற்குப் போய்க் கதைச்சன். அந்த வேலையைத் தந்தினம். வாய்ச்சுப்போச்சு, தொடக்கத்தில நாலைஞ்சு நாள் ஏலாமல்தான் இருந்திது. காலெல்லாம் செம வலி வலிச்சிது. மரக்கறி வியாபாரத்தை விட்டன். தூரத்துக்கு சயிக்கில் ஓடிப்போட்டு வந்து மரக்கறிகட்டத் தோதுவரேல்லை. இரவில சுருட்டுச் சுத்தப் போறபடியால் மரக்கறியை எடுத்துவைக்கவும் ஏலாது." *(ப.96)*

சுகுமார் தன்னைப் பற்றிக்கூறும்போது,

"மூன்றரைக்கு எழும்பினால் நல்லூர் வைமன் ரோட்டுக்குப் போய் பேப்பர் கட்டி வல்லைவெளியால் உழக்கி வடமராட்சிக்குப் போய், பிறகு வேகமாய் வந்து, சொல்லி வைச்ச இடத்தில மரக்கறி அல்லது தேங்காய் கட்டிச் சந்தையில குடுத்திட்டு பிறகு வந்து சைக்கிள் கடையில நிண்டு மாய்ஞ்சு பொழுதுபட திரும்பி சுருட்டுக் கொட்டிலுக்குப் போய்ப் பத்துப் பதினொண்டு வரைக்கும் வேலை செஞ்சு படாத கஷ்டப்பட்டன்" *(ப.100)*

தான் ஏன் இயக்கத்துக்கு வந்தேன் என்பதனை பின்வருமாறு கூறுகிறான்.

"நீ யோசிச்சுப்பார். ஆனையிறவுத் தோல்விக்கு அடிப்படவனே காரணம். அடிபடப்போகாதவன்தான் காரணம். சண்டைக்குப் போனதாலேயோ அறு நூறுபேர் செத்தவங்கள். நாங்கள் சண்டைக்குப் போகாததாலதான் செத்தவங்கள். வாழ்க்கை அவலங்களுக்குச் சிங்களவனோ காரணம்? நாங்களுந்தான் காரணம். இப்பிடியெல்லாம் யோசிக்க இருக்கேலாமல் போயிட்டுது." *(ப.113)*

இந்நாவலில் வருகின்ற அக்கா பாத்திரம், சுகுமார் தன் கதையைச் சொல்லி விட்ட இடத்திலிருந்து தொடர்வதாக அமைந்துள்ளது. அக்கா தன் குடும்பத்திற்காகப் பாடுபடுகிறாள். குடும்பத்தின் மீது அக்கறையுடன் செயற்படுகிறாள் என்பது மட்டுமல்ல, அந்தக் குடும்பத்தின் இன்பங்களையும் துன்பங்களையும் சுமந்து கொண்டிருக்கும் சாட்சியாக இருக்கிறாள். கனவுச்சிறையில் ராஜி என்றொரு பாத்திரத்தை தேவகாந்தன் படைத்திருப்பார். கோசலையில் அம்மா என்றொரு பாத்திரத்தை ரஞ்சகுமார் படைத்திருப்பார். குணா கவியழகன் இங்கு அக்கா என்ற பாத்திரத்தைப் படைத்திருக்கிறார். இந்தப் பெண்கள் எல்லாம் வரலாறு முழுவதும் வந்துகொண்டுதான் இருக்கிறார்கள். குடும்பங்களின் சுகங்களை, துக்கங்களை, இயலாமைகளை, ஏக்கங்களைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள்.

"நாலு பொடியளுக்கு ஒரேயொரு பொம்பிளைச் சகோதரம் அக்கா. அதால அக்காவிலதான் பாசம். அவளுக்கும் என்னில பாசம்தான். சைக்கிள் கடைக்காரன் தொடக்கத்தில முப்பதுரூபா தருவார். சொந்தமா உழைச்சதில அதே பெரிய காசாத்தான் இருந்திது. தம்பியாக்களுக்கு கொப்பி பென்சில் எண்டு எதிலும் குறைவிடுறதில்லை. அம்மாட்டக் காசைக் குடுப்பன். கொஞ்சநஞ்சம் வாற சில்லறைக் காசை அக்காட்ட உண்டியலுக்க போடக் குடுப்பன். அதுக்கு உண்டியலுக்குப்போட காசு குடுத்தா படு புழுகம். அது ஆறாம் வகுப்போட பள்ளிப்படிப்பை விட்டு. அம்மா சந்தைக்குப் போறதால சமையல் வீட்டலுவல் எல்லாம் அக்காதான். அக்கா கோழி வளத்திது. முட்டை விற்கும். எனக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரகசியமா அவிச்சுத்தரும். சிலவேளை அதை நான் இரகசியமா தம்பியாக்களுக்குப் பாதிபாதி குடுப்பன். என்ர உழைப்புப் பெரிய உழைப்பில்லை. ஆனாலும் இப்ப குடும்பத்தில மத்தியானச் சாப்பாடு, இரவுச் சாப்பாட்டுக்குப் பஞ்சமில்லை. காலமையில தம்பியாக் களுக்கு ஒவ்வொரு சங்கிலிபணிஸ் அக்கா குடுக்கும். ஆடு வளர்த்தம். ஆட்டுப்பாலில ஒரு தேத்தண்ணி. அதுதான் மற்றாக்களுக்குச் சாப்பாடு, பழசு ஏதாவது மிஞ்சியிருந்தால் அதக் குழைச்சு ஒரு திரளை தின்னுவம்." (ப.73)

அக்காவுக்கு நல்ல சட்டை வாங்கிக் கொடுக்கவேண்டும் என்ற விருப்பத்தில் கடைக்கு அழைத்துச் செல்கிறான். ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த பெண்ணுக்கு எத்தனை ஆசைகள் இருந்தும் வாங்குவதற்குப் பணப் பற்றாக்குறை இருக்கும். அந்த நினைப்பை முகம் காட்டிக்கொள்ளாது.

"நான் வியந்து பாக்கிறதுபோல பாத்து, நீ பாத்த சட்டைக்குள்ள இதுதான் நல்லாயிருக்கடி. உனக்கு போட நல்லா அமைஞ்சு வரும் எண்டன். கடைசியில அக்கா அந்தச் சட்டையை வேண்டுறதாக முடிவெடுத்திச்சு. அதுக்குள்ள மேல ஒரு பொம்மையில போட்டு வைச்சிருந்த எடுப்பான சட்டையை அக்கா பிடிச்சுப் பிடிச்சுப் பாத்துக்கொண்டிருந் திச்சு. கடைக் காரன் எடுத்த சட்டைய பையில போட்டுக்கொண்டிருக்க. அக்கா இதப்பிடிச்சு வைச்சுக்கொண்டு கேட்டிச்சு, கடைசி தொளாயிரம் போடமாட்டியளோ எண்டு. எனக்குத் தூக்கி வாரிப் போட்டுது, இதுகிட்ட எங்கயாம் இப்ப தொளாயிரம். அவன் இல்லைத்தங்கச்சி ஆயிரத்து நூறுக்குக் குறையாது. எண்டிட்டான். பையில போட்டுத்தந்த சட்டைக்கே பில் போட்டான் கடைக்காரன். அறுநூற்றி இருவத்தஞ்சு ரூவா. எடுத்த சட்டையைப் வாங்கீற்றுப் படியிறங்கிறன். அக்கா அந்தச் சட்டையப் பிடிச்சுப் பாத்துக் கொண்டிருக்கு. பிறகு நான் கூப்பிட இறங்கி வந்திது, உனக்கு அந்தச்சட்டை பிடிச்சிருக்குப்போல எண்டன். ஓமடா திறமான சட்டை. ஆனா, உந்த விலைக்கு வாங்கேலுமே. எண்டிச்சு. முதலே பாத்திருந்தா அப்பற்ரைய வாங்காமல் இத வாங்கியிருக்கலாம் எண்டன். சீ. அப்பாவைப் பரியாரியிட்ட கூட்டிக்கொண்டு போய் வாறது. மாத்துறதுக்கு சாறமுமில்லை. அவருக்குக் கட்டாயம் வாங்கத்தான் வேணும். அக்கா சொல்லிச்சு. (ப.94)

எமது சொந்த வாழ்வில் நடக்கின்ற யதார்த்தபூர்வமான சம்பவமாக இக்காட்சி அமைந்திருக்கின்றது. அவள் தன் குடும்பத்தவர்களில் வைத்திருக்கக் கூடிய அன்பும் அக்கறையும் தனக்குரிய தேவையைக்கூட தன் குடும்பத்தவர் களுக்காகப் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்களும் காட்சிப் படிமமாக வேறு இடங்களிலும் இந்நாவலில் விரிகின்றன. இவ்வாறான கதை சொல்கின்ற நடையை பல படைப்பாளிகள் அழகாக எடுத்தாண்டுள்ளார்கள். நான் மீளவும் மீளவும் வியப்பது அ. முத்துலிங்கத்தின் உண்மை கலந்த நாட்குறிப்புகளிலும் அ.இரவியின் காலமாகி வந்த கதைகளிலும்தான். இவ்வாறான கதைசொல்லல் நடை குணா கவியழகனை ஒரு தேர்ந்த படைப்பாளியாகக் காட்டுகிறது.

தகப்பன் பற்றிக் கூறும்போது,

"அப்பாக்கு இன்ன வேலையெண்டு இல்லை. கூலிவேலைக்குப் போவார். சுருட்டுச்சுத்தப் போவார். மனிசன் குடியும். ஊரில செத்தவீடெண்டால் பட்டினத்தார் பாட்டுப்படிக்க இவரைத்தான் கூப்பிடுறது. இப்ப அவருக்கு ஏலாது. பாரிசவாதத்தில கால் இழுத்திட்டுது. மூத்தது அக்கா. மற்றது அண்ணா. இரண்டு தம்பி சின்னாக்கள். அண்ணை பொறுப்பில்லாதவன். ஊர் சுத்துறதுதான் தொழில். நான் படிச்சுக் கொண்டிருந்தன். அம்மா சந்தையில காய்கறி வித்தா. கொஞ்ச வருமானம். சாப்பிடுறதே பெரும்பாடு. அதில் படிக்கிறதென்னெண்டு. நான் பின்நேரத்தில சைக்கிள் கடையில உதவிக்கு நிண்டன். வகுப்பில பத்துக்கும் இருவதுக்கும் இடையில வருவன். அதுக்கு மேல வர ஏலாது. பணமில்லை. அதனால் ரீயூசனில்லை. பணமில்லை. அதனால வீட்ட படிக்கவும் மனமில்லை. பணமில்லாததால படிப்பு ஒரு பிரச்சினையாயுமில்லை. வீட்டில அதவிடப் பெரிய பிரச்சினைகள் முக்கியமானதாக இருந்திருக்கு." (ப.72)

தாயார் பற்றிய நினைவு வருகிறது. சென்ற முதல்நாளே கொட்டிலில் உறங்கியவாறு இனி இதுதான் நிலைமை என்று எண்ணுகிறான். "கால்மாடு போர்த்துவிட அம்மா இல்லை. இனிமேல் அம்மாவும் இல்லை. போர்வையு மில்லை. நினைக்க நெஞ்சின் இடப்புறத்தினுள் மிகச் சிறிய சைக்கிள் போல்ஸ் அளவில் ஓடியதுபோல் ஏதோ இருந்தது." (பக்.17) என்ற தொடக்கம் கதை சொல்லி பாத்திரத்தை அறிமுகப்படுத்துகின்றது. இந்நாவலில் சுகுமார், மற்றும் சுகுமாரின் அக்கா ஆகியோரின் கதைகளே நாவலில் அதிகம் பேசப்பட்டாலும் இயக்கத்திற்கு வந்த பல இளைஞர்களின் குடும்பங்களின் நிலைமைகளும் பதிவாகியுள்ளன. அவ்வாறாக, அம்புறுசு என்ற இளைஞன் தனது கதையைச் சொல்லும்போது...

"வீட்டில பயங்கரக் கஸ்ரமடா. அப்பன் பயங்கரக் குடிகாரன். தொழிலென்று ஒண்டுமில்லை. எங்கயாவது கூலிக்குச் சிலநேரம் போவார். கிடைச்ச காசைக் கொண்டு போய்க் குடிப்பார். வீட்ட ஒவ்வொரு நாளும் வாறதெண்டு மில்லை. இரண்டு அக்காக்கள், அவையும் வீட்டிலதான். ஒரு தம்பியும் தங்கச்சியும் சின்னாக்கள். ஒரு நாளைக்குக் கஞ்சி குடிக்கிறதே பெரியபாடு. அக்கா நீத்துப்பெட்டி இழைக்கும், அதை விக்கிறதென்றாலும் பெரும்பாடு. எங்க விக்கிறது. பக்கத்துக் கடைக்குக் கொண்டு போனால் இரண்டு ரூபா ஒரு ரூபா என்றுதான் கேப்பாங்கள். சீவியம் பெரிய கஸ்ரம்."

"நான் மரக்காலை ஒன்றில் விறகு கொத்தப் போறனான். தூக்குக்கு இருபத்தஞ்சு ரூபா. பழக்கமில்லைத்தானே. இரண்டு தூக்குத்தான் கஸ்ரப்பட்டுக் கொத்துவன். அதுவும் ஒவ்வொரு நாளும் வேலையில்லை. விறகு முடிஞ்சாத்தான் முதலாளி கூப்பிடுவார். ஒவ்வொரு நாளும் காலமையில போய்ப் பார்ப்பன். விறகேத்த வாறாக்கள் சிலருக்கு ஏத்திவிட்டால் ஐஞ்சு ரூபா குடுப்பினம் கிட்ட உள்ள உத்தியோகக்காரர் சிலர் வந்தா முதலாளி சொல்லுவார். "அவனுக்கு பத்தது ரூபா குடுங்கோ வீட்ட கொண்டு வந்து போடுவான்" என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் சம்மதிப்பினம். ஐஞ்சு ரூபா தாறதெண்டும் சொல்லுவினம். மயிலிட்டியில இருந்து இடம்பெயர்ந்த பிறகு உரும்பிராய் அகதி முகாமுக்கு வந்து இப்பிடித்தான் சீவியம். ஒவ்வொரு நாளும் உலை கொதிக்க வைக்க உலகப் படாதபாடு. அவனுக்கு மீண்டும் கண்ணில் நீர் முட்டியது. கொஞ்ச நேரம் சும்மாயிருந்தான். நாங்கள் ஒன்றும் கதைக்கேல்ல. கொட்டில் முழுவதும் நிசப்தம்" *(பக்.59-60)* என்று உணர்வுபூர்வமாக இந்நாவலில் பதிவாகியுள்ளது.

இந்நாவலில் சமூக விமர்சனம் என்பது குடும்பங்களின் நிலைமை பற்றிச் சொல்லும்போது வெளிப்படுகிறது. மனிதர்களின் சுயநலமும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் இங்கு சொல்லப்படுகின்றன. மனிதர்கள்தான் இந்த வாழ்க்கையைப் பொல்லாதது ஆக்கியிருக்கிறார்கள். மற்றவர்களுக்கு உதவி செய்வது மனிதத்தனம் என்பதற்குப் பதிலாக புண்ணியம் என்றுதான் சொல்லி வைக்கிறார்கள். அதனால் சுயநலமும் வந்து ஒட்டிக் கொள்கிறது.

"ஒருத்தன் கஷ்ரப்பட்டால் அவனுக்கு உதவி செய்! இருக்கிறவன் இல்லாதவனுக்குக் கொடு! எழும்பி நிக்கிறவன் விழுந்தவனைத் தூக்கு! எண்டு சொல்லிக் குடுக்கமாட்டாங் களாம். ஏனிதுக்குள்ள புண்ணியத்தைச் சேர்த்து அதை யாவாரம் ஆக்கிறாங்கள். மனிசனை எதில கூடுதல் லாபம் எண்டு அலையப் பழக்கிறாங்கள். மனிசத்தனத்தை யாவாரம் ஆக்கிப்போட்டாங்களே! தாய் பிள்ளைக்குப் பால் குடுத்தால் தாய்க்குப் புண்ணியம் எண்டா சொல்லிக் குடுக்கிறியள். இல்லையே. தாய்மை எண்டுதானே சொல்லு றியள். அதுமாதிரி இருக்கிறவன் இல்லாதவனுக்கு குடுக்கிறது மனிசத்தன மெண்டாவது சொல்லுங்களன். தாய்மை எண்டது மகத்துவம் ஆனதுபோல மனிசத்தனமெண்டதும் மகத்துவமானதா ஆகட்டுமே... நான் உறைந்து போய் இருந்தேன். குற்ற உணர்வு ஒருபுறமும் மறுபுறம் ஏதோ முடிச்சுக்கள் அவிழ்வதாயும் இருந்தது." *(ப.88)* இவ்வாறு கதை சொல்லி குறிப்பிடுவது சமூகம் தொடர்பான விமர்சனமாக உள்ளது.

ஈழக்கதைகளின் தனித்துவத்தில் ஒன்றாக மொழிநடையைக் குறிப்பிடலாம். இந்நாவலிலும் சில பிரதேச வழக்குச் சொற்கள் வருவதை அவதானிக்கலாம். நக்கல், மண்டுதல், தலைமாடு, கால்மாடு, சொட்டைத்தனம், புருடாவிடுதல், முறாளாய் இருக்கோ முதலானவை தமிழ்நாட்டு வாசகர் களுக்கு புரிதற் சிக்கலை ஏற்படுத்தக்கூடும். டானியலின் எழுத்துக்கள் தமிழ் நாட்டு வாசகர்களிடத்தில் இவ்வாறான சிக்கல்களை ஏற்படுத்தியவை மனங் கொள்ளத்தக்கது. ஆனால் உயிர்ப்பான அந்த வார்த்தைகள் கதையோட்டத்தில் வருவதே சிறப்பானது.

இலக்கியச் சிறப்புமிக்க நடையினையும் ஆங்காங்கு வெளிப் படுத்தி யிருப்பார். இவை நாவலின் அழகியல் உணர்வை எடுத்துக்காட்டு கின்றன.

"கத்தியால் வெட்டியெடுக்கக்கூடிய இருள்" *(ப.15)*

"வானத்தில் நிலவு ஏணைமாதிரித் தூங்குது. இதில் ஏறிப்படுக்க எத்தனை பேருக்குத் தெரியும்?" *(ப.66)*

"வானம் மனசுக்கு இதமான ஒரு விடயமில்லையா? இளகின மனங்களுக்குத்தான் அப்பிடி அதிகப் பணம் உள்ளவர்களுக்கு அப்படியில்லை" *(ப.66)*

இதேபோல் வர்ணனைப் பகுதி ஒன்றையும் எடுத்துக்காட்டலாம். முகாமில் வரிச்சு மட்டையால் அமைக்கப்பட்ட இருக்கையிலிருந்து இரவு வானத்தைப் பார்த்தபடி நண்பர்கள் உரையாடுகிறார்கள். இதனாலேயே ஆரம்பத்தில் ஏணைப்பிறை என்ற தலைப்பை குணா கவியழகன் இந்நாவலுக்கு வைத்திருக்கவேண்டும்.

"வளர்பிறை அற்புதமாய் குழந்தையின் ஏணைபோலத் தெரிந்தது. எல்லாரையும் தாலாட்ட வானம் ஏனோ ஏணை கட்டி வைத்திருக்கிறது. குழந்தையின் பராக்கிற்காக மின்மினிகள் எண்ணி முடித்திடவா முடியுமதை? மின்மினிகளை ஒளித்து விளையாட்டுக் காட்டுகின்றன வெண்முகில்கள். அவற்றை அள்ளிக் கையில் சுற்றிக்கொண்டால் அருமையாக இருக்கும் போலயிருக்கிறது. வாழத்தெரிந்தவன் அந்த ஏணையில் படுத்துப் பரவசம் அடையலாம். யார் வேண்டுமானாலும் எத்தனைபேர் வேண்டுமானாலும் எங்குள்ளவர் வேண்டுமானாலும்..." *(ப.65)*

புதிய கதைக்களத்தையும் மக்களின் கதைகளையும் மட்டுமெல்லாமல், பிரதேச வழக்குச் சொற்களையும் அழகியல் உணர்வுபூர்வமான சொற்றொடர் களையும் பொருத்தமான வர்ணனைகளையும் பயன்படுத்தியுள்ளமை நாவலோடு வாசகரை ஒன்றிக்க வைத்துள்ளது.

எனவே, ஒரு போராட்ட அமைப்புக்குள் இருந்து எழுதப்பட்ட படைப் பாக நஞ்சுண்ட காடு அமைந்திருக்கின்ற அதேநேரம் மக்களின் வாழ்வியல் துன்பியற்பாடுகளும் அப்போராட்டத்திற்குத் தம்மை அர்ப்பணித்த இளைஞர் களின் பார்வையிலிருந்து முன்வைக்கப்பட்டுள்ளது. அமைப்பு சார்ந்து எழுதும்போது அமைப்பின் கொள்கைகளைப் பிரச்சாரப்படுத்துவதாகவோ ஏனைய அமைப்புக்களின் குறை குற்றங்களைப் பூதாகரமாக வெளிப்படுத்துவ தாகவோ அமையாமல் வாழ்க்கைக் கோலங்களை எமது வாழ்வனுபவங் களுக்கு மிக நெருக்கமாக யதார்த்தபூர்வமான படைப்பாக குணா கவியழகன் தந்திருக்கிறார். இதனாலேயே "நஞ்சுண்டகாடு முழுவதும் ஒரு வகையான நெருஞ்சிமுள்வலி பரவிக் கிடக்கின்றது." (என். செல்வராசா, ஒரு போரிலக்கிய நாவலின் உயிர்மீட்பு, 22 ஒக் 2015) என்று குறிப்பிடப்படுகிறது. போருக்குள்ளான வாழ்வையும் வாழ்வதற்கான தியாகத்தையும் நஞ்சுண்டகாடு வாசகர் மனங்களில் நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கிறது. •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கைஆழியானின் மனக்குமுறல் "ருத்திர தாண்டவம்" நாவல்

■ இன்பமகன் ■




01. அறிமுகம்

க.குணராசா என்ற அறிவு ஜீவியும் கல்விமானுமாகிய செங்கை ஆழியான் அவர்கள் ஈழ நாவல் இலக்கியத்திற்கு முகவரி கொடுத்த எழுத்தாளர்களில் முதன்மையானவர். வரலாற்று நாவல், சமூக நாவல், நகைச்சுவை நாவல், போர்க்கால நாவல் என அனைத்து வகை நாவல்களையும் படைத்த பெரும் படைப்பாளி. வன்னி மண்ணின் தரைத் தோற்றத்தையும் வாழ்வியலையும் பற்றி இவர் எழுதிய நாவல் மூலமே நான் முதன் முதலான வன்னி மண்ணோடு உலாவியிருக்கிறேன். நான் வியந்து பார்த்த ஒரு நாவலாசிரியர்.

2009 இல் வெளியாகியிருக்கும் செங்கை ஆழியானின் "ருத்திர தாண்டவம்" என்ற நாவலுக்கு கருத்துரைக்குமாறு ஜீவநதி ஆசிரியர் திரு.க.பரணீதரன் அவர்கள் கோரிய வேளை நான் மகிழ்ச்சியுடன் உடன் பட்டேன். ஒரு வாசகனாக அந் நாவலைப் படிக்கும் போது நான் மிகவும் அலைக் கழிந்தேன். "அதனைப் படைத்தவர் செங்கை ஆழியானா என எண்ணும் அளவிற்கு அதில் போதாமை" காணப்பட்டது.

02. கதைச் சுருக்கம்

நாவலானது நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

*1. முன் நிகழ்வு (பக்கம் 1 -9)*

சுமார் ஆயிரம் ஆண்டின் முன் நிகழ்ந்த கலிங்க மாகனின் படையெடுப்பு பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. அந்த மாகன் வன்னியிலிருந்த சிங்களவரை தெற்கு நோக்கி விரட்டியடிக்கிறான். இப்போது அது மாறி நிகழ்கிறது. சிங்கள இராணுவம் தமிழர்களை விரட்டியடிக்கிறது.

*2.முதலாம் பாகம் - துர்க்கை (பக் 10 - 108)*

சத்தியன் என்கிற இளைஞன் யாழ்ப்பாணம் நரிக்குண்டு எனும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகளால் வெள்ளை வானில் கடத்தப்படுகிறான். தொழில் நிமித்தம் சத்தியனின் பெற்றோர் நிக்கவரெட்டியவில் குடியேறியிருக்கின்றனர். அங்கு பிறந்து வளர்ந்த சத்தியன் யாழ்ப்பாணத்தில் வாழும் பேரர்களைக் காண வந்திருக்கிறான். கடத்தப்பட்ட சத்தியனை கிளிநொச்சிக்குக் கொண்டு சென்று சித்திரவதை செய்து இயக்கத்திற்கு இணைக்கும் இணக்கத்தைப் பெறுகின்றனர்.

சத்தியனின் பேத்தி சின்னம்மா பேரனைத் தேடி யாழிலுள்ள புலிகளின் முகாம் அனைத்திற்கும் ஏறியிறங்கி, இறுதியாக கிளிநொச்சி வருகின்றார். விடத்தல் தீவு முகாமில் சத்தியன் இருப்பதாகக் கூறப்படுகின்றது. சின்னம்மா வெள்ளாங்குளத்திலிருக்கும் ஒன்றுவிட்ட தம்பி முருகேசுவின் வீட்டில் தங்குகிறார். பேரனைச் சந்திக்காது ஊர் திரும்புகிறார். முருகேசுவின் குடும்பம் கதைக்குள் வருகிறது. மூத்த மகன் மாணிக்கராசா நீர்ப்பாசனத் திணைக்களத்தில் சாரதியாக இருக்கிறான். அம்பன் குள முறிப்பைச் சீர் செய்ய ஒரு குழு நீர்ப்பாசனத் திணைக்களத்திலிருந்து வெள்ளாங்குளம் வருகின்றது. அவர்களில் ஒருவனான மணிசேகரன் (TO) முருகேசுவின் மூத்த மகளான மைதிலி மேல் மையல் கொள்கிறான். விடத்தல் தீவில் ஈராண்டுகளாகத் தங்கியிருக்கும் சத்தியனுக்கு மைக்கல் என்ற இளைஞனோடு காதல் ஏற்படுகிறது. மைக்கலின் தங்கை சுகந்தி மேல் காதல் ஏற்படுகிறது. முருகேசுவின் இளைய மகன் தனசேகரன் இயக்கத்திற்குப் போகிறான். வெள்ளாங்குளம் காளியம்மன் கோயில் திருவிழாவில் விமானக் குண்டு வீச்சு நடாத்தப்பட்டு, முருகேசு உள்ளிட்ட பலர் பலியாகின்றனர். வேறொரு நாள் அங்கு எறிகனை, கிபிர் தாக்குதல்கள் நடாத்தப்பட மக்கள் இடம் பெயர்கின்றனர். மைதிலி இளைய சகோதரிகளோடு துணுக்காய்க்கு இடம் பெயரும் போது தனியன் யானை ஒன்று குறுக்கிடுகிறது. பாதை மாறிய இளைய சகோதரி சுமதி நாச்சிக்குடா வந்து சேர்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இரண்டாம் பாகம் - கூத்தன் (பக்கம் 109 - 166)

சுமதி மைக்கலை நாச்சிக் குடாவில் சந்திக்கிறாள். மைக்கல் தன்னைப் பற்றி சுமதிக்குக் கூறுகிறான். அவர்கள் படகு மூலம் இந்தியா செல்கின்றனர். கியூபிரிவு பொலிஸார் அவர்களை விசாரணைக்கு உட்படுத்துகின்றனர். ஒரு சீக்கிய அதிகாரியால் சுமதி வல்லுறவுக்கு உட்படுத்தப்பட, அவள் கர்ப்பமாகிறாள். பிறந்த குழந்தையை தன்குழந்தையென மைக்கல் ஏற்கிறான். அதே வேளை சத்தியன் சண்டைக்குப் போகிறான். மலருக்கும் மைத்துனன் மகேந்திரனுக்கும் திருமணம் நடக்கிறது. மைதிலி இயக்கத்தில் இணைகிறாள். போரில் ஒரு காலினை இழக்கிறாள். அப்போதும் மணிசேகரன் அவள் மீது காதல் கொள்கிறான். மைக்கல் சுமதி, மகன் பிரதீபனோடு மூன்றாண்டுகளின் பின் படகேறி ஊர் திரும்புகின்றனர். சத்தியன் முல்லைத்தீவிற்கு மாற்றப்படு கிறான். சுகந்தி இயக்கத்தில் இணைகிறாள்.

4. மூன்றாம் பாகம் - தாண்டவம் (பக்கம் 167 238)

நந்திக்கடல் மேற்கே சாள்ஸ் பேஸ் இருக்கிறது. அதன் பொறுப்பதிகாரி யாக சத்தியன் நியமிக்கப்படுகிறான். அங்குள்ள பங்கர்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை அவன் ஏதொவொரு வகையில் விடுதலை செய்கிறான். டொலர் பாமிலிருந்து செம்மலை நோக்கி படையினர் முன்னேற முற்பட அங்கு ஒரு போர் இடம் பெறுகிறது. படையினரில் மூவர் சத்தி யனிடம் சிக்குகின்றனர். அவர்களில் அவனது நிக்கவரெட்டிய நண்பன் அமரதாஸவும் ஒருவன். வன்னேரிக்குளத்தில் தனசேகரன் சாவடைகிறான். அமரதாஸவை சத்தியன் விடுவிக்கிறான். இறுதிப் போரில் சத்தியன் காயமடைகிறான். ICRC கப்பலில் மக்கோடு மக்களாக அவனும் திருகோண மலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறான். அவனைப் பார்வையிட வரும் தாய் தந்தையர் அவனது தங்கை மாலினியை அமரதாஸ விரும்புவதாகக் கூறு கின்றனர். அவன் உடன்படுகிறான். முள்ளிவாய்க்காலிலிருந்து மணிசேகரன், மகேந்திரன், மலர், சுமதி என அனைவரும் நந்திக் கடல் கடந்து படையினர் பகுதிக்கு வருகின்றனர். இறுதியாக சத்தியனைப் புனர்வாழ்வு முகாமிற்குக் கூட்டிச் செல்கின்றனர். சுகந்தி கண்கலங்கப் பார்த்துக் கொண்டு நிற்கிறாள்.

03. கதை நிகழும்களமும் காலமும்

இந்நாவலில் கதை நிகழும் களமும் காலமும் பல இடங்களில் முரண்பட்டுக்கிடக்கின்றன. உண்மைச் சம்பவங்களைப் பதிவிடும் போது கூட அவை நிகழ்ந்த காலங்கள் தவறாகப் பதிவிடப்பட்டுள்ளன. ஒரு போர்க்கால நாவல் எழுதப்படும் போது அவற்றில் குறிப்பிடப்படும் சம்பவங்கள் அக்காலச் சூழலுக்கும் பொருந்திப் போக வேண்டும். அரச படையினரின் அல்லது விடுதலைப் புலிகளின் பெயரிடப்பட்ட படை நடவடிக்கைகள், போர் வழிமுறைகள் பயன்படுத்தப்படும் ஆயுதங்களின் வகைகள் போன்றன காலப்பதிவுகளாக அமையும். எடுத்துக் காட்டாக ஈழப் போராட்டத்தில் அரச விமானப் படையினர் பயன்படுத்திய போர் விமானங்களை எடுத்துக் கொள்ளலாம். 1980 - 1990 காலப்பகுதியில் SIAI Marchetti, SF 260 (குருவி பொம்மர்) விமானங்கள் குத்திக் குண்டு போடும். Bell- 212 உலங்கு வானூர்தியில் "பெல்ஜியம் ஐம்பது கலிபர்" இயந்திரத்துப்பாக்கி பொருத்த பட்டுதாக்குதல் செய்யப்படும். மேலும் AVRO, Y-8, Y-12 போன்ற சரக்கு விமானங்கள் மூலமும் குண்டுகள் போடப்பட்டன. வான் பரப்பில் இவற்றின் நடமாட்டத்தை விடுதலைப் புலிகள் நிறுத்தியதும், 1993 இல் புக்காரா (Pucara) விமானம் அறிமுகம் செய்யப்பட்டு, அதிலிருந்து றொக்கட்டுக்கள் வீசப்பட்டன. அந்த வகை விமானமும் சுட்டு வீழ்த்தப்பட்டதோடு 1996 இல் கிபிர் (Kfir)என்ற மிகையொலி தாரை விமானம் அறிமுகம் செய்யப்பட்டது. இறுதிப் போரில் Kifir, Mic வகை விமானங்கள் பயன்படுத்தப்பட்டன.

ஒரு கதையில் ஒரு குறிப்பிட்ட வகை விமானம் பயன்படுத்தப்படுவது காட்டப்பட்டால் வாசகனும் அக்காலச் சூழலுக்குள் வந்துவிடுவான். இந் நாவலில் சத்தியன் என்ற பாத்திரமே முதன்மைப் பாத்திரமாக அமைகிறது. அப் பாத்திரம் கதையில் எவ்வாறு இயங்குகிறது என்பதை மேற்படி விளக்கத்தோடு அணுகலாம். யாழ்ப்பாணத்தில் சத்தியனை விடுதலைப் புலிகள் கடத்தும் போது அவனுக்கு எத்தனை வயது? அச் சம்பவம் நிகழ்ந்தது எக் காலப்பகுதி யில்? மேற்படி இரு வினாக்களுக்கும் நாவலில் விடை கிடையவே கிடையாது.

அனுமானம் - 1

//எனக்கு இப்ப 29 வயது. ஆச்சி, அப்புவைப் பார்க்க யாழ்ப்பாணம் வந்தேன். வெள்ளை வானில் வந்து வலுக்கட்டாயமாகப் பிடித்துச் சென்றார்கள். //(பக் - 221) இவ்வாறு 2009 இல் சத்தியன் இராணுவத்தினரிடம் கூறுகிறான். இதன்படி அவன் பிறந்த ஆண்டு 1980 என்றாகிறது. // ஓ.எல் எடுத்துவிட்டு இந்த ஆண்டு தான் நூல்களுக்கு ஓய்வு கொடுத்தார்கள்...// (பக் - 14) 1996ல் ஓ.எல் எடுத்துவிட்டு கப்பலில் யாழ்ப்பாணம் வருகிறான். அது ஒரு மழைகாலம், சமாதான காலம் என கதையில் கூறப்பட்டுள்ளன. சமாதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி? யாழ் குடா நாடு பூராகவும் அரச கட்டுப்பாட்டில் இருந்தது. கிளிநொச்சி ஒரு போர்ப்பிரதேசம். புலிகள் எப்படிக் கடத்தினார்கள்?

அனுமானம் - 2

சத்தியன் கட்டாயப் போராளியாக்கப்பட்டு விடத்தல் தீவு முகாமிற்கு அனுப்படுகிறான். //ஒரு ஏ.கே ஏந்தி ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அவன் சண்டையில் ஈடுபட்டான்... 1990களில் அரிப்புத் தாக்குதல் நடந்தது. அத் தாக்குதலுக்கு ஒரு போராளியாக சத்தியன் அனுப்பப்பட்டான்//(பக் - 130) அரிப்புத் தாக்குதல் 19.03.1991 அன்று நடைபெற்றது. கதையின் படி அப்போது சத்தியனின் வயது11. அவன் கடத்தப்படும் போது அவனின் வயது 6. கடத்தப்பட்ட ஆண்டு 1986.

அனுமானம் - 3

//அது ஈ.பி.டி.பி. வான் அல்ல. அது எல்.ரீ.ரீ.ஈ யினுடையது...// (பக் - 22) யாழ்குடா நாட்டை அரச படையினர் 1996 நடுப்பகுதியில் முற்றாகக் கைப் பற்றினர். அதன் பின்னரே ஈ.பி.டி.பி குடா நாட்டில் இயங்க ஆரம்பித் திருந்தது. அதன்படி பார்த்தால் 2002 ஆண்டு செய்து கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்த காலத்தையே ஆசிரியர் சித்திரிப்பதாகத் தோன்றுகிறது. அப்போது தரைவழிப் பாதையிருந்தது; விமானப் போக்குவரவும் இருந்தது; கப்பல் போக்குவரவு கிடையாது. அப்படியிருக்க சத்தியன் ஏன் /எப்படி கப்பலில் வந்தான்?

மேற்படி சம்பவச் சித்திரிப்பைக்கொண்டு தெளிவான முடிவிற்கு வர இயலவில்லை. கிளிநொச்சி பயிற்சி முகாமில் கடுமையான சித்திரவதை செய்து அவனைப் போராளியாக்குகின்றனர். அவனுக்கு இயக்கப் பெயர் கிடையாது. கடைசிவரை சத்தியன் என்ற பெயருடனேயே இருக்கின்றன. லெப்டினன்ட் என்ற தகுதி வழங்கப்படுகிறது. சாவின் முன் அத்தகை தகுதி நிலை பயன் படுத்தப்படுவதில்லை. நந்திக் கடலோரம் இருக்கும் சாள்ஸ் பேஸ் பொறுப் பாளனாக லெப்டினன்ட் சத்தியன் நியமிக்கப்படுகிறான். இரு நூறு பேர் கொண்ட முகாமிற்கு எப்படி ஒரு லெப்டினன்ட் பொறுப்பாளன் ஆனான்? வாய்ப்பில்லை. இப்படியாக சத்தியன் இயங்கியபாதை யதார்த்தத்திற்கு ஒவ்வாத நிலையிலேயே உள்ளது. பாத்திரப் படைப்பு சிறப்பற்று நிராகரிப்பிற்கு உரியதாகிறது.

04. நாவலிலுள்ள குழப்பம் நிறைந்த சித்தரிப்புகள் சில

1. முருகேசு குடும்பம்

முருகேசு (முருகேசர்), பாக்கியம் தம்பதியினரின் பிள்ளைகள் யார் யார் என்பதில் குழப்பமுள்ளது. பாக்கியம் உயிருடனில்லை. மாணிக்கராசா மூத்த மகன்; மைதிலி இரண்டாவது பிள்ளை - மூத்த மகள்.//அவளுக்கு பின்னால் இரண்டிரண்டு வயது வித்தியாசத்தில் நான்கு பிள்ளைகள். பாடசாலைக்குச் சென்று வருகின்றனர்//(பக் 29). மலர், மாலதி, சுமதி, தனசேகரன் என நால்வர். வேறோர் இடத்தில் மைதிலி கூறுகிறாள்: //... என்ற தாயைத்தின்னி ரெண்டு தங்கச்சிமாரைத் தவிக்கவிட்டிட்டு நான் எங்கை போறது?//(பக் - 77). //தங்கைகள் மலரும் மாலதியும் பாடசாலைக்குச் சென்று விட்டனர்//(பக் - 78) என மைதிலி மணிசேரனிடம் கூறுகிறாள். //அட நமது முருகேசரின் பொடிச்சி... கடைசிப் பொடிச்சி//(பக் 112) என கந்தையர் சுமதியைப் பார்த்துக் கூறுகிறார். //அவருடைய மூன்று தாயில்லாப் பெண்களுக்கும்...//(பக் 71). ஓரிடத்தில் மலர் தனசேகரனை அண்ணன் எனக் குறிப்பிடுகிறாள் (பக் 70). இதன்படி மாணிக்கராசா, மைதிலி, தனசேகரன், மலர், மாலதி, அல்லது சுமதி எனப் பார்க்க வேண்டியுள்ளது. நாவல் பூராகவும் தெளிவற்றுக் குழப்பமாக உள்ளது.

2.முருகேசு குடும்பம், சத்தியன், மணிசேகரன்தொடர்பு

//அவன் நினைவில் மணிசேகரன் வந்தான். அவன் அவனுடைய மச்சான். மாந்தையில் அரச பணிமனை ஒன்றில் தொழில்நுட்பவியலாளனாக (ரீ.ஓ) பதவி வகித்து வந்தான்...//(பக் 14) //சின்னம்மாக் கிழவிக்கு ஒரு ஒன்றை விட்ட தம்பி முறையான முருகேசு வெள்ளாங் குளத்தில் குடும்பத்தோடு வசித்து வந்தார்... முருகேசுவின் மூத்த மகள் மைதிலி மாமிக்காரியை அன்போடு ஆரவாரமாக வரவேற்றாள்//(பக் 27). சின்னம்மா என்பவர் சத்தியனின் தந்தையின் தாய். அனைவரும் ஒன்றுக்குள் ஒன்று ஆயினும் மணிசேகரன் முருகேசர் குடும்பத்தோடு பழகும் போது அப்படித் துலங்கவில்லை. மணிசேகரனின் பெற்றோருக்கு முருகேசர் குடும்பத்தை தெரியவில்லை. ஏன்? குழப்பமாக உள்ளது.

3.போரில் தனசேகரனின் சாவு

ஜீன் 5 (2008 என அமையும்) திகதி நடந்த பொம்பைமடு வன்னேரிக் குளம் சண்டையில் மைதிலி அக்காவின் தம்பி தனசேகரன் இறந்தான் (பக் 178)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனக் குறிப்பிடப்படுகிறது. வன்னேரிக் குளம் அக்கராயன் குளத்திற்கு அருகே இருக்கிறது. அது அப்போது போர் வலயம் அல்ல. சில வேளை வவுனிக் குளம் என இருக்கலாம். அது அவ்வாறு நிற்க, கதையில் மேற்படி சம்பவத்தின் பிறகே விடத்தல் தீவு, வெள்ளாங்குளம், முழங்காவில் அரச படையினரால் கைப் பற்றப்படுகின்றன. மீண்டும் வன்னேரிக் குளச் சண்டை விவரிக்கப்படுகின்றது. (பக் 184, 185, 186) குளத்திலுள்ள படையினரின் சடலங்களை எடுக்குமாறு பொறுப்பாளன் புரட்சி கட்டளையிடுகிறான். தனசேகரன் உட்பட பலர் குளத்தில் இறங்குகின்றனர். திடீரென இராணுவத்தினர் வெளிப்பட்டுத் தாக்குகின்றனர். தனசேகரன், குட்டி, ஆனந்தன், கலைச் செல்வன் ஆகியோர் பலியாகின்றனர். (பக் 186). பின்னர் அடுத்த பக்கத்தில் புரட்சியோடு தனசேகரன் உரையாடுவது போல் ஒரு காட்சி வருகிறது. இறந்தவன் எப்படி உரையாடுகிறான் குழப்பமாக உள்ளது.

**4.மைக்கலின் கதை**

மைக்கல் சத்தியனோடு பழகுகிறான். அவன் இயக்கத்தோடு தொடர்புபடுவதாகவும் காட்டப்படுகிறது. அப்போது அவனுக்கு வயது 16. பின்னர் கடற்கரையில் சுமதியைக் காணும் போது அவனது வயது 26. அவன் சுமதிக்கு தனது கதையைக் கூறுகிறான். அக்கதைக்கும் பாத்திரப் படைப்பிற்கும் தொடர்பு குன்றிக் காணப்படுகிறது. சம்பவங்கள் ஒன்றோடு ஒன்று பொருந்திப் போகவில்லை. இந்திய அமைதி காக்கும் படையினரும் ஏனைய மாற்றியக்கத்தவரும் விரட்டும் போது அவன் இயக்கத்திற்குப் போகிறான். அந்த முகாமில் தேனிசை செல்லப்பாவின் “எங்கள் தமிழினம் தூங்குவதோ” என்ற பாடல் ஒலிக்கவிடப்படுகின்றது. பிறகு தகப்பன் வந்து முறையிட, வயது குறைவு என அறிந்து விக்ரர் அவனை வீட்டிற்கு விரட்டி விடுகிறார். அப்பாடலைப் பாடியவர் மலேஷியா வாசுதேவன், விக்ரர் இந்திய ராணுவம் வருவதற்கு முன்பாக 1986இல் சாவடைந்து விட்டார்.

மேலும் 1991 இல் கோட்டைச் சண்டை நடைபெறுகிறது. புக்காரா விமானங்கள் வானத்தில் நடமாடுகின்றன (பக் 126). கோட்டைச் சண்டை 1990 இல் நடைபெற்றது. புக்காரா விமானம் 1993 இல் தான் விமானப்படை பயன்படுத்த ஆரம்பித்தது. விரிவஞ்சி ஏனையவற்றைத் தவிர்த்து விடுகிறேன். தொடர்ந்தும் குழப்பம் நிறைந்ததாகவே மைக்கலின் பாத்திரம் கதை நெடுகிலும் உள்ளது.

**05.விடுதலைப் புலிகளை இழிவுபடுத்தும் பதிவுகள் சில**

**1.வெள்ளை வான் கடத்தல்**

கட்டாய ஆட்சேர்பு (வீட்டுக்கொரு வீரர்) என்ற நிலைப்பாட்டிற்கு விடுதலைப் புலிகள் 2006 இன் பிற்பகுதியிலேயே வருகின்றனர். அதற்கு முன் யாரையும் வெள்ளைவானில் கடத்திப் போராளியாக்கவில்லை. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் யாரையும் போராளியாக்கும் நோக்கோடு ஒரு போதும் கடத்தவில்லை. அப்படியிருக்கும் போது சத்தியனைக் கடத்தும் சம்பவத்தில் அவனை வானில் தூக்கி ஏற்றிய பின், //சத்தம் போடாமல் வாடா. பறைப் பயலே... //(பக் 11) என ஒரு போராளி ஏசுவது போல் காட்டப்படுகிறது. ஆசிரியரின் நோக்கம் இலகுவில் புரிகிறது.

**2.புலிகள் கப்பம் பெறும் அநீதி**

//இரண்டு பவுண் கட்டவில்லை என்பதற்காக அவன் மனைவியைப் பிடித்துபங்கரில் போட்டுவிட்டார்கள். நேரத்திற்கு நேரம் வந்து கைக் குழந்தைக்குப் பால் கொடுத்து எடுத்துச் செல்கிறான்//(பக் 25). பாலூட்டும் தாய் மீது கூட கருணை காட்டாதவர்கள் புலிகள் எனக் காட்டப்படுகிறது. இரண்டு பவுண் கோரிக்கை 1990 இல் “மண் மீட்பு நிதி” என்ற பெயரில் விடுக்கப்பட்டது. சமாதான காலத்தில் அப் பவுண் மீளளிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்தது. காலக் குழப்பம் இவ்விடத்திலும் உள்ளது.

**3.வெள்ளைக் கொடி விவகாரம்**

//ஒரு தடவை பொட்டம்மானும் சூசையும் வேறு முக்கியமானவர்களும் வெள்ளைக் கொடியோடு சரணடைவது போலச் சென்றார்கள். திரும்பி வரவில்லை...//(பக் 212, 213). விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவினர் மாத்திரமே வெள்ளைக் கொடியோடு சென்ற சம்பவம் பேசப்படுகின்றது. பொட்டம்மான், சூசை இருந்தவர்கள் அவர்கள் சரணடைவது போல் புனைவதன் உள் நோக்கம் யாது? வெளிப்படையாகத் தெரிகிறது.

**4.சிறை முகாம்கள்**

சின்னம்மா சென்ற கிளிநொச்சி முகாம் ஒரு மக்கள் தொடர்பாடும்; அரசியல் துறைக்குரியது. அங்கு பொதுமக்கள் சிறைவைக்கப்பட்டுள்ளனர் (பக் 2,25). சத்தியன் பணி செய்த சாள்ஸ் பேஸ் படையணிக்குரிய முகாம் அங்கும் கப்பம் வசூலிப்பதற்காக பொதுமக்கள் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். (பக் 168).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002 சமாதான காலத்தில் அப்படியான முகாம்கள் எதுவுமில்லை. சிறை நிர்வாகம் புலனாய்வுத் துறையினால் மட்டுமே கையாளப்படும். காவல் துறையின் சிறை வேறு. கப்பம் பெறுவது மாத்திரமே புலிகளின் வேலை என்பது போல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

06. நாவலிலுள்ள கதைக்குத் தொடர்பற்ற காட்சிகள் சில

1. மைக்கல் - சுமதி இந்தியா செல்லல்

//மன்னார், மடு, ஓமந்தை, நாயாறு பகுதிகளிலிருந்து இலங்கை இராணுவத்தின் படை நகர்வு இடம் பெற்றது... பல் குழல் எறிகணைகள் பாயத் தொடங்கிய போது...// (பக் 98). மேற்படி சித்திரிப்புக்களைக் கொண்டு 2007 ஆம் ஆண்டு என ஊகிக்கலாம். வெள்ளாங்குள மக்கள் இடம்பெயர்வது போல் காட்டுவது வலிந்த காட்சி. யானை விரட்டி திசை மாறி ஓடிய சுமதி நாச்சிக்குடா சென்றதும் திரும்பி ஊர்வர எத்தடையுமில்லை. ஏன் அவள் இந்தியா செல்ல வேண்டும்? இந்தியா சென்றவளை சீக்கிய அதிகாரி ஒருவன் வல்லுறவுக்கு உட்படுத்துவதும்; அவள் கர்ப்பமாவதும் அதீத கற்பனை அவளோடு மைக்கல் எவ்வித தொடர்புமின்றி கூடாரத்தில் தங்குவதும், அவளது குழந்தையை அவன் ஏற்பதும் கூட கற்பனை, மேலும் மூன்றாண்டுகள் கழித்து அவர்கள் திரும்பி வரும் போது முழங்காவிலில் மக்கள் இடம் பெயராது வாழ்வது போல் காட்டப்படுகின்றது. போர் தொடக்க நிலையில் இருக்கின்றது. காலத்தைக் கணிக்க இயலவில்லை. யாவும் வலிந்த காட்சிகள்.

2. அமரதாஸவின் விளக்கம்

மணலாற்றுப் போரில் கப்டின் தர்மசேன, அமரதாஸ, காசிம் என மூவர் சிறைப்பிடிக்கப்படுகின்றனர். காசிம் என்பவன் யாழ்ப்பாண முஸ்லீம் இளைஞன் அவன் மூலம் வடக்கிலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றம் பதிவாகியுள்ளது. (பக் 172). அந் நோக்கத்திற்காகவே காசிம்பாத்திரம் வலிந்து புகுத்தப்பட்டுள்ளது. அமரதாஸ சத்தியனின் நண்பன். அவன் அரசியல் விளக்கம் கொடுக்கிறான். (பக் 173-176, 188 191) பின்னர் புலிகளின் தலைவர் சடலம்மீட்கப்பட்ட போது, அதை நேரில் பார்த்தபடி அமரதாஸ யோசிக்கிறான். (பக் 225 232) மேற்படி விவரணத்தில் புலிகளின் தொடக்கம், புலிகள்செய்த கொலைகள் என புலிகள் மீது வசை பாடப்பட்டுள்ளது. சில இடங்களில் அவன் "தமிழ் தேசியம்" குறித்து அலசுகிறான். சிங்கள இனத்திலுள்ள அறிவு ஜீவிகளுக்கே தமிழர் பிரச்சினை தொடர்பாகவோ, தமிழ் தேசிய அரசியல் குறித்தோ பூரண விளக்கம் கிடையாது. அப்படியிருக்க ஒரு சிப்பாயால் எப்படி இவ்வாறு சிந்திக்க முடிகிறது? அந்த சிப்பாயின் குரலில் பேசுவது செங்கை ஆழியனே. அப்படிப் பார்க்கும்போது அரசியல் பற்றிய அலசல் ஆழமற்றிருக்கிறது.

3. சுங்கன் குழி கிராம மக்கள்

மாந்தையில் முண்டைப்பிடிக்கும் வெள்ளாங் குளத்திற்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் பாலியாற்றாங்கரையில் அமைந்துள்ள சுங்கன் குழி கிராமத்தில் அம்பலவாணருடன் ஐம்பத்தாறு பேர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் போரினால் இடம் பெயர்ந்து இழப்பினைச் சந்தித்து முள்ளிவாய்க்காலை அடையும் போது அம்பலவாணர் உட்பட நால்வரே எஞ்சுகின்றனர். அவர்கள் படும் துன்பம் நாவலில் சித்திரிக்கப்படுவது கிளைக் கதையாக அமைகிறது. (பக் 201- 208). அது நாவலுக்கு அவசியமற்றது எனத் தோன்றுகிறது. மேற்படி சம்பவத்தை விவரித்து தனியாகவும் ஒரு நாவலை செங்கை ஆழியான் அவர்கள் 2011 இல் "விடியலைத் தேடி" (பக்கங்கள் 67) என்ற தலைப்பில் எழுதியுள்ளார். அந் நாவல் குறித்த ஒப்பீடு இவ்விடத்தில் அவசியமில்லை என விட்டுவிடுகிறேன். செங்கை ஆழியான் அவர்கள் வாழ்வின் இறுதிக் காலத்தில் நாவல் செய்வதில் குழப்ப நிலையில் இருந்துள்ளார் எனத் தெரிகின்றது.

07. முடிவுரை

1. நாவலில் தகவல் பிழைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

கிருஷ்ண மூர்த்தி என்கிற கிட்டு (பக் 19); யோகி யோகச்சந்திரன் (பக் 230); 1992 யாப்பு (பக் 182) எனப் பலவுண்டு. பல சம்பவங்கள் கூறியது கூறலாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, //இவ என்ரை மூத்த தங்கைச்சி...//(பக் 37) மாணிக்க ராசா மைதிலியை மணிசேகரனுக்கு அறிமுகம் செய்கிறான். மைதிலி தேசிக்காய் தண்ணீர் கொடுக்கிறாள். விழிகள் சந்திக்கின்றன. மீண்டும் அதே விதமான காட்சி வருகிறது: //இவ தான் என்ரை தங்கச்சி மைதிலி சேர்// (பக் 56) மாணிக்கராசா அறிமுகம் செய்கிறான். மீண்டும் கண்கள் முதல் சந்திப்பை நிகழ்த்துகின்றன. இப்படியாகப் பல இடங்களில் கூறியது கூறலாக வருவது சலிப்பை ஏற்படுத்துகிறது.

2. //சுமதியின் வலக்கரம் முதன் முதலாக அவனது இடக்கரத்தினைப் பற்றியது. கொலை வெறியோடு ஆயுதத்தைப் பற்றிய போது ஏற்படாத இன்மையைஅந்த இளம் கன்னியின் கரப்பற்றுதலால் அவன் உணர்ந்தான். வாழ்க்கையின் அர்த்தம் புரியத் தொடங்கியது// (பக் 162). போராட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமற்றது எனக் கூறவிழைகிறாரா என எண்ணத் தோன்றுகிறது.

3. 1995 இன் பின்னர் யாழ்குடா நாட்டில் விடுதலைப் புலிகளின் ஆட்சி கிடையாது. 1995க்குப் பின்னரான புலிகளின் கட்டுமானத்தோடு ஆசிரியருக்கு எவ்வித பரிச்சயமும் கிடையாதுஎன்பதால் பழைய இயக்கத்தை புதிய காலத்துக்குள் பொருத்திப் பார்த்துவிடுகிறார். ஏலவே தனக்குத் தெரிந்தவற் றோடு இறுதிப் போரின் பின் பத்திரிகை வாயிலாக அறிந்த விடயங்களையும் கொண்டு நாவலைத் தயாரித்துள்ளார்.

4. தனது பாத்திரப் படைப்புக்களில் வரும் போராளிகளைத் தவிர ஏனைய போராளிப் பாத்திரங்களை சிறுமைப்படுத்தும் அதே வேளை போரில் பங்கு பற்றிய படையினரை உயர்த்தி வைக்கவும் முயல்கிறார். //அவர்களை அக் கரையில் இராணுவ வீரர்கள் வரவேற்றனர். அவர்களில் பலர் நீரினுள் இறங்கி வந்தனர். சுமதியிடமிருந்த குழந்தையைவாங்கிக் கொண்டனர். வயோதிபர் களை கைத்தாங்கலாக நடத்திச் சென்றனர் //(பக் 210). சத்தியனின் தங்கை மாலினி அமரதாஸை விரும்புகிறாள். சத்தியன் கூறுகிறான் : //... அமரதாஸை நல்ல பையன் தமிழாவது சிங்களமாவது இரண்டு சமூகங்களிடையே இனியாவது இப்படியாவது நெருக்கம் வரட்டும்...//(பக் 224). மேற்படியான சித்திரிப்புக்களில் ஆசிரியர் இலங்கைத் தேசியத்தை வரவேற்கிறார். மேலும் அரசு பற்றிய புரிதல் அவரிடம் கிடையாது! சுய நிர்ணய உரிமை குறித்து தெளி வின்றி அவர் முன்வைக்கும் அரசியல் விளக்கம் ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது.

5. நாவலானது முதல் வரைபு (Draft) போல் அமைந்துள்ளது. தகவல் பிழை, பொருட் பிழை, கூறியது கூறல் என குழப்பம் நிறைந்துள்ளது. மேற்படி நாவலானது செங்கை ஆழியனுக்கு உரியதல்ல என்பதே என் நிலைப்பாடு. மே 2009 இல் போர் ஓய்ந்த பின் அவசர அவசரமாக எழுதப்பட்டு டிசம்பர் 2009 இல் வெளியிடப்பட்டுள்ள காரணத்தால் மேற்படி குழப்பம் ஏற்பட்டிருக்க கூடும். மற்றும் படியாக ஈழ நாவலிலக்கியத்திற்கே விலாசமளித்த செங்கை ஆழியான் அவர்களின் மேதாவிலாசம் சந்தேகத்திற்கு உரியதல்ல. மேலும் ஜீவநதி வெளியிட்டுள்ள செங்கை ஆழியான் சிறப்பிதழில் (இதழ் 92, வைகாசி 2016) அவரின் பாரியாரின் நேர்காணலில், //... அவர் எழுதும் சிறுகதை என்றாலும் நாவல் என்றாலும் தட்டச்சில் ஒரே தடவையில் பொறிப்பார். அதன் எழுத்துப் பிழைகள் அத்தனையையும் திருத்த வேண்டியது எனதுபொறுப்பு அதன் போது வாசகியாக எனது அபிப்பிராயங்களைக் கூறுவதுண்டு. பெரும்பாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார், சிலவேளை ஏற்றுக் கொள்வார். 1999 இன் பின் கணணியில் ஒரே தடவையில் எழுதுவதைப் பழக்கமாகக் கொண்டவர். மன ஓட்டத்திற்கு ஏற்ப அவரின் கை வேலை செய்யும்...//(பக் 47) முதல் வரைபை நூலாக வெளியிடும் போது நேரிடத்தக்க குறைபாடு இந் நாவலில் தெளிவாகவே தெரிகின்றது.

6. //எங்கோ ஒரு பின்தங்கிய கிராமத்தில் பிறந்து மாபெரும் போராட்ட வீரனாக மாறிய தலைவரிடம் கொண்டிருந்த தமிழ் மக்களின் அபிலாசைகள் சிதைந்து போயின...//(முன்னுரை). "யாழ் வல்வெட்டித்துறையில் பிறந்து..." என்று பயன்படுத்தாது "எங்கோ ஒரு பின்தங்கிய கிராமத்தில் பிறந்து..." என்று பயன்படுத்தலில் ஆசிரியர் கூற முற்படுவது என்ன? இதன் பின்னால் உள்ள உளவியல் என்ன? இதன் பின் பல "வாதங்கள்" ஒளிந்துள்ளன. ஆசிரியர் வன்முறையை வெறுக்கிறாரா அல்லது விடுதலைப் புலித் தலைமையை வெறுக்கிறாரா என ஆராய வேண்டியுள்ளது. //இருந்தாற் போல் சாத்வீகத்தில் நம்பிக்கை கொண்ட பிரபாகரன் உண்ணாவிரதத்தில் திலீபன் என்ற அப்பாவிப் போராளியை இறக்கிப் பலி கொடுத்தார்...//(பக் 230) திலீபன் அப்பாவிப் போராளியா? அவரை அப்பாவி என குறிப்பிடுவதன் நோக்கம் பிரபாகரன் அவர்களைச் சிறுமைப்படுத்தவே. "உண்ணா விரதம்" தொடர்பான விமர்சனங்களை முன்வைக்க முடியும். ஆனால் மேற்கூறிய விதத்தில் அல்ல. //... போராடி இறந்திருக்கலாம் வீரனாக. கோழை போல தப்புநீரில் சாக வேண்டுமா?//(பக் 235). எங்கு சண்டை நடக்கிறதோ அங்கு தான் ஒரு போர் வீரன் சாவடைவான். அது பூந்தோட்டமாகவோ சாக்கடையாகவோ இருக்கலாம். ஒரு நடவடிக்கையின் போதே அவர் இறக்க நேரிட்டது. புறநானூறு கூறும் போர் புரியவில்லை என கூற ஆசிரியர் முற்படுகிறாரா என எண்ணத் தோன்றுகின்றது. முன்னதாக இந்நாவலுக்கு இ.சு.முரளிதரன் எழுதிய விமர்சனத்தில், //... எல்லாளன், சங்கிலியன் எனகுருதி வழி வெற்றிச் சரித்திரம்படைத்த பிரதிமைகளை வழிபட ஆற்றுப்படுத்தும் படைப்பாளிகள் வன்முறைக்கு எதிரான எழுத்துக்களை முன்வைக்கும் போது மிக மிக அவதானமாக இருக்க வேண்டும் என்பதையே "ருத்திர தாண்டவம்" என்ற நாவல் ஊடாகப் புரிந்து கொள்கிறோம்//(பக் 36, இதழ் 92 ஜீவநதி)

7. மேற்படி நாவலை செங்கை ஆழியானின் MASTER PIECE என முன்னட்டையில் பதிவிடப்பட்டுள்ளமை வணிகக் குறியீடாகப் பார்க்கலாம். வாடைக்காற்று, காட்டாறு, பிரளயம், கிடுகு வேலி, கடல்கோட்டை போன்ற அருமையான நாவல்களை படைத்தளித்த செங்கை ஆழியான் அவர்கள் "ருத்திர தாண்டவம்" என்ற நாவலில் கோட்டை விட்டுள்ளார் என்பதே உண்மை. •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்பதுகளின் ஆவணம் பார்த்தீனியம்

■ இ.சு.முரளிதரன் ■




மெய்நிகழ்வுகளோடு புனைவுக் கதாமாந்தரைக் கலந்து உருவாக்கப்பட்ட வரலாற்று ஆவணமாக "பார்த்தீனியம்" அமைந்துள்ளது. அரக்கரைக் குறித்து, ஈழத்தமிழர் கதைகளிலே தான் கேள்விப்பட்டிருந்தனர். அமைதிப்படை என்ற பெயரிலே தமது பிரதேசத்தினுள் அவர்கள் நுழைவார்கள் என என்றுமே எதிர்பார்த்ததில்லை. இந்திய அமைதிப்படை தமிழர் பகுதிக்குள் பாதம் பதித்தது. அவர்களுக்கு வாய்க்கடையில் இருபற்கள் நீண்டிருக்கவில்லை; ஆனாலும் இரத்த வேட்கையோடு திரிந்தனர். இடிபஸ் மன்னனுக்கு எந்தவகையிலும் சொந்தமில்லை; ஆனாலும் தந்தையரைக் கொன்று தாய்மாரைப் புணர்ந்தனர். எந்தப் பாஞ்சாலியும் அவர்களைப் பார்த்து நகைக்கவில்லை; ஆனாலும் கைக்கெட்டிய புடவை எல்லாம் அவிழ்த்தெடுத்தனர். அந்தக் கொலை பாதகரின் வன்மங்களில் சிறு துண்டினை யாவது பதிவு செய்ய வேண்டுமென்ற வேட்கையோடு "பார்த்தீனியம்" எழுதப் பட்டுள்ளது. நடுநிலை என்ற போலி விம்பத்தோடு கதையை நகர்த்துவதில் தமிழ் நதிக்கு உடன்பாடில்லைப் போலும் விடுதலைப் புலிகள் மீதான சாய் மானத்தோடு பிரதியை உருவாக்கியுள்ளார். கலைவாணி என்ற இயற்பெயர் கொண்ட தமிழ்நதி புலம் பெயர்ந்து கனடாவிலே வசித்து வருகின்றார். நற்றிணை பதிப்பக வெளியீடாக வந்துள்ள இந்நாவல் 504 பக்கங்களைக் அறிமுகம் - என்னுரை தவிர்த்து) கொண்டமைந்துள்ளது. சலிப்பூட்டாத மொழிநடையில் அமைந்து வெகு இயல்பாக வாசகனை உள்ளீர்த்துக் கொள்ளும் பண்போடு காணப்படுகின்றது.

வானதியும் வசந்தனும் ஒருவரை ஒருவர் விரும்புகின்றனர். வசந்தன் இயக்கத்தில் இணைந்து "பரணி" என்ற பெயரோடு, இந்தியாவிலே பயிற்சி பெறுகின்றான். வானதிக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கிறது. இந்தியாவிலிருந்து தாயகம் மீளுகின்ற பரணிக்குப் பிரதேசப் பொறுப்பாளர் பணி கிடைக்கிறது. வானதியோடான காதலையும் வளர்க்கின்றான். அவளோ "இயக்கத்தை விட்டு வருமாறு" நச்சரிக்கின்றாள். இந்நிலையில் மாற்று இயக்கங்களோடு விடுதலைப்புலிகள் சகோதரச் சண்டையில் ஈடுபடுகின்றனர். பரணிக்கும் மாத்தையாவுக்குமான உறவு விரிசலடைகின்றது. எனினும் பிரபாகரன் பரணியின் சார்பான நியாயத்தை ஏற்றுக்கொள்கிறார்.

இந்திய இராணுவம் அமைதிப்படையாக உள்நுழைகிறது. முரண்பாடு கள் வெடிக்கின்றன. அமைதிப்படையின் கோரமுகம் வெளிப்படுகின்றது. "இன்னெசென்ட் பீப்பில் கில்லிங் "போசர்சஸ்" என அர்த்தம் கொள்ளுமள விற்கு செயற்படுகின்றனர். பரணியையும் - வானதியையும் இராணுவம் தேடுகின்றது. இந்நிலையில் பரணி இயக்கத்திலிருந்து விலகி இந்தியா போக முயற்சிக்கின்றான். கடற்படையால் பிடிக்கப்பட்டு விடுதலையாகிறான். அமைதிப்படை இந்தியா புறப்படுகின்றது. பரணி வானதியைத் தன்னோடு பயணிக்க அழைக்கின்றான். காதலின் மறுப்போடு கதை நிறைவு பெறுகின்றது.

அமைதிப்படை கொண்டுவந்த ஆடுகளோடு ஒட்டி வந்த பாதீனிய விதைகள், மண்ணுள் மண்ணை மலடாக்குகின்றன. பாதீனியச் செடிகளை அழிப்பது சாத்தியமே இல்லை! இன்றுவரை ஒவ்வொரு அநாதரவுக்காணி யிலும், அடர்ந்து வளர்க்கின்ற பாதீனியக்களை அமைதிப்படையினை நினைவூட்டுகின்றது. இம்மண்ணோடு பிரியாத பாதீனியச் செடிபோல அமைதிப்படையின் வன்மங்களும் எம்நினைவோடு நீங்காமலேயே வாழ்கின்றன. அந்த வகையிலே கதைத்தலைப்பு மிகவும் பொருத்தப்பாடாகவே அமைந்துள்ளது.

கதையிலே பிரபாகரன் பற்றிய அபிமானமும், மாத்தையா குறித்த காழ்ப்பும் இழையோடுவதை இனங்காண முடிகின்றது. போராளிகள் குறித்துத் தலைவர் தனித்தனியாக அறிந்து வைத்திருந்தார் என உருவாக்கப்பட்டுள்ள விம்பக் கட்டுமானம் நெருடலுக்குரியது. எண்பதுகள் சார்ந்து பன்முக வரலாற்றுச் சம்பவங்களை நாவலெங்கும் பதிவாக்கியுள்ளார். எம்.ஜி.ஆர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போராளிக்குப்பண உதவி, பிரபாகரனின் திருமணத்தால் போராளிகளிடையே ஏற்பட்ட அதிருப்தி, தமிழகத்தில் பல்வேறு இயக்கங்கள் ஒன்றுபட்டு இயங்குதல், போராளிக்குழுக்களிடையே நிகழும் சகோதரயுத்தம், இந்திய விமானம் உணவு போடுதல், திலீபன் உண்ணாவிரதம், குமரப்பா புலேந்திரன் மரணம், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இந்திய இராணுவத் தரையிறக்கம், பிரம்படி ஒழுங்கையில் டாங்கிகளால் மக்களை நெரித்துக் கொல்லல், துரோகி என மரண தண்டனை வழங்குதல், மாற்று இயக்கங்கள் இராணுவத்தோடு இணைந்து இயங்குதல் போன்ற எண்ணற்ற விடயங்களை நாவலெங்கும் விதைத்துள்ளார். "பார்த்தீனியம்" நாவலின் சிறப்பென நான் கருதுவது தனது அனுபவத்தினைச் சிந்தாமல் சிதறாமல் படைப்பாளி விவரித்து செல்லும் விதத்தையே! இடம்பெயர்ந்து திரும்பி வருகின்ற போது வீடு இருக்கின்ற கோலத்தை விவரிக்கும் தருணத்திலே காலப்பயணம் செய்ததைப் போல உணர்ந்தேன். இந்திய இராணுவம் உடற்சோதனையின் போது மார்பினை அழுத்தித் தடவும் செயற்பாட்டினை பார்த்திராதவர்கள் மிகமிகக் குறைவு. இவ்வாறு நாம் கடந்து வந்த பாதையினை நினைவுபடுத்துகின்றார்.

நாவலில் இடம்பெறுகின்ற கதாபாத்திரங்களின் குணாம்சங்கள் மிக சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. வானதியின் தந்தையான அருமை நாயகம், தாயான தனபாக்கியம், வானதியை ஒருதலையாக விரும்பும் தனஞ் செயன் உட்பட ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் மாறுபட்ட பண்புகளோடு படைத்துள்ளார். மேலும் சில கதாபாத்திரங்கள் விடுதலைப்புலிகளை விமர்சிக்கும் விதத்திலும் உருவாக்கப்பட்டுள்ளன. எனினும் அவ்விமர்சனங்கள் வீரியமற்றவையாக அமைவதும் குறிப்பிடத்தக்கது. கதாசிரியரின் சாய்மானத்தையே அப்பாத்திரங்களும் வெளிப்படுத்த முயல்கின்றன.

எளிமையின் வசீகரத்தோடான மொழியுடன் கதையை நகர்த்திச் செல்கிறார். "காற்று கிளைகளுக்குள் புகுந்து மிளற்றியது" எனக் கவித்துவத் தோடும் நகர்த்துகின்றார். "பு...டி... ஆரெண்டு நைச்சான்" என ஆண்மைய மொழியினைக் கூட மனத்தடையின்றிக் கையாள முயல்கின்றார். "வட்டுக் கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு ரெண்டு கொட்டைப்பாக்கு" "மீன் வித்த காசு மணக்காது" "மழைகால இருட்டெண்டாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது" என ஆங்காங்கே பழமொழிகளும் பொங்கலில் முந்திரிப்பருப்பாக முகங்காட்டுகின்றன.

"ஆளுயரப்புற்கள். நெட்டுக்குத்தாய் நிமிர்ந்த மரங்கள். அவற்றில் அமர்ந்துபாடும் பறவைகள். இரவில் சாம்பலாகி பகலில் பச்சையாக மீளவும் உயிர்த்தெழும் அயல் மலைகள். கோப்பித் தோட்டங்களில் வேலை செய்தபின் லயன்களில் முடங்கிவிடும் பழங்குடிகள். தூலமற்றதாய் எந்நேரமும் கூடவே இருக்கும்கொடிய குளிர். இரு நூற்று ஐந்து பேர் கொண்ட ஐந்தாவது பாசறை பயிற்சி எடுத்த இடம் இப்படித்தான் அமைந்திருந்தது" எனக் கதை நிகழ்களத்தை வாசகனின் மனதிலே எளிதாகப் பதியுமாறு வருணித்துச் செல்கிறார்.

அங்கதமும் அவலமும் கதை எங்கும் சுவறியுள்ளன. அருமைநாயகம் என்ற கதாப்பாத்திரம் வாசகனுக்குள் அங்கதத்தை விதைக்கிறது. புதிய இயக்கம் தொடங்கப்புதையல் தேடிய கதை, கோழிக் கூட்டைத் தூக்கிச் சென்று கோழி திருடுதல் போன்றன அங்கதத்தை உண்டாக்குகின்றன. சுபத்ராவின் கதை மனதைப் பிழிகின்ற வகையில் அமைகின்றது. அமைதிப்படை காலத்தில் வன்புணர்வு தாராளமயமாக்கப்பட்டிருந்தது. எனினும் அக்கதையைச் சொல்லிய விதம் துன்பியலின் உச்சத்திற்கு அழைத்துச் சென்றது. நாவலில் உணர்ச்சிக்குரிய மற்றொரு இடமாக இறுதியுச்சம் அமைகின்றது. வாசகனின் கண்கள் ஓரளவேனும் கசியும் வகையிலே கதையை நிறைவு செய்துள்ளார்.

தமிழினவிடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகின்ற நச்சுநிறப்படைப்புகள் வெறுப்புணர்வினை ஏற்படுத்துவதைப்போல, துதிபாடு கின்ற படைப்புகளும் வெறுப்புணர்வினையே தருகின்றன. தமிழ் நதியின் சாய்மானம் சற்று நெருடலுக்குரியது. நம்பகத் தன்மையோடு முரணி நிற்கிறது. போராளிகளின் அனைத்து செயற்பாடுகளையும் நியாயப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பது எனது கருத்து நிலைப்பாடாகும். கண்டிப்பான தொனியிலே சில விடயங்களை முன்வைத்திருந்தால் மகிழ்ந்திருப்பேன். வரலாற்று ஆவணத்திற்கு அத்தகைய நிலைப்பாடே பெருமை சேர்க்கும். சாதியம் குறித்த பதிவுகளில் இருந்த நேர்மையை போராட்ட நியாயங்களிலும் காட்டியிருக்கலாம். தமிழில் வெளியான மிக முக்கிய நாவல்களுள் இடம் பெறக் கூடிய அனைத்துத் தகுதியினையும் பார்த்தீனியம் கொண்டிருக்கிறது என்றால் மிகையன்று. ●

**ஜீவநதியின் 200 ஆவது இதழ் "சாதியச் சிறப்பிதழாக" மலரவுள்ளது. ஆக்கங்களை எழுத விரும்புபவர்கள் ஆனி 10 இற்கு முன்னர் அனுப்பி வையுங்கள். சாதியத்தின் தற்போதைய நிலையை முன்னிறுத்திய கருப்பொருளில் எழுதப்படும் சிறுகதைகள், கவிதைகளை எதிர் பார்க்கின்றோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்கவியின் "ஊழிக்காலம்"



■ த.அஜந்தகுமார் ■

இலங்கையில் முப்பது ஆண்டுகாலப் போர், எத்தனையோ வேட்டைகளை நிகழ்த்தி நிறைவுக்கு வந்தபோதிலும் அதன் தாக்கத்தில் இருந்து ஒருபோதும் விடுபடமுடியாத "வரத்தையே" நாம் பெற்றிருக்கின்றோம். எனினும் இலக்கியஉலகிற்கு போர் புதிய அனுபவங்களைப் பரிசளித்திருக்கின்றது. போரின் முடிவிற்குப் பின்னர் தமது அனுபவங்களை முதலில் எழுதிய வெளியிட்ட பெருமை பெண்படைப்பாளிகளுக்கு உரியது. வெற்றிச் செல்வியின் போராளியின் காதலி, தமிழ்க்கவியின் ஊழிக்காலம், தாமரைச் செல்வியின் உயிர்வாசம், சாந்தி நேசக்கரத்தின் உயிரணை, மிதயா கானவியின் கருணைநதி, ஆதிலட்சுமி சிவகுமாரின் புள்ளிகள் கரைந்தபொழுது என்று வெளிவந்த நாவல்கள் கவனத்திற்குரியவை. இவற்றில் தமிழ்க்கவியின் ஊழிக்காலம் பற்றிய பார்வையை இக்கட்டுரை வெளிப்படுத்த முயல்கின்றது.

### தமிழ்க்கவி ஓர் அறிமுகம்

*19.07.1947* இல் பிறந்த தமிழ்க்கவியின் இயற்பெயர் தமயந்தி சிவசுந்தரலிங்கம். சிறுவயதிலேயே எழுத்து ஆர்வம் இருந்தாலும் 14 வயதிலே இல்லறத்துள் நுழைந்துகொண்ட சுமையின் அழுத்தத்தால் எழுத்தை மறந்து இருந்தவர்க்கு விடுதலைப்புலிகள் அமைப்பினருடனான இணைவு கலை இலக்கிய ரீதியில் எழுச்சியொன்றுக்கு ஆட்படுத்தியது எனலாம். அரசியல் தேவைகளுக்காக மேடை நாடகங்களை எழுதத்தொடங்கினார். அரசியல் துறைக்கு சென்றதும் குறிப்பாக,நூலகப்பகுதிக்கு மாற்றப்பட்டதும் அவரது வாசிப்பு தீவிரமாகியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இதழியல் பட்டயக்கற்கை, தமிழீழ நீதிமன்ற சட்டவாளர், கணினிக்கற்கை என்று முதிர்வயதிலும் தன்னைப் புதுப்பிக்கும் ஆளுமையாக இருந்திருக்கின்றார். சிறுவயதில் எழுதிய இவர், மீண்டும் புலிகளின் குரல் மூலம் மக்கள் மத்தியில் அறிமுகமாகத்தொடங்கினார். நாடகங்களில் நடிக்கத்தொடங்கினார். நாட்டார் வழக்காற்றியல் சார்ந்து அருமையான தேடல்களில் ஈடுபட்டவராகவும் விளங்கினார். இவரது வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அதற்குச் சான்றாக விளங்கின. "ஈவ்" என்ற நாவலைப் படித்ததும் தனது அனுபங்களை எழுதவேண்டும் என்று தீவிரம் கருக்கொள்ள "இனிவானம் வெளிச்சிரும்" என்ற நாவலை எழுதினார். **1995** ஆம் ஆண்டு அந்நாவல் எழுதப்பட்டாலும் பலரது வாசிப்புக்குப் பின்னர் **2002** இல் நூல்வடிவத்தில் வெளிவந்ததும்தான் தமிழ் இலக்கிய உலகில் "தமிழ்க்கவி" என்ற பெயர் சற்று ஆழமாக அறிமுகமாகியது எனலாம்.

போரின் பின்னரே இயக்கத்தில் இருந்தவர்களும் மாற்றுக்கருத்துகளை முன்வைக்கின்றார்கள் என்று அவர்களது அரசியலையும் வாழ்வையும் கேள்விக்கு உள்ளாக்கி வருவதனைக் காணும் எமக்கு, தமிழ்க்கவி அவர்கள் இயக்க காலத்திலேயே தன்னுடைய சுபாவத்தினால் மாற்றுக்கருத்துகளை எழுதிவந்தவர் என்பது கவனத்திற்குரியது.

சிறுவயதிலேயே வாழ்க்கையென்னும் போராட்டத்துக்குள் அகப்பட்டுக்கொண்ட தமிழ்க்கவி பிள்ளைகளை போராட்டத்தில் பறிகொடுத்து தானும் அந்தப் போராட்டத்தில் இணைந்துகொண்டவர். தனது மாற்றுக் கருத்துகளை அச்சமின்றிப் பேசியும் எழுதியும் வருபவர். ஒரு பெண்ணாகவும் வரலாற்றின் சாட்சியாகவும் போராளியாகவும் அவரது குரல்கள் படைப்புகளின் வழி உன்மத்தங்கொண்டு வெளிவருகின்றன.

### தமிழ்க்கவியின் படைப்புகள்

இனி வானம் வெளிச்சிரும் **(2002)**, இருள் இனி விலகும் **(2004)**, ஊழிக்காலம் **(2013)**, இனி ஒரு போதும் **(2017)** ஆகிய நான்கு நாவல்களும் நரையன் **(2022)** என்ற சிறுகதைத்தொகுப்புமே நூலாக வெளிவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க்கவியின் படைப்புகள். கரும்புலிகள் பற்றிய "தாழமுக்கம்" என்ற நாவல் உள்ளிட்ட பிரசுரமாகாத படைப்புகள் இன்னும் இவரிடம் உள்ளன. எழுபத்தைந்து வயதிலும் தொடர்ந்து எழுதிவருகின்றார். நாட்டார் வழக்காற்றியல், புனைகதை, கவிதை,நாடகம், பேச்சு, பத்தி என்று பல வகைகளிலும் தனது ஆளுமையை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் வழி வெளிப்படுத்திவரும் இவரது படைப்புகளின் வல்லபம் இங்கு பிரசுரமாகிய படைப்புகள் வழியே மாத்திரமே நோக்கப்படுகின்றது.

**தமிழ்க்கவியின் நாவல்கள்**

தமிழ்க்கவியின் நாவல்களில் இனி வானம் வெளிச்சிரும், இருள் இனி விலகும், ஊழிக்காலம், இனி ஒரு போதும் ஆகிய நான்கு நாவல்களே நூலுருப் பெற்றுள்ளன. தாழமுக்கம் என்ற கரும்புலிகளைப் பற்றிய நாவல் நூலுருப்பெறவில்லை. தனது முதலாவது நாவலிலேயே பலரது கவனத்தையும் பெற்றது மட்டுமல்லாமல் பரிசில்களையும் தமிழ்க்கவி அவர்கள் பெற்றிருந்தார்.

மிகச்சிறிய வயதிலே தமிழரசுக்கட்சியின் மாநாட்டில்(1956) பங்குகொண்டது முதல் தனது கிராமத்தில் சிங்கள ஆக்கிரமிப்பையும் வன்முறையையும் அனுபவித்து அவர்களின் மீது கோபத்தைச் சேகரமாக்கிக் கொண்டிருந்த ஒருவர், தனது பிள்ளைகளை விடுதலைப் போரிற்குக் கொடுத்துத், தானும் 43 வயதிலே போராளியாகி 2009 போரின் முடிவென்னும் ஊழிக்காலம் வரை பலதுன்பங்களைத் தொடர்ந்து அனுபவித்து வலியேறிக் கிடந்த உள்ளத்தில் இருந்து கரைபுரண்டோடிய அனுபவங்களே நாவல்களாகத் தோற்றங்கொண்டன.

இவரது நாவல்கள் உண்மை அனுபவத்தில் இருந்து வரலாற்றின் சாட்சியமாக மேற்கிளம்புகின்றன. சுயசரிதையைப் படிப்பதைப் போன்ற விவரணத்தன்மையும் புனைகதைகளை விட திருப்புமுனைகளைக்கொண்ட வாழ்க்கை அனுபவங்களும் நாவல்களில் வெளிப்படுவதைக் காணலாம். பார்வதி என்ற முதிர்பெண்ணே (இனி இருள் விலகும் தவிர)மூன்று நாவல் களினதும் பிரதானமான பாத்திரம். இந்தப் பாத்திரங்களின் தொடர்ச்சித் தன்மையும் யதார்த்தமும் வாசகனை எளிதில் பிணைத்துவிடுகின்றன. இறுதிப்போருக்கு முந்திய நாவல்களில் வெளிப்பட்ட தமிழ்த்தேசியத்தின் குரல் பின்னைப்போர் நாவல்களில் மங்கி மாற்றுக்குரலாகவும் மாறும் தோற்றத்தையும் இனங்காணமுடிகின்றது. போர்வாழ்வுக்குள் ஒரு பிரதிநிதியாக இரத்தமும் சதையுமாக வாழ்ந்த தமிழ்க்கவியின் நாவல்கள் இனவரைவியல் ஆவணங்களாக மாறும் இயல்புகொண்டவை என்பதற்குத் தமிழ்க்கவியின் நாவல்களும் சான்றாகிநிற்கின்றன.

**ஊழிக்காலம்**

தமிழ்க்கவி எழுதிய மூன்றாவது நாவல் "ஊழிக்காலம்". தமிழினி பதிப்பகத்தின் வெளியீடாக 2013 இல் வெளிவந்த. போர்க்காலத்தில் - பிரசாரக் காலத்தில் தனது முதல் இரண்டு நாவல்களையும் தமிழ்த்தேசிய உணர்வுடன் ஒரு போராளியாக வெளியிட்ட இவர், போரின் இறுதிநாட்களின் துயரங் களால் ருசிபார்க்கப்பட்ட பின்னர் எழுதிய நாவலாக ஊழிக்காலம் விளங்கு கின்றது. போரின் இறுதிநாளில் சரண் அடைந்து முகாமின் விசாரணைக்கு முகங்கொடுப்பதில் இருந்து தொடங்கும் இந்தநாவல் பிள்ளைகள் பேரப் பிள்ளைகளுடன் ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து அலைந்துலைந்த கதையை அதற்கே உரிய வலியுடன் பேசிநிற்கின்றார். ஊழிக்காலம் கண் முண் திரண்டெழும் காட்சி கலங்கிய எம் கண்கள் வழி புலப்படுத்தப்படுகின்றது. விடுதலைப்புலிகள் அமைப்பினரைப் பற்றிய விமர்சனங்களும் பழிகளும் இங்கு இவரால் சுமத்தப்படுகின்றன. இறுதிக்கால முரண்களை, இருண்ட மனங்களின் இறுகிய காலங்களை உருவாக்கித்தர இவர் எழுத்துகள் இந்த நாவலில் முயன்றுள்ளன. ஆயினும் எழுத்து ஆவணங்களை கலை ஆக்கப்பிரதியாக கொள்ளலாமா? அதற்குரிய உயர்ந்த தகுதி இந்த நாவலுக்கு இருக்கிறதா? என்ற வினாவை வாசகரிடம் தொற்றவைக்கின்றன.

"கொடும் போர்க்குற்றங்களுக்கான மெய்யான நேரடிச் சாட்சி இந்தப் படைப்பு. இனவெறியின் ஊழிக்கூத்து. இறுதி முற்றுகைக் கால களப்பலி நாட்களின் பேரவலச் சித்திரிப்பு. துன்பக்காட்டாற்று வெள்ளத்தின் சுழலில் இழுபட்ட தவிப்பு. எல்லாம் முடிவடைந்த பின் சாம்பல் படுகை மீதிருந்து 60 வயதைக் கடந்த ஒரு அம்மம்மாவின் உறைபனியான நெஞ்சில் கசியும் துன்ப நினைவுகள். வாழ்ந்து பெற்ற அனுபவங்களின் பதைபதைக்கும் அன்றாடப் பதிவுகளின் நம்பிக்கையின் மூச்சுத்தருணங்களின் இறுதிப் பிணவாடை" (பதிப்புரை:7)

இடம்பெயர்ந்து கொண்டும் பதுங்குகுழிகளைத் தேடிக்கொண்டும் உயிரைச் சுமந்து வலியைச் சுமந்து நாட்களின் கணங்களை அதே வலியுடன் பெயர்க்கமுயல்கின்றன தமிழ்க்கவியின் எழுத்துகள். ஆயினும் தொடர்ச்சியான இடம்பெயர்வுப் பதிவுகளின் அதிகரித்த விவரணமும் உண்மையின் அழுத்தமான பதிவுகளும் புனைவாக படிப்பதற்கு அனுமதிக்கவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமான கவித்துவ மொழியும் இல்லை. எந்த உத்திகளை நோக்கியும் நாவல் பயணப்படவும் இல்லை. உண்மையான மனிதர்களை அவர்களின் பெயர்களுடனோ சிறுசிறு மாறுதல்களுடனோ இங்கு பதிவு செய்துள்ளார். எந்த மக்கள் புலிகளைக் கொண்டாடினார்களோ அதே மக்கள் அவர்கள் மீது கொள்ளும் கோபத்தையும் தலைவர் பற்றிய விமர்சனத்தையும், போராளிகளின் அடாவடித்தனங்களையும் விமானக்குண்டு வீச்சுகளையும் இந்த நாவலில் பதிவுசெய்துள்ளார்.

தனது முதல் இரண்டு நாவல்களிலும் விடுதலைப்புலிகள் பற்றிய சாதகமான அதீதமான கருத்துகளையே பதிவு செய்த தமிழ்க்கவி அவர்கள், தன்னுடைய கடுமையான மாற்றுக்கருத்துகளை இந்நாவலில் பல இடங்களில் முன்வைத்துள்ளார்.

இவ்விடத்திலே சமூகவியலாளரான எமில் டுர்கைம் அவர்கள் தற்கொலையின் வகைமைபற்றிக் கூறுவதற்குப் பயன்படுத்திய "அனோமி" என்பது எம் கவனத்தைக் கோருகின்றது. நியமமறுநிலையின் சமூக நிலைமையே அனோமி எனப்படுகின்றது. சமூக உறவுகளில் நியமம் பின்பற்றப் படாதநிலைதான் அனோமி. குற்றவியல் ஆய்வுகளில் அனோமி என்பது சடுதியான சமூகமாற்றத்தால் ஏற்படும் சமூகசீர்குலைவுகள் எல்லாவற்றையும் குறித்துநிற்கின்றது. அந்தவகையில் போரின் இறுதிநாட்களும் தலைமைத் துவத்துடன் தொடர்புகளற்றுப் போன சூழலும் தன்னிச்சையான முடிவெடுக்கத் தூண்டும் அதிகார மமதையும் இயக்கம் ஒன்றினை நியமமறு நிலைக்கு இட்டுச்சென்றன. இதுவே விடுதலைப்புலிகள் அமைப்பினரின் இறுதிக்கட்ட தவறுகள் சிலவற்றுக்கு அடிப்படையாயின. ஆயினும் இச்சூழல் பற்றிய கண்டனத்தைத் தனது நாவல்வழி தமிழ்க்கவி புலப்படுத்துகின்றார்.

மாற்றுக்கருத்துகள்

"உந்தத் தனிநாடு ஆருக்கு? இஞ்ச நாங்கள் ஓடிக்கொண்டிருக்கிறம். திருக்கிணாமலையில் தமிழன் என்ன செய்து கொண்டிருப்பான்? சிங்களவனோட மீனுக்குப் பேரம் பேசிக்கொண்டிருப்பான். கண்டியில கொழுந்தெடுப்பான். கொந்தரப்புக் கவ்வாத்து வெட்டுவான். கொழும்பில் சினிமாத்தியேட்டரில் படம் பார்க்க வரிசையில் நிற்பான். சூரியன் சக்தி எப். எம்முகள்ள பிறந்தநாள் வாழ்த்து, கலியாண வாழ்த்து நேயர் விருப்பம் எண்டு ரெலிபோனில் கதைப்பான். சூப்பர் ஸ்டாருக்கு எஸ்.எம்.எஸ் அனுப்புவான். கோவில் வழிய தேர்த்திருவிழாவும் கூத்தும் நடக்கும். எந்தத் தமிழனுக்கு தனிநாடு? இல்ல போராடிக்கொண்டிருக்கிறவையள்ள தன்னும் எத்தினை பேருக்கு புலிகளின் தனிநாட்டுக்கை இருக்க விருப்பம்? (119)

புலிகள் பொதுநிர்வாகங்களை ஆரம்பித்த பின்னர் தலைதூக்கிய கீழ்மட்ட ஊழல்களில் மனமிடிந்துபோனார் பாலகுமாரன். இருபது வருட காலத்தில் அவர் எந்தப் பதவியிலும் அமர்ந்தது இல்லை. விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் என்பதோடு சரி. (155)

நீதித்துறை பற்றிய விமர்சனம் (20) கூட இடம்பெற்றிருந்தது.

"அந்த நிலத்தின் சொந்தக்காரர் யாரென்று தெரியவில்லை. அந்த நிலத்தில் வேலிபோட்டு அதைத்தன்னுடையது ஆக்கிய ஒரு தளபதி அதில் ஒரு பகுதியை வேறொருவருக்கு நல்லவிலைக்கு விற்றிருந்தான் (25) என்று புலிகளின் நில அபகரிப்புப் பற்றியும் பேசியுள்ளார்.

"முந்தாநாள் சம்பவம் கேள்விபடயில்லையே...கடவுளே சனம் அடிச்சுக் கலைக்கிற அளவுக்கு நிலமை வந்திட்டுது. அவன் ஒருவன் போட் எடுத்துக்கொண்டு தொழிலுக்கு வெளிக்கிட அவனுக்குச் சுட்டுட்டாங்கள். சுக்..பாக்க மாட்டியள்.. மூளை கொட்டுப்பட்டுப் போச்சு,! சிமியோனுக்கு மருமேன் காரனும் அதிலயே சரி. இப்ப அந்தக் குடும்பம் ஆர்ற நிழல்ல நிக்கற.? பெடியனும் காயமெல்லே.. நீட்டிமுழக்கி அழுவாரைப்போல அவள் குற்றப்பத்திரிகை வாசித்தாள்.

இயக்கஞ்சுட்டதோ...?

பேந்து பறையிறியள்.? ..கூசையும் வந்து பாத்திட்டுத்தான் போறார்.

இது என்ன வேலை ஏதும் பிள்ளைபிடி அலுவலோ?

அதுக்குந்தான். ஆனா மூண்டு பேர் வீண் சாவுதானே? என்றாள் அவள்.

தொழிலுக்குப் புறப்பட்டவர்களை ஆட்களைக் கடத்துகிறார்கள் என்றெண்ணிச் சுட்டிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. விசாரணை எதுவுமின்றி கண்ட இடத்தில் சுடும்படியான கட்டளையை யார் எப்போது இட்டது? (201)

தாயும் தம்பிமாரும் தலையிலடித்துக்கொண்டு கத்தினார்கள். பார்வதி எட்டிப் பார்த்தாள். இன்னொரு பத்துப் பன்னிரண்டு கிலோமீற்றர் பரப்புத்தான் புலிகளிடம் இருக்குது. அதுக்குள்ளும் தினமும் எறிகணைகளும் விமானங்களும் உயிர்களைக் குடிக்கின்றன. இதுக்குள்ள பிள்ளையளைப் பிடிச்சு பயிற்சி கொடுத்து இனிமே சண்டைக்கு விட இவங்களுக்கு அவகாசம் இருக்கா? சும்மா சாகத்தானே போறம் இருக்கிறதுகளையும் முடிச்சுப்போட்டு போவம் எண்டு செய்யிறாங்க போல(226)

பொக்கணைக்கும் ஆனந்தபுரம் பச்சைப் புல்வெளிக்கும் இடையே யுள்ள கண்டல் பற்றைக்குள் படுத்திருந்து அதிகாலையில் மலசலங் கழிக்கவரும் இளைஞர்களைப் பிடித்துச் சென்றார்கள். அதிலிருந்து தப்ப இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஓடும் சனங்களின் தொகை அதிகரித்தது. அப்படி ஓடுகிற சனங்களின் மீது வேட்டுகள் தீர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களைக் காப்பாற்ற ஏந்தின துவக்குகள்தானோ? (236)

அங்கால ஓடிவிட்டால் தப்பிவிடலாம் என்ற உயிராசையில் ஓடியவர்கள் புலிகளால் பிடிக்கப்பட்ட சம்பவங்கள் நிறைய. பிடிக்க முடியாதோரின் முதுகுகளை குறிவைத்து புலிகளது துப்பாக்கிகளும் நீண்டன. சொந்தச் சனங்களுக்குப் பலியான நிறைய உடல்கள் மாத்தளன் வைத்தியசாலையில் கிடத்தப்பட்டிருந்தன.

என்ன நடக்குது இஞ்ச? இது யார் போட்ட கட்டளை? வெளியே கேட்கமுடியாது உள்ளம் கொதித்தது. செத்தழிஞ்சு போறதைத் தாங்கலாம் ஆனா யாருக்காகப் போராடினாங்களோ யாருக்காகத் தங்களைக் கொடுத்தாங் களோ அந்த சொந்த மக்களிட்டையே ஏச்சும் பேச்சும் திட்டும் வாங்கிக் கொண்டு அழியப்போறாங்களே? வரலாற்றில இந்தக்கறை அழியவே அழியாது. (252)

இந்த ஊழிக்காலம் முழுவதும் இடம்பெயர்ந்து கொண்டும் பதுங்கு குழிக்குள் இருந்துகொண்டும் உணவுக்காகப் போராடிக்கொண்டும் புலிகள் மற்றும் இராணுவத்தினரிடம் இருந்து தப்பித்துக்கொண்டும் அவலத்தை மூட்டையாக்கிச் சுமந்துகொண்டே ஓடும் மக்களையே காட்டுகின்றார். தமிழர்களின் தொடங்கிய போராட்டம் வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் போராடிக்கொண்டே இருக்கும் தேவையைக் காட்டி நிற்கின்றார்.

வீடு மாற்ற அவலம்

அவள் பிறந்த ஊரை, பூர்வீக மண்ணைத் தனது நாற்பத்தியிரண்டாவது வயதில் விட்டுவந்தாள். இருபது வருடங்களாகிவிட்டன. இந்த வருடங்களில் பதினேழுவீடுகள் மாறியாயிற்று. ஒவ்வொரு இடமும் இராணுவ நடவடிக்கைகளை அடுத்தே மாறவேண்டியிருந்தது. இந்தவீடும் ஊருமாவது சாகும்வரை சொந்தமாக இருக்கவேண்டும் என்று பார்வதி எண்ணிக் கொள்வாள். (36 -37)

கிளைமோர் கண்ணிவெடிகள்

வன்னிவீதியெங்கும் கிளைமோர் கண்ணிவெடிகள் பல பெறுமதியான உயிர்களைப் பலிவாங்கியிருந்தன(37)

புவியியல் வரைபடமாகும் எழுத்து

மல்லாவிக்கு ஏ 9 பாதை வழியாக மாங்குளம் வரை சென்று மேற்கே பதினைந்து கிலோமீற்றரில் அடையும் வழியும், கனகபுரம் வீதி வழியே அக்கராயன்குளம் ஸ்கந்தபுரம் வழியாகத் தெற்கே திரும்பிச் செல்லும் வழியும் முறிகண்டி கடந்து கொக்காவில் சந்தியில் திரும்பி ஐயன்கண்குளம், புத்துவெட்டுவான் வழியாக ஆலங்குளம் கடந்து செல்லும் வழியும் உண்டு. அனைத்துப் பாதைகளிலுமே கிளைமோர் கண்ணிகள் வெடித்திருந்தன. இவ்வழிகளில் செல்லும் ஏதோவொரு பேருந்தில் ஏறித் துணுக்காய் கிராமத்தில் இறங்கி அருகே பனங்காமம் வீதியில் தெற்கு நோக்கி நடந்தால் ஒன்றரைக் கிலோமீற்றரில் பாலியாறு குறுக்கிடும். பெரிய இரும்புப் பாலத்தினூடாக அதனைக் கடந்தால் பாலியம்மன் கோயில். பிறகு பெரும் வயல்வெளி பச்சைப் பசேலென வரவேற்கும்.வயல்வெளியின் முடிவில் வரும் சின்னஞ்சிறுக் குடியிருப்புக் கிராமம் ஒட்டங்குளம். (37 -38)

உண்மையான பெயர்களைச் சொல்லும் இடங்களில் அந்தச் சூழமைவில் வெளிப்படும் கருத்தைச் சொல்லும்போது காழ்ப்புணர்வுடன் சொல்லப்படுகிறதோ என்ற தொனியையும் தந்துவிடுகின்றது. (சத்திய மூர்த்தியின் மனைவி பற்றி வரும் விடயங்கள்)

இவரிடம் காணப்படும் அஞ்சாமை - ஒளிவு மறைவற்ற வகையில் சில செய்திகளைக் கொண்டுவந்து சேர்த்துவிடுவதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். தமிழ்க்கவியின் எழுத்துகள் இனவரைவியல் ஆவணமாகவும் இனமொன்றின் சுதந்திரவேட்கையையும் அவை தேய்ந்து மௌனமாகிப் போன சோகத்தையும் காலத்தின் சாட்சியாய் நின்று சொல்கின்றன என்பதற்கு ஊழிக்காலமும் சான்றாகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்தின்ற வாழ்வின் ஒரு தெறிப்பே நடுகல்




■ தி.செல்வமனோகரன் ■

ஈழத்தின் ஆயுதப்போராட்டம் மௌனித்த பின்பும் போர் பற்றிய, போர் தந்த வடுக்கள் நிறைந்த வாழ்வு பற்றிய பதிவுகள் இன்றுவரை வெளிவந்தவண்ணமே உள்ளன. அவை அதிலிருந்து மீளமுடியாத ஆழத்தின் ஆழத்துள் புதைந்து போன தன் வாழ்வை, இருப்பின் ஆதாரத்தை, அடையாளத்தை, அர்த்தப்பாடு மிக்க கனவை எண்ணி எண்ணி ஏங்குகின்றன. இவ்வேக்கம் விரக்தியாக, கோபமாக பல்வேறு பரிணாமங்களைப் பெறப்பெற அது தேசியத்துக்கு எதிரானதாகவும் சார்பானதாகவும் இரண்டுமற்ற இரண்டுமாய் படர்க்கைத் தன்மையோடு கலையுருப்பெறுகின்றது. ஒரு படைப்பு என்பது தான்தோன்றும் சமூகத்தினதும் அதன் பல்வேறு கூறுகளின் தளங்களினின்றும் மேற்கிளம்புவதாகும். போர்காலத்திலும் போருக்குப் பின்னருமான இலக்கியங்கள், ஈழத்தமிழர்களின் வாழ்வை, கருத்தியலை, படைப்பாக்கத்திறனை வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்த வகையில் போரிலக்கியம் போரின் சாட்சியமாக, ஆவணப்பதிவாக மாறிவிடுகிறது.

ஈழத்தில் ஆயுதப் போராட்டத்தின் மௌனிப்பு என்பது சொற்களால் விபரிக்க முடியாத மனிதப் பேரவலத்தின் வலிகளைச் சுமந்த ரணங்களாலான வாழ்வின் பேரடையாளமாயிற்று. அதேவேளை அம்மௌனிப்பின் பின்புலத்தில் ஈழத்தமிழர்கள் மீது நிலவியல், மதவியல், இனவியல், பொருளியல், அரசியல், வரலாற்றியல், கலை, கலாசார பண்பாட்டியல், உளவியல், எனும் பல தளத்திலான போர் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. போரின் காலத்திலும் அதன் பின்பும் கருத்தியல்கள் தனிமனித அடிப்படையில் வேறுபடுகின்றன. இக்கருத்தியல் முரண்நிலைக்கு தனி மனித இருப்பு, குடும்பம், பொருளாதார தேவை, அரசியல் நிலைப்பாடு, யுத்தம் தந்த அனுபவம் எனப் பல காரணங்கள் பட்டியற்படுத்தப் படுகின்றன. இறுதி யுத்தம் தந்த மனிதப்பேரழிவு, மனிதாபிமான அழிவு, கூட்டுச்சதி, துரோகம், கணக்கற்றுப் போன மரணங்களும் அவை தந்த ரணங்களும், பிணங்களுடனான வாழ்வு, மரணத்தை நெருங்கிய அல்லது மரணவனுபவத்தை வழங்கிய வலி நிறைந்த வாழ்வு, யுத்த நிறைவின் பின்பான முகாம்கள் தந்த வாழ்வு, நிர்க்கதி எனத் தொடரும், வாழ்வாகிப்போன துயரம் தந்த அனுபவங்கள் கருத்தியல் தளத்தில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தின.

ஈழத்தின் யுத்தச் சூழல், அது தந்த வாழ்வியல் அவலமும் அனுபவமும் பல்வேறு தளத்திலான படைப்பாளிகளைத் தமிழுக்குத் தந்தது. ஒடுக்கு முறையை, யுத்தத்தை பாடிய தலைமுறை எண்பதுகளில் உருவாகியது என்றால் தொண்ணூறு களிலும் பின்பும் உருவான படைப்பாளிகள் யுத்தத்தின் அதன் வலியில் வழிவந்தவர் களாக உருவானவர்கள். யுத்தத்தின் அவலத்தை கொடூரத்தை, இனமதவாத, அரசியலை, துக்கத்தின் துக்கத்தாலான சொற் களால் படைப்பாகத் தந்து கொண்டி ருந்தவர்கள் யுத்தம் ஓய்ந்ததன் பின் தத்தமக்கான தளத்தை நோக்கி நகர்கின்றனர். இந்தச் சூழலில் தமிழர்தரப்பு நியாயத்தை, ஒடுக்கப்பட்டவர்களின் குரலாக, அரசியல் அநாதைகளாகச் சொந்தத்தேசத்திலேயே ஏதிலிகளாக்கப்பட்ட மக்களின் இருப்புச் சார்ந்து நிற்க முடிவெடுத்தவர்களில் ஒருவராகத் தீபச்செல்வன் திகழ்கிறார்.

தீபச்செல்வனின் புறச்சஞ்சாரமும் அகச்சஞ்சாரமுமான எழுத்துக்கள் குறித்த மையத்தில் இருந்து உருவாகும் பல்வேறு தெறிப்புக்களாகவே உள்ளன. குறித்த மையம் என்பது யுத்தம் தந்த வலிமிகுந்த வாழ்வாகவும் தமிழர்களின் அபிலாசைகளாகவும் அமைந்துள்ளது. அம்மையத்தை விட்டு விலகி படைப்புமனம் வேறெங்கும் சஞ்சரிக்க வில்லை. அலைவுறவுமில்லை அல்லது அந்த சஞ்சாரங்களையும் அலைவுறுதல்களை யும் அவற்றின் வழி உருவான படைப்புக்களையும் திட்டமிட்டோ அன்றி திட்டமிடா மலோ அவர் வெளியிடவும் இல்லை. இது படைப்பின் அரசியலாகவும் இருக்கலாம். வெளிவந்திருக்கும் படைப்புக்கள் யாவும் தமிழரின் தாயகநிலத்தில் ஆழ,அகல வேரூன்றி பெருவிருட்சமாய் வளர்ந்து காண்பிய மொழியின் வழி மையத்தினின்றும் இழையறாமல் தம்மை வெளிப்படுத்துகின்றன. யோகேந்திரநாதன், குணா கவியழகன், வெற்றிச்செல்வி முதலான இன்னும் சிலரும் இந்த அணியில் இணைந்து கொள் கின்றனர். மிகப்பிற்காலத்தில் குணாகவியழகனின் எழுத்துக்கள் எல்லா வாசகப்பரப்பி

பொது நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் அதிக கவனத்தைப் பெற்றிருந்தாலும் யுத்த சிதைவினதும், உருக்குலைத்த வாழ்வினதும் சாட்சியமாய், குரலாய், ஆவணமாய், நினைவிடைத்தோயும் கழிவிரக்க மாய் உலக அரங்கில் அதிக கவனத்தைக் கோரியவை தீபச்செல்வனின் படைப்புக்கள் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. தீபச்செல்வனின் ஆரம்ப அரசியல் நிலைப்பாடு தொடர்பாக வாய் வழி விமர்சனங்கள் பல இருந்தாலும் படைப்புக்கள் குறித்து பல்வேறுவிதமான மதிப்பீடுகள் இருந்தாலும் வணிகரீதியிலும் சாதாரண சனங்களில் வாசிப்பிலும் தீபச்செல்வன் தனித்த அடையாளத்தைப் பெற்றிருக் கின்றமை மறுக்கமுடியாத ஒன்றாகவே காணப்படுகின்றது. ஊடகத்துறை சார்ந்த அவரது பயணம், தொடர்புறும் திறன் தமிழகத்திலும் புலம்பெயர் தமிழர்களிடமும் அவரை வேகமாகப் பிரபல்யப்படுத்தின. அவரின் படைப்பு வேகம், எழுதிக் குவிக்கும் எழுத்துக்கள் என்பனவற்றின் ஊடாக அவர், துயருண்ட ஈழத்தமிழ்த் தேசத்தினதும் தேசியத்தினதும் பேரடையாளமாகத் தன்னை உருநிலைப்படுத்திக் கொண்டார். அடையாளப்படுத்தப்பட்டார்.

தீபச்செல்வனின் எழுத்துக்களில் புதிய கண்டடைதல்கள் இல்லை யெனினும் ஈழத்தமிழர்களின் ஆத்மார்த்த உணர்வுகளை, தமிழ்த் தேசியம் சார்ந்த குரலாக, ஈழத்தின் நான்காம் கட்டப்போரினதும் அது உருவாக்கிய பெருஞ்சிதைவினதும் சாட்சியாக, ஆவணமாகத் திகழ்கின்றன. அதனால் அவை மிகுந்த சமூகப் பெறுமானத்தைப் பெறுகின்றன. தீபச்செல்வனின் படைப்புக்கள் போரில் கருகி ஒழுகி வழிந்தோடிய தசைகளின் நிணணீராய், குருதியாய் எழுந்து மனமூடங்களைத் திறக்கின்றன. திட்டமிட்டு அடைக்கப் பட்ட மூளைகளிலும் மனங்களிலும் கூட அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன.

நாவல் எனும் படைப்பு வடிவம் வாழ்வியற் புலத்தில் ஏற்படும் சிக்கல்களை பிரத்தியட்சப்படுத்தி அவற்றின் விரிவை தொடவல்ல சாத்தியப் பாடுகளை உடையதாக இருக்கும். நாவல் வரலாற்றை முன்னிறுத்துவதாக மார்க்ஸியவாதிகளும் காலத்தை ஆதாரசுருதியாகக் கொள்வதாக இருத்தலியலாளர்களும் என கோட் பாட்டாளர்கள் தத்தம் கருத்தியலுக்கேற்ப நாவலை விளக்கமுற்படுவர். நாவல் அனுபவங்களின் தொகுப்பு, அகப்புற சஞ்சாரங்களின் வழி கட்டமைக்கப்படு கின்றது. அனுபவ இடைவெளிகளில் உள்ள மௌனமே அதன் பேரியக்கம். வாசகர் அம்மௌனவெளிகளில் சஞ்சரிப்பாராயின் அதுவே இந்நாவலின் வெற்றி. நாவல் என்பது வடிவமற்ற வடிவம் தான். அது வாழ்வு முழுமையையும் கொண்டு காலம், இடம், கடந்து ஜீவிதம் செய்கிறது. நாவலின் அடிப்படை தத்துவம் என்பர். தத்துவத்தின் அடிப்படை விவாதம். இவ்விவாதம் நாவலில் மானுடசிந்தனையின் குறுக்குமுகமாக அமைகிறது. இதன் வழி நாவல் தரிசனமாகிறது. (காட்சி) அத்தரிசனத்தின் வழி வாசகர் தொடர்புறுகின்றார்.

*2009* இல் யுத்தம் மௌனித்ததன் பின் தமிழ்க்கவி, சயந்தன், குணாகவியழகன், யோகேந்திரநாதன், வெற்றிச் செல்வி, சோபாசக்தி , தமிழ்நதி, ஆதிலட்சுமி, தாமரைச் செல்வி எனப் பலர் நாவல்களைத் தமிழுக்குத் தந்தவண்ணம் உள்ளனர். இப்பட்டியலில் தீபச்செல்வனும் இணைந்து கொள்கிறார். நடுகல், பயங்கரவாதி எனும் இருநாவல்களை அவர் தந்துள்ளார். அவை வெளிவருவதற்கு முன்பே இலங்கை அரசினதும் தமிழர்களினதும் அதிக கவனத்தைக் கோரின. தலைப்பு மற்றும் அவை பற்றிய எதிர்வு கூறல்களும், அறிக்கைகளும் அதற்குக் காரணங்களாக இருக்கலாம்.

தமிழர் தொல்வரலாற்றில் முதன்மைபெற்ற செயல்நிலை மற்றும் வழிபாடாக நடுகல் திகழ்கிறது. அது போரில் இறந்த வீரனுக்கு முன்னோருக்கு அளிக்கப்படும் மரியாதையாகவும் இறைநிலைப்படுத்தலாகவும் அமைந் துள்ளது.

"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிரேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
நெல்லுக் குத்துப் பரவுங் கடவுளுமிலவே"

எனும் மாங்குடிக்கிழாரின் வரிகள் வீரவணக்கத்தின் பாற்பட்டன. வீரர் கடவுளாக்கப்படுகிறார். இதையொத்த மரபு நவீன காலத்தில் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி தொட்டு இன்றுவரை ஈழத்தமிழர் பிரதேசத்திலும் வலுவான குறியீடாக, வழிபாடாக நின்று நிலவி வருகின்றது.

தீபச்செல்வனின் "நடுகல்" நாவல் போர் தின்ற வாழ்வை அடிப்படை யாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அண்ணன் தம்பிக்கிடையிலான உறவை யுத்தத் தோல்வியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. யுத்தத்தோல்வியும் அதன் பின்பான தமிழர்நிலையையும் இந்நாவல் புலப்படுத்தி நிற்கின்றது. *1996 2013* இடைப்பட்ட வாழ்வைத் தன் காலமாகக் கொள்ளினும் இந்திய இராணுவக் காலத்தையும் நினைவு கூருகின்றது. இறுதியுத்தத்தைப் பின்புலமாகக் கொண்டு போராளிகள், போர்நிகழ்ந்த மண்ணில் வாழ்ந்த மக்கள், அவர்கள் அடைந்த அவலங்கள், உயிரிழப்புக்கள், அலைக் கழிக்கப் பட்ட வாழ்வு, யுத்த பூமிக்கு வெளியில் இருந்த மக்கள் அவர்களின் துயரங்கள், உறவிழப்புக்கள் என அகன்ற தளத்தில் இந்நாவல் கட்டமைக்கப்பட்டுள்ளது. நனவோடை உத்தியை அதிகம் கையாண்டு படைக்கப்பட்டுள்ள இந்நாவல் யதார்த்தத் தளத்தில் நேரடியான சம்பவச் சித்திரிப்புக்களின் வழி எழுதப் பட்டுள்ளது.

நம்பிக்கை இழப்புக்களை ஏற்படுத்திய கடந்தகாலத்தையும் நிகழ் காலத்தையும் காலால் மிதித்து நின்று நம்பிக்கை தரும் எதிர்காலத்தை அவாவி கட்டமைக்க முற்படும் மனதை இந்நாவலில் காணமுடிகிறது. வெற்றிக் களிப்புக்களின் வழி வரும் முறையில் மாறி அழிக்கப்பட்ட வாழ்வின் ஊடாக கடந்த வரலாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகள் மீட்கப்பட்டு சேகரிக்கப்படுகின்றன. இங்கு நடுகல் மாவீரர்களினதும், போராட்டத்தினதும், தோல்வியினதும், நினைவு களினதும் மனவடுவினதும் குறியீடாகி நிற்கின்றது. துயிலுமில்லங்களை உழுது அழித்த ஆக்கிரமிப்பாளரின் மனநிலையை வெளிப்படுத்துகின்றது. மேலும் மேலும் ஒடுக்கப்படும் தமிழர் வாழ்வை, நினைவு கூறலுக்கே இடமற்றுப் போன தேசத்தில் சுயநிர்ணயத்தை, சமஷ்டியை, சுதந்திரத்தை, சம வாழ்வை அவாவி நிற்றலின் அர்த்தமற்ற தன்மையை அது புலப்படுத்து கின்றது.

யுத்தப் பேரினவாதத்தை யுத்த முடிவின் பின் சிறுவர்களின் பார்வை யில் பேசும் நாவலாக இது அமைந்துள்ளது. வினோதன் எனும் சிறுவனின் அகப்புற சஞ்சாரங்களின் வழி இந்நாவல் கட்டமைக்கப்படுகின்றது. சிறுவர்களின் நட்புக்கள், ஆண்,பெண் வேறுபாடற்ற வாழ்வு, விளையாட்டு, அண்ணா தம்பிக்கிடையிலான உறவு என அவர்களின் உலகம் அழகானதாய் அமைந்துள்ளது. ஷெல்துண்டு பட்டு பாடசாலையில் வெள்ளையாடை செங்குருதியால் முழுமையாக நனைய இறந்து போகும் பூங்குன்றனின் மரணம் தரும் வலி அவன் மனதில் ஆறாவடுவாகப் பதிகிறது. போராட்டத்துக்குச் செல்லும் அண்ணனைத் தடுக்கும் தம்பியின் பாசம் அண்ணன் வீரச்சாவடைந்த போது தம்பி படும் துயரம் அண்ணன் விதைக்கப்பட்ட நிலத்தை - இடத்தைத் தேடிநிற்கும் அவலம், நடுகல்லுக்காய் அவன் படும்பாடு என்பன வாசகமனத்தில் பெருந்துயரந் தரவல்லன.

வடக்குக் கிழக்கில் மட்டுமல்ல மலையக மக்கள் கூடத் தமிழர்களாய்ப் படும் அவலத்தை தீபச்செல்வன் பதிவிடுகின்றார். நுவரெலியாவில் இருந்து கலைக்கப்பட்டு கனகபுரம், கோணாவில், ஸ்கந்தபுரம் வரையான இடப்பெயர்வுகள் முள்ளிவாய்கால் வரையான இடப்பெயர்வுகள் அவற்றின் வழி உருவான மரநிழல் வீடு, சேலையே கூரையாகவும், அடைப்பாகவும் மாறிய வாழ்வு, அவலம் எனப்பல உபகதைகள் இடம்பெறுகின்றன. வீடு என்பதன் முக்கியத்துவத்தைத் தன்னடையாளமாக அது அமைவதை நாவல் பதிவு செய்கின்றது. போராளிகளின் பன்முகத்தன்மைகள், அன்பு, கடமையுணர்வு என்பனவும், "விதைக்கப்பட்டவர்கள் ஆழ்ந்துறங்க பெரும் அமைதியில் உறைந்திருந்தது துயிலும் இல்லம். அது கோயில்" முதலான பதிவுகளும் குறிப்பிடத்தக்கன. இங்கு அரச ஒடுக்குமுறையை யுத்த கால ஒடுக்குமுறை, யுத்த ஓய்வின் பின்னான ஒடுக்குமுறை என இரு தளங்களில் நாவல் வெளிப்படுத்தி நிற்கின்றது. மக்கள் மீதான குண்டு வீச்சுக்கள், ஷெல் வீச்சுக்கள் மட்டுமல்ல பொருளாதாரத் தடை என்பது யுத்த கால ஒடுக்குமுறையின் பெருவடிவம் ஆகிறது. முகாம் வாழ்வும், பாலியல் வன்கொடுமைகளும், நல்லிணக்கம் பற்றி வாய்ச் சொற்களும், நில ஆக்கிரமிப்புக்களும் யுத்த ஓய்வின் பின்னரான ஒடுக்கு முறைக்குதாரணங்களாக நாவல் பதிவிடுகிறது. இதனை, "மனிதாபிமானப் போர் என்ற பெயரில் இன அழிப்புப் போர். போராளி இனத்தை அழிப்பதற்கு புனர் வாழ்வு என்று பெயர்" என "சிங்க பண்டார" எனும் பாத்திரத்தினூடாக ஒடுக்கு முறையின் வடிவங்கள் - முறைமைகள் விளக்கப்படுகின்றன.

அதேவேளை தீபச்செல்வன் தமிழினத்தின் இருப்பிற்கு கல்வியின் அவசியத்தை அறிவுத் தெளிவை முன் வைக்கிறார். இலங்கை வரலாற்றுப் பாடநூல் ஊடாகச் செய்யப்படும் வரலாற்று மோசடியை "பூரணி ரீச்சர்" என்ற பாத்திரத்தி னூடாக நாவல் முன்வைக்கிறது. யுத்த அழிவு என்பது வெறுமனே பௌதிக அழிவு மட்டுமல்ல ஆளுமைகளின் அழிவுமாகிறது.

தமிழர்களின் வரலாறு துரோகங்களால் மாற்றியமைக்கப்படும் வரலாறு எனலாம். வென்றவரெவராயினும் அவர் பக்கமே எப்போதும் இருக்கும் சுயநலமிகளின் அடையாளமாக "நேசராஜ்" எனும் பாத்திரம் நாவலில் காணப்படுகிறது. "இப்ப ஆமியோட ஈயும் பீயும் மாதிரி" என வரும் நேசராஜ் பற்றிய வரி வலிகளாலும் அவ்வலி தரும் கோபம், அச்சம், இயலாமையால் வரும் வசையாகவும் அமைந்திருக்கிறது. யுத்தத்தின் பின் மீண்டெழும் நகரத்தை அதன் வாழ்வின் புலத்தைக் காட்டும் அதேவேளை "ஆயுதப் போராட்டம் முடிந்தது. ஆனால் போராட்டம் முடியவில்லை" என்ற கருத்தியல் ஆழப் பதிவு செய்யப்படுகின்றது. நடுகல் தன் காலத்தில் பயன்படுத்தப்பட்ட பழமொழிகள், முன்னொட்டாய்ப் பட்டங்களை உடைய பெயர்கள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது. இந்நாவல் இயல்பு மொழியில் அமைந்துள்ளது. தேவையற்ற வர்ணனைகள் இன்றி நேரடியான விவரணங்கள் காட்சிப்படுத்தல்கள் அமைந்துள்ளன.

ஜனரஞ்சக வாசிப்புக்குரிய மொழியில் யாவருக்குமான படைப்பாக இது அமைந்துள்ளது. தன்னுடைய அனுபவத்தளத்தினின்றும் வருவதால் சுயசரித்திரத் தன்மையை அதிகம் காணமுடிகிறது. அதேவேளை காலத்தை குலைத்துப் போடுதலும் வலியை வீரியமாக்குதலும் இந்த நாவலை நோக்கி வாசகரை ஈர்க்கின்றன. ஒரே தரத்தில் வாசிக்கக் கூடியதாகவும் வாசகரைக் கஷ்டத்துக்குள்ளாகாத சொற்களை உடையதாகவும் கட்டமைக்கப்பட்டதால் பரந்த வாசகரைச் சென்றடைந்துள்ளது. அதேவேளை நாவல் அதன் இலக்கியத்தரம் என்ற அடிப்படையிலான ஆய்வியற் புலத்தில் சிந்திக்கு மிடத்து பாத்திர உருவாக்கம், கதை வளர்ச்சி சார்ந்த சில சிக்கல்கள் நிகழ்ந்துவிடுகின்றன. பாத்திர வளர்ச்சி கதையினது கருத்தின் வளர்ச்சியாக இன்றி கருத்து நிலை துருத்திக் கொண்டு நிற்பதையும் நாவலுக்கான காலம், பகைப்புலம் என்பன போதைமைகளுடன் எடுத்துரைக்கப்பட்டிருத்தலையும் குறுநாவல் தன்மையோடு காணப்படுவதாகவுமே கருதமுடிகிறது. தீபச்செல்வனின் எழுத்துக்கள் அல்லது படைப்பு வெளி குருதியால் தோய்ந்தது. யதார்த்தத் தளத்தில் சம்பவங்களை வேகமாக முன் வைப்பதும் ஊடக அசுரத்தனத்துக்கு ஏற்ப படைப்புக்களை வெளிக் கொணர்வதும் வடிவவியல், அழகியல் போதாமைகளை அதிகம் தந்து விடுகிறது. தீபச்செல்வன் அவற்றில் கவனம் செலுத்துதல் காலத்தில் மட்டும் நிற்காது காலத்தை வென்று நிற்கும் படைப்புக்களையும் நல்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு போராளியின் தன் வரலாறாக சாந்திநேக்கரம் படைத்த "உயிரணை" நாவல்



■ சிவ. ஆருரன் ■

சாந்தி நேசக்கரம் அவர்கள் யாழ்ப்பாணம் குப்பிழான் கிராமத்தில் பிறந்து தற்போது ஜேர்மனியில் வசித்து வரும் ஒரு சமூக செயற்பாட்டாளரும் எழுத்தாளரும் ஆவார். பள்ளி மாணவியாக தனது பதின் மூன்றாவது அகவையில் தியாக தீபம் திலீபனின் உண்ணாவிரத மேடையில் எழுச்சிக் கவிதை பாடியதன் மூலம் 1987இல் இலக்கியவானில் சஞ்சரிக்கத் தொடங்கியவர். பின்னாளில் தியாகி திலீபனின் இயற்பெயரான பார்த்திபன் என்ற பெயரையே தனது புதல்வனுக்கும் சூட்டியவர். தற்போதும் இலக்கிய வெளியில் இயங்கி வரும் சாந்தி நேசக்கரம் அவர்கள் ஐந்து கவிதைத் தொகுப்புகளையும் "உயிரணை" எனும் நாவலையும் "நிழற்குடை" (2022 தடாகம் வெளியீடு)என்ற சிறுகதைத் தொகுப்பையும் வெளியீடு செய்துள்ளார். "உறவுகளுக்கு உதவுவோம் - In aid of our kids" எனும் சுலோகத்துடன் கூடிய "நேசக்கரம்" என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றினை நடத்தி வருகிறார். போரால் பாதிக்கப்பட்டவர், அரசியற் கைதிகள் நலனில் தொடர்ந்தும் கரிசனையோடு செயற்பட்டு வருபவர்.

ஆசிரியரின் கன்னி நாவலான "உயிரணை" 2016 இல் பூவரசி வெளியீடாக வந்திருக்கின்றது. உருவ ரீதியில் நாவல் மூன்று பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.

1. மேவுதல் - விடுதலைப் புலிகள் ஈட்டிய வெற்றிகள்
2. கரைதல் - விடுதலைப் புலிகளின் தோல்வி
3. அவாவுதல் - போராளிகள் உதிரிகளாக மாறல்

மேற்படி மூன்று கட்ட வரலாற்றுப் படிநிலையில் ஆதித்தன் என்ற போராளியின் செயற்பாடு எவ்வாறு அமைந்திருந்தது என்பதே நாவலின் மையக் கதை. காற்றில் அலையும் சருகினுடைய நிலையேஅவனின் நிலை. சருகு இயங்க வேண்டிய திசையைத் தீர்மானிப்பதுகாற்றே ஒழிய அந்தச் சருகல்ல. அதே போல காலச் சூழலே ஆதித்தனின் இயக்கத்தினைத் தீர்மானிக்கிறது. சிறப்பாகக் கதை சொல்லப்பட்டிருக்கிறது. ஒரே மூச்சில் படித்து விடக் கூடிய எழுத்தோட்டம். சிறந்த தகவல் திரட்டு.

01.நாவலில் காணப்படும் சம்பவச் சித்தரிப்பு

1. மேவுதல்

2000 ஏப்ரல் குடாரப்பு தரையிறக்கம். RPG கொமாண்டோ அணியில் ஆதித்தனும் ஒருவனாகிறான். கதை இவ்வாறு ஆரம்பித்த விதம் நன்றாக விருக்கிறது. யாழ் மீட்புப் போர் தித்தன் உட்பட சில போராளிகள் படையினர் பகுதியில் சிக்குகின்றனர். மூன்று மாதங்கள் அங்கு மறைந்திருந்து தாக்குதல்நடாத்திவிட்டு மீண்டும் வன்னிக்குவந்து சேர்கின்றனர். ஆழ ஊடுருவும் படையணி ஒன்று உருவாக்கப்படுகிறது. அதற்கு வெளிநாட்டு நபர்கள் (முன்னாள் படை அதிகாரிகள் வந்து பயிற்சியளிக்கின்றனர். அப்படையணியில் ஆதித்தனும் இருக்கிறான். ஒரு சில நடவடிக்கைகளில் ஈடுபடுகிறான். நோர்வே தலையீட்டுடனான சமாதான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன.

2. கரைதல்

2002 சமாதான ஒப்பந்தம். கல்விக் குழுவிற்கு ஆதித்தன் அனுப்பப்படுகிறான். நவம் அறிவுக் கூடத்தில் பணி செய்கிறான். க.பொ.த சாதாரணப் பரீட்சையில் சித்தியடைகிறான். நந்தவன ஊடக போராளியா கிறான். கடற்புலிகளோடும் சில காலம் இணைந்து பணி செய்கிறான். போர் மீண்டும் ஆரம்பிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கராயனில் வழிமறிப்புச் சமரில் ஈடுபட்டு விழுப்புண் அடைகிறான். அவனின் வைத்தியசாலை வாழ்வு, முள்ளிவாய்க் காலிலிருந்து வெளியேறல் போன்றன விரிவாக சித்திரிக்கப்படுகின்றன.

3.அவாவுதல்

2009 மே விடுதலைப் புலிகள் அமைப்பு கவிழ்க்கப்படுதலுடன் ஆதித்தன் மக்களோடு மக்களாகக் கலந்து வலயம் - 4 இடைத்தங்கல் முகாமிற்கு வருகிறான். போராளிகள் உதிரிகளாகின்றனர். ஆதித்தனின் அக்கா லண்டனிலிருந்து தொடர்பு கொண்டு அவனுக்கு உதவுகிறாள். அவனின் வயிற்றில் ஏற்பட்டிருந்த காயத்திற்கு சிகிச்சை அளிப்பதற்காக களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறான். அங்கிருந்து அவன் தப்பிச் சென்று இந்தியா செல்கிறான். லண்டன் செல்வதற்கான பயண ஏற்பாடுகள் பூர்த்தியாகிய பின் மீண்டும் கொழும்பு வந்து, முகவர்கள் மூலம் லண்டன் செல்லும் விமானத்தில் ஏறுகிறான்.

02. நாவலில் காணப்படும் ஆவணப்படுத்தல்கள்

144 பக்கங்களேயான இந்நாவலில் அரிய சில விடயங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

1. வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் வன்னிக்கு வந்து பயிற்சி வழங்குவது நாவலில் காட்டப்படுகின்றது. பலருக்கும் இது புதிய விடயமாக இருக்கும்.

2. சில பொறுப்பாளர்களின் சிறப்புக்கள் பதிவாகியுள்ளன. சங்கர் (விமான பிரிவு) அவர்களின் செயல்திறம்; கடாபி அவர்களின் பொறுப்புணர்வு; பால்ராஜ், சொர்ணம், பானு, ஜெயம் போன்றவரின் துணிகரச் செயல்கள் போன்றனவுடன் மேலும் சில போராளிகளின் பெயர்கள் புனைவின்றி நேரடியாகக் குறிப்பிடப்படுகின்றன.

3. வைத்தியசாலையில் வைத்தியர் சுயந்தனின் பற்றுறுதியும் அவரின் தீர்மானஞ் செய்யும் ஆற்றலும் பதிவிடப்பட்டுள்ளன (பக் - 100). மேலும் சில அர்ப்பணிப்புள்ள வைத்தியர்களும் இருக்கின்றனர் என்பதும் இவ் விடத்தில் குறிப்பிடத்தக்கது. நாவலுக்கு அவர்கள் அவசியப்படவில்லை.

4. ஆண் பெண் போராளிகளுக்கிடையிலான ஊடாட்டம் பதிவு செய்யப் பட்டுள்ளது. (பக் - 23)

5. நவம் அறிவுக் கூடம் பற்றிய பதிவு (பக் - 77,78). போரில் விழுப்புண் ஏற்று மாற்றுத் திறனாளிகளாக உருமாறியவர்களைப் பராமரிப்பதற்கும், அவர்களின் தகுதிக்கு ஏற்ப வளர்த்தெடுப்பதற்குமான ஒரு நிலையமாக செயற்பட்டு வந்ததே நவம் அறிவுக் கூடம். சிறப்பு பதிவு.

03. நாவலிலுள்ள சில காட்சிகள் மீதான கருத்து

1. ஆதித்தன் உள்ளிட்ட போராளிகள் சிலர் தென்மராட்சிப்பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டினுள் சிக்கிய வேளை அங்குள்ள முதியவர்கள் எவ்வாறு அவர்கள் மீது அன்பு செலுத்தினர் என்பதும், கோயில் பூசகர் அவர்களை எவ்வாறு பாதுகாத்தார் என்பது சிறப்பாகக் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

2. விடுதலைப் புலிகள் அமைப்பு கவிழ்க்கப்பட்ட பின் போராளிகள் உதிரிகளாகி விடுகின்றனர். கிளிநொச்சி இராமநாதபுரம் என்ற கிராமத்திலிருந்து செல்வன் என்ற இளைஞன் போராளியாக மாறிய வேளை அவனின் பெயர் ஆதித்தன். பிறகு போர் முடிந்தவுடன் "அவாவுதல்" பகுதியில் மீண்டும் அவனின் பெயர் செல்வன் எனக் குறிப்பிடப்படு கின்றது. ஆசிரியர் குறிப்பால் உணர்த்தியிருப்பது சிறப்பு.

3. செல்வன் களுபோவிலபோதனா வைத்தியசாலையில் இராணுவத் தினருக்குச் சிகிச்சையளிக்கப்படும் விடுதியில் (ward) அனுமதிக்கப்படு கிறான். தன்னை ஒரு முன்னாள் போராளியென அவன் அங்கு தெரிவிக்க வில்லை. சில நாள்களில் இராணுவத்தினருடன் அவனுக்குப் பழக்கம் ஏற்படுகிறது. செல்வனுக்கும் அந்தக் குடும்பத்தவர் உணவு கொடுத்து மகிழ்கின்றனர் (பக் 120, 121). அங்கு ஒரு பெண்தாதி (சிங்களமாது, 22 வயது) அவனோடு நெருங்கிப் பழகுகிறாள்; அவன்மீது கருணையும் கொள்கிறாள். அவன் ஒரு முன்னாள் போராளி என ஊகித்தறிகிறாள். அவன் வைத்தியசாலையிலிருந்து சட்ட விரோதமாகத் தப்பிச் செல்ல அவள் துணை செய்கிறாள். (பக் 122- 125) யதார்த்தமான பதிவு. உண்மையிலும் இது போன்ற சம்பவங்கள் பல நடந்தேறியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. போராளிகள் குழுவாக படையினர் பகுதிக்குள் நடவடிக்கைக்குச் செல்லுமிடத்தில் சில சந்தர்ப்பங்களில் ஒரு துளி நீர் கூட கிடைக்காத அவதி நிலை ஏற்பட்டுவிடும். தம் சிறு நீரையே தாம் குடிக்க வேண்டிய நிலையும் நிர்ப்பந்தமாகிவிடும். நாவலிலும் இவ்வாறான ஒரு காட்சி வருகிறது. "இம் முறையும் ஆதித்தன் சிறுநீரைக் கழித்துக் குடித்தான்" பக் 59). மேற்படி வசனத்தைத் தொடர்ந்து வருகிறது: "இவன் வயதொத்தஒரு தலைமுறை நாடென்ன வீடென்ன தம் வாழ்வென்று உல்லாச வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்க, இவனும் இவன் போன்று ஆயிரமாயிரம் இளையோர் தன்னினம் தன் நாடென்று சிறுநீர் குடித்து தேச விடுதலைக் கனவில் போராடிக் கொண்டிருப்பதை எந்த ஆய்வாளர்களாலும் உணர்ந்து கொள்ள முடியாது. தேசத்தின் அற்புதங்கள் இவர்கள்." (பக் 59) மேற்படி விவரணம் நாவலுக்கு அவசியமற்றது. என்பதோடன்றி அப்பட்டமான பிரசாரமாகவும் அமைகின்றது. போராளிகளின் தியாகம் பாராட்டத்தக்கது; ஏனைய இளைஞர்களைச் சிறுமைப்படுத்துவது தவறு.

5. பின் தங்கிய கிராமம் ஒன்றில் ஆதித்தன் உள்ளிட்ட போராளிகள் தங்கியிருக்கின்றனர். அவர்கள் குளிக்கச் செல்லுமிடத்தில் மாட்டுக்குத் தண்ணீர் வைக்க ஒரு யுவதி வருகிறாள். "அவள் கறுப்பாகவும் வசீகரமும் அற்றிருந்தாள். அவள் கிணற்றடியில் மினக்கெட்டதையடுத்து அவளுக்கு மைனாக்குஞ்சென்று பெயரும் வைத்தார்கள்..." (பக் 59, 60). அந்த "மைனாக் குஞ்சின்" தாயாரோடு கேலிபேசும் காட்சியும் வருகிறது. மேற்படிச் சம்பவத்தில் போராளிப் பாத்திரங்கள் சரிந்து போகின்றன. அதுவே பாத்திரப் படைப்பு எனின் போராளிப் பாத்திரங்கள் தமக்கே உரிய பலம் பலவீனங்களோடு உள்ளன எனலாம்.

04. தொகுப்புரை

1. பொதுவாக நாவல் ஒன்றைப் படைக்கும் போது ஆசிரியர் படைப்பிற்கும் வாசகனுக்கும் குறுக்கே நிற்காது விலகிவிடுகிறார் என்பர். இந் நாவலில் அப்படி ஆசிரியர் விலகவில்லை. கதாமாந்தரோடு தானும் பயணித்து வாசகர்களையும் பயணிக்க வைக்கிறார். ஆசிரியர் போராளித் தன்னிலையோடு தன்னையும் பொருத்திப் பார்த்துவிடுகிறார். மேவுதலின் போது பெருமை கொள்வதும், சீற்றமடைவதும், பிரசாரம் செய்வதும்; கரைதலின் போது அனுதாபம் கொள்வதும் ஏக்கம் கொள்வதும்; பின்னர் அவாவுதலின் போது கதாமாந்தர் மேல்தயவு காட்டுவதும் நாவலில் தெரிகின்றன.

2. "மக்களைப் பாதுகாப்பதற்காய் புலிகள் அமைக்கும் முன்னணி நிலைகளும், மண் அணைகளும் வெறுமனே இராணுவ பொறிமுறை போல அல்லாமல், உயிர்கொண்டு அமைக்கப்படும் உயிரணையாகவே இவ்எண்ணங்களில் தோன்றும்..." (பக் 14) மேற்படி விளக்கத்திற்கு அமைவாகவே ஆசிரியர் நாவலுக்கு உயிரணை எனப் பெயரிட்டிருக்கிறார்.

3. ஒரே நாவலில் போர் சார்ந்த அனைத்து விடயங்களையும் பதிவிட முடியாது. ஆசிரியரும் தனது முன்னுரையில் (பகிர்தல் பற்றிய புரிதலுக்கு) அதனைக் குறிப்பிட்டுள்ளார். "இது ஒரு காலத்தின் பதிவோ அல்லது, களத்தின் பதிவோ அல்ல. அவற்றின் சில விடயங்களைத் தொட்டுச் செல்கிறது." அப்படிப் பார்க்கையில் நாவல் முழுமையாகவே உள்ளது. "அழிந்து கொண்டிருக்கும் ஒரு வரலாற்றின் விழுதுகளை உயிர்க்க எழுதிச் செல்கிறது உயிரணை" என்ற பின்னட்டைக் குறிப்பிற்கு நாவாலானது நீதி செய்துள்ளது என்று துணிந்து கூற முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.பொன்னம்பலம் எழுதிய சங்கிலியன் தரை நாவல்

■ வரதன் குமார் ■




இந்த நூல் கொழும்பிலுள்ள 'புனைவகம்' வெளியீடாக, 2015 இல் வந்துள்ளது.

இலங்கையில் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை, மாறிமாறிப் பதவிக்குவந்த அரசாங்கங்களால் சுமுகமாகத் தீர்க்கப்படாமல், யுத்தமாகக் கொண்டுசெல்லப்பட்டு - இறுதியில் தமிழ் மக்களின் பெரும் அழிவுகளுடன், 2009 இல் யுத்தம் முடிவுக்கு வந்தது; ஆனால் இனப்பிரச்சினையோ இன்னும் தொடர்கிறது.

யுத்தச் சூழலை மையமாகக்கொண்டு, இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் எழுத்தாளரால் - பல நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் 2009 இற்குப் பின் எழுதப்பட்டு, வெளியிடப்பட்டுள்ளன. எழுத்தாளரின் அரசியல் நிலைப்பாடு சார்ந்து - தமிழ்த் தேசியம், போராட்ட இயக்கம் முதலியனபற்றி எதிர்க் கருத்துகளையே அவற்றில் பல வெளிப் படுத்துகின்றன. வரலாற்று இயங்கியலில் நடைபெற்ற சாதகமான மாற்றம், வளர்ச்சி, பங்களிப்பு எதையும் இவை பேசாது தவிர்ப்பதுடன், நடைபெற்ற தவறுகளை மட்டுமே பெரிதுபடுத்துகின்றன; அதிலும் 'பகுதி' களை 'முழுமை'யெனக் காட்டும் தந்திரத்தையும் கையாள்கின்றன. தங்களின் கடந்தகாலச் செயற்பாடுகளின் தோல்விகளால் மக்கள் மத்தியிலிருந்து காணாமற் போனதன் தாழ்வுச்சிக்கலும் இயலாமையும் - பல்வேறு இயக்கங்கள், பழைமைவாத இடதுசாரிக் கருத்துநிலை சார்ந்த இப்படைப்பாளர் பலரிடம் வெளிப்படுவதையும் உணர முடிகிறது; சூழலுக்கு இயைந்து தம்மை மாற்றிக்காட்டும் பிழைப்புவாத - முன்னாள் 'தமிழ்த்தேசிய' (!) - சந்தர்ப்பவாதிகளும் இவ்வணியில் இணைந்துள்ளனர். இன்னும் முக்கியமாய், கடந்த போராட்டக்கால முக்கிய நிகழ்வுகள், மாற்றங்களின் 'நினைவுகளை அழித்தல்' / 'சிதைத்தல்' என்ற - அக்கறைகொண்ட பல்வேறு ஆதிக்க சக்திகளின் - தந்திரோபாயத் திட்டத்தின் பங்காளராகவும் அவர்கள் உள்ளனர். அதனால், "புனைவு என்பதால் எதனையும் எப்படியும் எழுதலாம்"எனக் கூறும் நோயல் நடேசன் போன்றோரின் படைப்புகளில் காணப்படும் பாலியல் கொச்சைத்தனங்களையும், வேறுவகை வக்கரிப்புகளையும் புரிந்துகொள்ள இயலுமாகிறது! சிறு எண்ணிக்கையில், தமிழ்த் தேசியச் சார்புப் படைப்புகளும் வருகின்றன.

இந்தப் பின்னணியில் 'சங்கிலியன் தரை' நாவலை நோக்கலாம்.

நாவல் எதைச் சொல்கிறது? எப்படிச் சொல்கிறது? அவற்றின் மதிப்பீடு என்ன எனப் பார்க்கவேண்டும்.

அ) நாவல் எதைச் சொல்கிறது?

**1989 - 1995** காலகட்டத்தில் கதை நடைபெற்றாலும், அதற்கு முன்னால் நடைபெற்றவையும் நினைவுகள், உரையாடல்கள்மூலம் சொல்லப்படுகின்றன. அதைப்போல், 1995 இற்குப் பின்னர் - இறுதிப் போர்க்காலச் சூழலை நினைவூட்டும் விதமான குறியீட்டுச் சித்திரிப்புகளும் உள்ளன. உயர்தரப் பரீட்சை (ஏ. எல்.) எழுதிவிட்டுநிற்கும் தவம் புலிகள் இயக்கத்தின் கருத்தரங்கில், அவர்கள் தனிநபருக்குத் தண்டனை வழங்கும் முறையைக் கேள்விக்குட்படுத்துகிறான் (1979 - இல்!). இதனால் அவனது உயிருக்கு ஆபத்தென்பதால், தீவுப்பகுதி ஊடாக மன்னார் சென்று - கொழும்பிலிருந்து பிரான்ஸ் சென்றுவிடுகிறான். பத்துவருடங்களின் பின்னர் 1989 இல் ஊருக்கு - சட்டநாதர் கோவிலுக்கு அண்மையிலுள்ள சங்கிலியன் தரைக்குத் திரும்புகிறான். ஊரில் பரவலாக நடைபெற்றுள்ள வீடுவாசல் முதலிய சொத்து அழிவுகளையும், ஊர்மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றிருப்பதையும் காண்கிறான். அவ்வேளை, பல்கலைக்கழகப் பட்டதாரியான அவனது அக்கா தமிழினி, தனது பக்கத்து வீட்டிலுள்ள நாகராசன் என்ற கட்டட வேலையாளுடன் (இவன் வன்னியில் இயக்க வேலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுகமாக ஈடுபடும் முக்கிய தலைவன்) வன்னிக்கு ஓடிச்சென்று, மூன்று ஆண்டுகள் அவனுடன் வசித்தபின், அவனது சித்திரவதைகள் தாங்காமல் (அவன் அடிப்பான் உதைப்பான், அவளின் நடத்தைபற்றிய சந்தேகத்தில் கேவலமாக ஏசுவான்; அவள் கர்ப்பிணி என்று தெரிந்தும் அவளது வயிற்றில் பல தடவைகள் காலால் உதைந்திருக்கிறான்; அதனால் அவளுக்குச் சில தடவைகள் கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது). அவனைவிட்டுப் பழைய வீட்டுக்குத் திரும்பி வருகிறாள். நாகராசன் வன்னி முழுவதற்கும் பொறுப்பான இயக்கத் தலைவன் என்றும்; தமிழினி "தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையைப் பற்றி ஆதியிலிருந்து அந்தம்வரை யோசித்தவள், தன்னாலான உதவியை அதற்காக செய்யவேண்டும் என்பதில் தீராத வேட்கை கொண்டவளாய் இருந்தாள்; எனவும் சொல்லப்படுகிறது. இடையில் மாற்று இயக்கங்களின் அழிப்பு, பல்கலைக்கழக மாணவர்கள் (விஜிதரன், விமலேஸ்வரன்) கடத்தப்படுதல், கந்தன்கருணைப் படுகொலை, **1990** இல் வடபகுதியிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றம், **1995** இல் யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றம், தமிழினி மகள் சுதந்திரா வுடனும் தம்பி தவத்துடனும் கிளாலி ஊடாக வன்னிக்குச் செல்லல், கிளிநொச்சியில் நிற்கையில், கணவன் நாகராசன் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியின் கண்ணி வெடித் தாக்குதலில் மல்லாவியில் வீரச்சாவடைந்ததைக் கேள்விப்படல், நாகராசன் சூக்கும உடலுடன் தமிழினியுடன் உரையாடுதல் என்பன சொல்லப்படு கின்றன. அவள், அவனது விருப்பப்படி, அவன் இறந்த நாற்பதாம் நாள், வன்னியில் யாககுண்டம் அமைக்கிறாள்; ரிஷிகள், ஞானிகள், தவசிகள் கூட்டமாய்க் குழுமுகின்றனர். பொதுமக்கள், ஏழைகள் பெரும் எண்ணிக்கை யில் வருகின்றனர்; அனைவருக்கும் உணவுத்தானம் வழங்கப்படுகின்றது. ரிஷிகளின் முன்னால் யாககுண்டத்தை மும்முறை வலம்வரும் தமிழினி, திடீரென அதனுள் பாய்ந்து தன்னை ஆகுதியாக்கு கிறாள். அடுத்த வினாடி பேரொளி ஒன்று அங்கே எழுந்து எங்கும் பரவிற்று. அதுவரை சுற்றாடலில் ஒலித்துக்கொண்டிருந்த - யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைவரினதும் அவலக்குரல்கள் மறைந்து, அமைதி நிலவியது. மறுநாள் காலையில் தவம் முன்விறாந்தையில் இருக்கும்போது, சுதந்திரா வந்து அம்மாவை விசாரிக்கிறாள். அவள் உன்னைத் தேடிச் சென்றிருக்கிறாள் என அவன் கூறுகிறான். பிறகு,

//"கவலைப்படாதே அதோ உன் அத்தை சமஸ்தா வருகிறா. அவா உனக்கு விளக்குவா." // என்று சொல்ல,

// அந்தத் திசையில் கண்ணெறிந்து சுதந்திரா ஆனந்தமாக சமஸ்தாவை நோக்கி ஓடுகிறாள். // என்பதுடன் நாவல் முடிகிறது.

ஆ) எப்படிச் சொல்கிறது?

யதார்த்தமாகவும் யதார்த்தமற்றும் நாவல் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் கூற்று, பாத்திரங்களின் சில செயல்கள் / நினைவுகள், தவம் / தாய் / தகப்பன் / தமிழினி ஆகியோரின் 7 இற்குமேற்பட்ட கனவுகள், அசரீரியாகக் கேட்கும் குரல்கள், சூக்கும உடலில் கதைத்தல், தமிழினியின் வரலாற்று விரிவுரையாளரின் நீண்ட விவரணப் பேச்சுப் பற்றிய நினைவு, மட்டக்களப்பிலும் கதிர்காமத்திலுமிருந்து வரும் ரிஷிகள் / ஞானிகள் / தவசிகள் கூட்டமாய்க்குழுமி யாகம்செய்தல், அங்கு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கூடுதல் ஆகியவற்றின் மூலம் கதை சொல்லப்படுகிறது. செழுமையான படைப்புமொழியின்றி வெறுமனே சாதாரண மொழியில் - செங்கை ஆழியான் பாணியில் இவை சொல்லப்படுகின்றன!

இ) மதிப்பீடு

**2009** இல் போராட்டம் முடிவுற்ற பிறகு, கடந்தகாலங்களை நினைவு கூர்ந்து தனது அதிருப்தியான "மதிப்பீட்டுக்" கருத்துகளை முன்வைக்கும் நோக்குடன்தான் இந்நாவலை ஆசிரியர் எழுதினார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. **1995** வரை தான் நாவலின் காலமாக இருந்தாலும், நாவலின் பல அம்சங்கள் இறுதிக் கால கட்டத்தை (**2009**) நினைவுபடுத்துவதாயுமுள்ளன. நாவலின் முக்கிய பாத்திரமான நாகராசன் வன்னி முழுவதற்கும் பொறுப்பான இயக்கத் தலைவன் என்று சொல்லப் படுகிறது. ஒருகட்டத்தில் தமிழினி அவனுக்குச் சொல்கிறாள் : //எமது ஆங்கில விமர்சகர் உன்னைப்பற்றி கூறியபொழுது பின்வருமாறு சொன்னார். "எல்லா இயக்கத் தலைவர்களுக்கும் உன்னைப்போல் பெருந்தலைவனாக இருக்கத்தான் ஆசைப்பட் டார்கள். ஆனால் உன்னிடமிருந்த விடுதலைக்கான அர்ப்பணமும் வீரமும் அவர்களிடம் இல்லை!" (பக். **199**).

கண்ணிவெடியில் கொல்லப்பட்ட அவனது நாற்பதாம் நாள் நினைவு,

//விடுதலைப் போரில் இறந்த எண்ணிறந்த மக்களும் போராளிகளும் ஆவிகளாகத் திரிந்து அல்லல்படுகின்றனர். அவர்களை முன்னர் விவேகானந்தர் செய்ததுபோல் விடுவிக்கவேண்டும். // (பக். **199**) என்ற அவனது விருப்பப்படி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் யாகத்துடன், மிகப்பெரும் எண்ணிக்கையில் மக்கள் கூடும் - அன்னதானம் வழங்கும் நிகழ்வாக, தமிழினியால் ஒழுங்குசெய்யப்படுகிறது. இவை வாசகருக்குக் காலம்பற்றிய தெளிவைத் தரும்.

பெருந்திரள் மக்களைக்கொண்ட ஒரு தேசிய இனத்தின் நீண்டகால அரசியல் வரலாறு, அமைதிவழி - ஆயுதப் போராட்டம் தொடர்பான அம்சங்களைக் கையாள முனையும் ஒரு படைப்பு, தெளிவான புறநிலைப் பார்வையைக் கொண்டிருக்க வேண்டும். பிரதான முரண்பாடு / உப முரண்பாடுகள், எதற்கு எதனைக் கீழ்ப்படுத்துவது, பகுதியும் / முழுமையும், நட்பு விமர்சனம் / எதிரிகளுக்கான விமர்சனம் போன்ற வற்றில் தெளிவான பார்வை வேண்டும். ஆனால், ஆசிரியர் அகவயப்பட்ட ஆன்மிகக் கருத்துமுதல்வாதியாக இருப்பது, அவரது பார்வையைப் பலவீனமாக்குகிறது. அதனால்தான் சித்தர்கள், ரிஷிகளை உதாரணப்படுத்தல், அம்மன் / மாகாளியுடன் உரையாடல், சூக்கும உடலில் கதைத்தல், யாககுண்டம், யாகம் என்று கற்பனாவாதச் சித்திரிப்புகளைச் செய்கிறார். // அந்த யோகர் சுவாமி, குழந்தைவேற் சுவாமி, கடைய(யி)ற்சுவாமி, குடைச்சாபி(மி) என்றுவரும் ஞானபரம்பரையால் வழிப்படுத்தப் பட்டு வந்த நேர்மையும் அதன் உரமும் நெறியும் நம் விடுதலை போராளிகளுக்கு இருந்ததா? இல்லை. // என்கிறார்.

// ... "நீங்கள் இருக்கும் இடங்கள் விடுதலைப் போராளிகளின் முகாம்கள் அல்ல பொய்யர்களின் கூடாரங்கள்" // என்கிறார். யாழ்ப்பாண மக்கள் சுயநலவாதிகள், வீரமற்றவர்கள் என்றும் எள்ளலுடன் குற்றம் சாட்டுகிறார்! பூரண தூய்மைவாதப் போக்கும் தென்படுகிறது. ஆனால், "சூரியனுக்குக் கீழ் பூரணமானது எதுவுமில்லை!" என்ற தொடரையோ, "சுத்தமான புரட்சி உலகில் எங்கும் நடைபெறவில்லை" என்பதையோ மறந்துவிடுகிறார்! ஆயினும், தவறுகள் இயன்றவரை தவிர்க்கப் படவேண்டும் அல்லது குறைக்கப்பட வேண்டும் என்பதை, நாம் மனதில் இருத்த வேண்டும். தமிழினியோ நாகராசனோ அரசியலில் முக்கியமானவர்களாக ஆசிரியரால் சொல்லப்படுகிறது; ஆனால், அவர்களின் அரசியல் / இயக்கச் செயற்பாட்டுச் சித்திரிப்புகள் அதிகமில்லை (சில தமிழ்ப் படங்களில் எம். ஜி. ஆர். "டொக்ர"ராகவோ விவசாயியாகவோ இரண்டொரு காட்சிகளில் வருவார்; ஆனால், பிறகு அப்பாத்திரங்களுக்குரிய செயற்பாட்டுக் காட்சிகள் இல்லாமல், அவர் கதாநாயகிக்குப் பின்னால் பாடித்திரிவது முதலிய வேறு காட்சிகளே காட்டப்படுவது இங்கு நினைவுக்கு வருகிறது!).

தமிழ்ப் போராட்டத் தரப்பின்மீது குவிமையப்படுத்தும் நாவல், இந்திய அரசின் சதிச்செயல்கள் / இலங்கை அரசின் கொடூரங்கள், (பிரதான முரண்பாடுபற்றிய கணிப்பீட்டுத் தவறினால்) காலத்துக்குக்காலம் இரண்டு அரசுகளுடனும் இணைந்து ஒட்டுக்குழுக்களாகச் செயற்பட்ட தமிழ் இயக்கங்கள் / பாராளுமன்ற அரசியல்வாதிகள், மேற்குலகின் "மனித உரிமை" முலாம் பூசப்பட்ட - சுயநல தந்திரச் செயற்பாடுகள், முஸ்லிம் பிரச்சினையின் மறுபக்கம், போராட்டகாலத்தின் பல்துறை நற்கனிகள் போன்றவற்றில் கவனம்கொள்ளவில்லை!

இனி, நாவலின் கருத்துநிலைப் பலவீனம் தவிர்ந்த ஏனைய பலவீனங்களைப் பார்க்கலாம்.

இடக் குழப்பம் :
ஆரம்பத்திலும் இடையில் சில இடங்களிலுமான சித்திரிப்புகள் - தவம், தமிழினி ஆகியோரின் வீடு இருக்கும் சங்கிலியன் தரை தீவுப் பகுதியிலுள்ள தெனக் கருதவைக்கின்றன. ஆனால் ஏனைய இடங்களில், சங்கிலியன் தரை இருப்பது யாழ்ப்பாணத்தில் சட்டநாதர் கோவிலுக்கு அண்மையில் எனச் சித்திரிக்கப்படுகின்றது.

பெயர்க் குழப்பம் :
முக்கிய பாத்திரமான தமிழினியின் பெயர் பல இடங்களில் - யாழினி, தமிழி எனக் குறிப்பிடப்படுகின்றது.

காலக் குழப்பம் :
தமிழினி நாகராசனுடன் வன்னிக்கு ஓடிச் செல்லும்போது தம்பி தவத்தின் வயது 12 எனச் சொல்லப்படுகிறது. ஆனால் அதற்குமுன், இயக்கத்திற்குப் பயந்து தவம் ஊரைவிட்டு ஓடிச்செல்கிறான்; அப்போது அவன் ஏ. எல். பரீட்சை எழுதிமுடித்தவன்!

பிரான்சுக்குச் சென்ற அவன் 10 ஆண்டுகளின் பின் ஊருக்கு வருகிறான் எனக் குறிப்பிடப்படுகிறது; பிறிதோரிடத்தில் 7 ஆண்டுகளின் பின் வருகிறான் எனச் சொல்லப்படுகிறது!

*1995* ஐப்பசி இடப்பெயர்வில் தவம், தமிழினி, குழந்தை சுதந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் முதலில் சாவகச்சேரியை அடைகின்றனர். பிறகு, ஒரு நாள் தங்கி ஓய்வெடுத்தபின் வன்னிக்குச் செல்ல முடிவெடுக்கின்றனர். அவ்வேளை யாழ்நகரைப் படைகள் கைப்பற்றி வெற்றி விழாக் கொண்டாடும் செய்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால், படைகள் யாழ்நகரைக் கைப்பற்றியது மார்கழியிலாகும்!

இவ்வாறான காலக் குழப்பங்கள் இன்னும் பல உள்ளன!

மொழி :

பல இடங்களில் பால் மயக்கம் காணப்படுகின்றது. ஆண் பெண்ணாக வும் பெண் ஆணாகவும் எழுதப்பட்டுள்ளன; ள் / ன் குழப்பங்கள் ஏராளமான இடங் களில்! ஒருமை பன்மைக் குறைபாடுகளும் பல இடங்களில்.

மொழிநடையில் சிறப்பைக் காண முடியவில்லை ; சாதாரண விவரண மொழியே பெரிதும் கையாளப்பட்டுள்ளது. ஓர் உதாரணம் :

//1990 இல் முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியதற்கு பின்னர் 1991 இல் தீவுப் பகுதி மக்கள் தம் இருப்பிடங்களை விட்டு யாழ்ப்பாணத்தை நோக்கி இடம் பெயர்ந்தது இன்னொரு முக்கியமான இடப்பெயர்வாகும். ஊர்காவற்றுறை மற்றும் அதை அண்டிய நாரந்தனை, சரவணை, சுருவில், வேலணை, வேலணைக்கப்பால் கடலால் பிரிக்கப்பட்டு றோட்டால் இணைக்கப்பட்டிருந்த புங்குடுதீவு, இன்னும் அராலிச் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கியிருந்த சாட்டி மங்கும் பான் மண்டைதீவு ஆகிய தீவுகளில் இருந்த அனைத்து மக்களும் பதற்றத்தோடு யாழ்ப்பாணத்தை நோக்கி புறப்பட்டனர். // (பக்.173)

177 - 181 ஆம் பக்கங்களிலுள்ள வரலாற்று விரிவுரையாளரின் தரவுக்குறிப்புகளும்; 181 - 185 வரையிலான ஆசிரியரின் விவரணங்களும் கட்டுரைப் பாணியி லமைந்து பிரச்சார உணர்வை எழுப்புகின்றன.

இவ்வாறே, முதிர்ச்சியற்ற தேய்வழக்குகளும் காணப்படுகின்றன.

பக். 61 // ... என்று தமிழி சொன்னதுதான் தாமதம் வில்லை விட்டுப் பாயும் அம்பாய் அவர்கள் விரைந்தனர். //

பக். 186 // அப்படி அவர்கள் பிடியைத் தளர்த்தும் சந்தர்ப்பங்களில் வில்லை விட்டுப் போகும் அம்பு போல் முன்னால் "விர்" எனப் பாய்வான். //

பக். 146 // ... என்று அவள் சொன்னதே அவனுக்கு நெஞ்சில் பாலை வார்ப்பது போல் இருந்தது. //

பக். 49 // ... வட்டக்கச்சியை அண்மித்தும் கனவில் மூழ்கியிருந்தவளாய் இருந்தபோது //

**

முடிவாகப் பார்க்கையில் - அரசியல் / வரலாற்று நிகழ்வுகளைப் புறநிலை நோக்கில் பார்க்காமல், கற்பனாவாதக் கருத்துநிலையில், கடந்தகாலப் போராட்டத்தை முற்றிலும் நிராகரிப்பதாய் - வெறுமனே சுதந்திரா (சுதந்திரம்), சமஸ்தா (சமஷ்டி) போன்ற சொல்விளையாட்டுடனும், பல்வகைக் குளறுபடிகளுடனும், படைப்புமொழியற்று சாதாரண மொழியில் "செய்யப்பட்ட" ஒரு முயற்சியாகவே, இந்த நாவல் அமைந்துள்ளது! ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைவுறும் வாழ்க்கை : கொரில்லாவால் நட்சத்திர அழிக்குறிப்பெழுதல்

■ ந. மயூரரூபன் ■



ஷோபாசக்தியின் எழுத்துகள் தொடர்ச்சியாக பேசப்பட்டுவருபவை. பல்வேறு கேள்விகளையும் விவாதங்களையும் தங்களுக்குள் கொண்டவையாக அவரின் படைப்புகள் காணப்படுகின்றன. ஷோபாசக்தியின் நாவல்கள் இவ்வாறான பல்வேறு வெவ்வேறுநிலை விமர்சனங்களைக் கண்டிருப்பதைக் கண்டிருக்கிறோம். "கொரில்லா" நாவல் **2001** ஆண்டு வெளிவந்தது. இருபத்திரண்டு ஆண்டுகளில் "கொரில்லா" மீதான கருத்துக்களும் பல வகைகளில் காணக்கிடைக்கிறது.

கொரில்லா நாவல் மீது அதன் அமைப்பு மற்றும் அரசியல் தொடர்பான விமர்சனங்கள் வந்திருக்கின்றன.

சாருநிவேதிதா கொரில்லா செய்திப்பதிவுகளால் நிறைந்த ஒன்றே, இலக்கியமல்ல எனும் கருத்துப்பட பேசியிருக்கிறார். கற்சுறா: விடுதலைப் புலிகள் சார்பு நாவல் என்கிறார். இந்நாவலில் பல விடயங்கள் ஷோபா சக்தியால் மறக்கப்பட்டு அல்லது மறைக்கப்பட்டிருக்கிறது என்கிறார் ஜீவமுரளி.

கொரில்லாவில் பேசப்பட்டுள்ள வரலாற்றுண்மை போன்ற தோற்ற மயக்கமும் புனைவும் வாசிப்பவருக்கு சமகால அரசியல் தொடர்பான விசயத்தினையும் எழுத்து மீதான விரோதத்தினையும் ஒரு விதமான குழப்பத்தையும் ஏற்படுத்தவல்லது. அதற்கான அனைத்து சாங்கியமும் கொரில்லாவில் உண்டு.

ஒரு விதத்தில் அண்மைக்காலத்தில் பெருகியுள்ள புனைவுகளில் "வரலாற்றுண்மையை" நிலைநாட்டுகின்ற அவ்வாறான தோற்ற மயக்கத்தை உருவாக்குகின்ற எழுத்துகளுக்கு ஷோபாசக்தியை முன்னோடியாகக் கூறமுடியும்.

"கொரில்லா", ஷோபாசக்தியின் முதலாவது நாவல்.

"அது தன் வரலாறும் புனைவும் கலந்த முறையில் எழுதப்பட்டது. நான் விடுதலை இயக்கத்தில் இயங்கிய நாட்களையும் எனது அகதி வாழ்வையும் மட்டுமல்ல என்போன்ற மற்றும் சிலருடைய அனுபவங்களையும் தொகுத்து நாவலாக்கியுள்ளேன். அது மிக நேரடியான ஒரு ஒரு அரசியற் பிரதி தான்"

என அண்மையில் வழங்கிய நேர்காணல் ஒன்றில் ஷோபாசக்தி குறிப்பிடுகிறார்.

ஷோபாசக்தி தனது நேர்காணலில் குறிப்பிடுகின்ற பின்வரும் இரண்டு விடயங்களின் அடிப்படையில் இக்கட்டுரையைஅணுகலாம் என நினைக்கிறேன்.

1. "நானோ என்னுடைய எழுத்தோ ஒரு போதும் இன, மத, பால் அடிப்படைவாதிகளின் பக்கம் சாயாது; என்ற தன்னம்பிக்கையும் தெளிவும் உண்டு.

2. "போராளி" என தன்னை ஏற்காத மனநிலை.

இந்த இரண்டு அடிப்படைகளிலிருந்தும் நாம் புரிந்து கொள்ளக் கூடியது, ஷோபாசக்தி; கொள்கை, சமூகத்திலுள்ள பெருங்கதையாடல், அமைப்புநிலையிலிருந்து விலகியிருத்தல், தனிப்பட்ட அரசியல் நம்பிக்கை என இயங்குகின்ற மனவுருவாக்கத்தை கொண்டவர் என்பதே.

"புலிகளுக்கெதிரான நிலைதான் ஷோபாசக்தியின் எழுத்துகளில் மிகுந்திருக்கிறது" என்கிற "ட்ரேட் மார்க்" எப்போதுமே ஷோபாசக்தியின் எழுத்துக்களிலும் அவரது எழுத்துகள் மீதான விமர்சனங்களிலும் காணப்படு கிறது. பொதுவாக ஷோபாசக்தியின் பிரதிகள் அனைத்துமே அரசியற் பிரதிகள் தான்.

ஷோபாசக்தியின் அரசியலை கொரில்லாவினூடாக நான் பின்வரும் நான்கு தளங்களினூடாக அடையாளப்படுத்த விரும்புகிறேன்.

1. கொரில்லா

நாவலின் தலைப்பு இது.

காட்டாற்ற ஏசுராசன் கொரில்லா என அழைக்கப்படுகிறான். அவனது இயல்பு, வாழ்க்கைமுறை விபரிக்கப்படுகின்றது. குஞ்சன்வயலில் ஏசுராசனை கொரில்லா என அனைவரும் அழைக்கிறார்கள்.

"இந்த ஏரியாவுக்கு ஊத்தை எஸ்.பி கண்டுகொள். ஊத்தை எஸ்.பி எண்டால் கொரில்லா ஐ.ஜி எண்டு போய் அவனட்டச் சொல்லு கம்மாகோ சிக்காகோ"

தனது ஊரில் எதற்கும் அடங்காத சண்டியான கொரில்லா, தன்னை கொரில்லா என்கிறான்.

அவனது மகன் ரொக்கிராஜ், அவன் இயக்கத்திலிருக்கும் போது எல்லோராலும் கொரில்லா என அழைக்கப்படுகிறான்.

இறுதியாக புலம் பெயர்ந்து பிரான்சில் பொலிஸிடம் அகப்பட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டபோது உண்மை அறியும் கருவிக்கு முன்பாக,

"அண்ணே என்னுடைய பெயர் கொரில்லா என்றுஅதிகாரிக்குச் சொல்லிப் பாருங்கள்" என்றேன்.

இந்நாவலில் "கொரில்லா"வின் பயணமும், பயன்படுத்தப்பட்ட முறைமையும் மிக முக்கியமானது.

"கொரில்லா" என்றால் என்ன? என்கிறகேள்வி மிக முக்கியமானது. ஷோபாசக்தி இதற்கு சில வரைவிலக்கணங்களை தியரியாகத் தருகிறார். கதையில் பிறக்றிக்கலாக கொரில்லா தெரிவது அதன் சிறப்பு. ரொக்கிராஜ் என்கிற "கொரில்லா"; வெவ்வேறு மனிதர்களுக்குள்ளும் ஒளிந்திருக்கின்ற யதார்த்தத்தை இந்நாவலில் கண்டு கொள்ளலாம். "லொக்கா" எனப்படுகின்ற சபாநாதனிடமும், நான் எனப்படுகின்ற அந்தகதை சொல்லியிடமும் "கொரில்லா"வின் இயல்பு, அல்ல அவர்கள் கொரில்லாவாக காணப்படு கிறார்கள் என்பதுவும்; ஒரு இயக்கத்திலிருக் கின்ற ஒருவனின் செயற்பாடு? அவனின் சுயநலம், அவனின் முதலாளித்துவ சாய்வு, சாதிய ஒட்டுணர்வு, என்பதனூடாகவும், புலம்பெயர்ந்த பின் போலி போராட்ட எண்ணங்களும், கொள்கைகளும், சாதிய சமய தீவிரவாதமும் வெளிப்படு தன்மை யினூடாக வும் நாம் "கொரில்லா" இனை புரிந்து கொள்ள முடியும். இன்னொரு வகையில் ரொக்கிராஜ் இயக்கத்திலிருக்கும் போது எவ்வாறு கொள்கை நம்பிக்கை யுடன் அர்ப்பணிப்புடன் இருந்தானென்பதையும் புலம் பெயர்ந்த பின் தலைகீழாக மாற்றங்கண்டு கொரில்லாவாகி, மறைவாகிறான் என்பதையும் புரிந்து கொள்ளலாம். ஈழத்தில் போராளியாக இருந்தவர்கள் அதிலிருந்து விலகி புலம்பெயர்ந்த பின் மறைந்து வாழ வேண்டிய, மறைந்து பாதுகாப்புத் தேட வேண்டிய, சுய அடையாளத்தை இழக்க வேண்டிய அவலத்தை கொரில்லா சொல்கிறது.

**2. குஞ்சன் வயல்**

எமது யாழ்ப்பாணத்தில் ஒரு கிராமம் எப்படி உருவாகிறது; அங்குள்ள சாதியமைப்பின் செல்வாக்கு மற்றும் புறக்கணிப்பு சொல்லப்படுகிறது.

அங்குள்ள மக்களை எப்படி பயன்படுத்துகிறார்கள்; போராட்டத்திற்கு தேவைப்படும் மக்களும் அவர்களே துரொகிகளாய் சுடப்படும் மக்களும் அவர்களே என்கிற ஒரு பதிவை ஷோபாசக்தி செய்கிறார்.

ஒரு கிராமத்தின் சிதைவு காட்டப்படுகிறது.

"குஞ்சன் வயலுக்குள் இயக்கங்கள் நுழைந்த காலங்களில் மற்றைய ஊர்களைப் போலவே இங்கேயும் சாதிவாரியாகத்தான் இயக்கங்களில் இணைத்துக் கொண்டார்கள் அல்லது இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.

இலக்கங்களால் "சமூகவிரோதிகள்" எனச்சொல்லப்பட்டுசனங்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்ட போதும் மற்றைய ஊர்களைப் போலவே இங்கேயும் முதலில் சுட்டுக்கொல்லப்பட்டவர் ஒரு பஞ்சமரே" (பக் 41)

**3. கொள்கை/அமைப்புசார் செயற்பாடு**

"போராளி" என அழைக்கப்படுவதை ஷோபாசக்தி ஏற்காத மனநிலையை அவரது நேர்காணலில் காணமுடிந்தது.

ஷோபாசக்தி, விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஆயுதப் பயிற்சி பெற்று உறுப்பினராக இருந்து இடைநடுவில் வெளியேறியவர் என்கிற விடயமும் ஐரோப்பாவில் ட்ராட்ஸ்கிய இடது சாரி அமைப்பில் செயற்பட்டவர், கம்யூனிசத்தில் பற்றுக்கொண்டவர், ஆயினும் அதிலிருந்தும் இடைநடுவில் விலகிக் கொண்டார்.

அமைப்பாக இயங்குகின்ற தன்மையிலிருந்து விடுபடுகின்ற ஒரு விடயத்தை இங்கு காணலாம்; கட்டுப்பாடு, கட்டுப்படுத்துகின்றதன்மை, சுயசிந்தனை சுதந்திரம் தரமுடியாத அமைப்பாக்க முறைமை என்பன இதற்குக் காரணமாக அமைய முடியும்.

ஒரு வேளை அவற்றில் மறைமுகமாக இயங்கிக் கொண்டிருக்கும் "வன்முறை" கூட காரணமாக இருந்திருக்கலாம்.

அந்த அமைப்புகளுக்குள் இருந்த உறுப்பினர்களிடம் காணப்பட்ட அந்த "கொரில்லா" குணமாக அமைந்திருக்க முடியும்.

டாவிட் பாடுகின்ற "ஒரு அணுகுண்டின் ஜாவா நடனம் குறித்த பாடல், அல்லது காசியின்,

"உனக்கு நான் இவற்றை றக்ரரை மறிக்கச் சொல்லி சொன்னனானோ? இஞ்ச நீ இயக்கம் நடத்துறியா? இல்லை நான் இயக்கம் நடத்துறனா? போய் ஏறுங்கடா வானில"

என்கிற கூற்றாகக் கூட இருக்க முடியும்.

ஆயினும், குஞ்சன் வயல் கிராமத்தின் தோற்றம் தொடர்பான விபரிப்பில் ஷோபாசக்தியின் சாதிய அமைப்பு முறை மீதான எதிர்ப்புணர்வு வெளிப்படுகிறது. அது அவரின் கொள்கைகளில் ஒன்றாக அமையமுடியும்.

"சாதிமான்களும் செம்புக்காரர்களுமாய் ஊரே ஒத்து குஞ்சன் பகுதியினருக்கு சீவுவதற்கு மரங்கள் கொடுப்பதற்கு மறுத்துவிட்டனராம்"

என்பதில் வெளிப்படுகின்ற எள்ளல் தொனி இதனை வெளிப்படுத்துகிறது. கொள்கையை அவர் தீவிரத்தன்மை கொண்டாக கடைப்பிடிக்கவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டு,

"தாமிப் பரியாரி ஊர்மனைக்குப் புறத்தே கிடந்த வண்ணான் குளத்தருகே சீவித்து வந்தார்"

என்கிற கூற்று இயல்பாக கடந்து போவதனைக் கவனிக்கலாம்.

- பயிற்சியில் இருக்கும் இளைஞர்களின் வீடுகளில் சோகம் நிழலாடுகிறது. லெபனானில் பலஸ்தீன விடுதலை இயக்கமொன்றின் பயிற்சி முகாமில் இருக்கும் ரஹீமின் அம்மா தவமணி "நான் சாவதற்கு முன் அவனைப் பார்க்க வேண்டும் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இப்படிப் "பொடியன்கள்" போராட்டத்தில் இறங்குவதால் கலங்கும் தமிழ்க் குடும்பங்களின் எண்ணிக்கை கடந்த ஒரு வருடமாக கணிசமாக அதிகரித்திருக்கிறது. (பக் 55)

இவ்வாறான தகவல்கள் போராட்டக் குழுக்களுக்கு எதிரான கொள்கையை வெளிப் படுத்துவதாக அமைகிறது.

- "பின்ன லொக்கா உங்கள் மகாத்மா தோன்றிவிட்டாரா? இல்லை இனித்தான் தோன்றுவாரா? அப்படியே தோன்றினாலும் தேசியத் தலைவர் வெடிக்குத் தப்பிப் பிழைப்பாரா?"
- பிரின்சியின் தற்கொலைத் தாக்குதல் விபரணை (பக் 44) என்பவை புலிகள் மீதான எதிர்ப்புணர்வை காட்டுகின்ற இரண்டு வெவ்வேறு விதமான வெளிப்பாட்டு விடயங்களாக எடுத்துக்காட்ட கூடியவை.

4. வன்முறை

கொரில்லாவில் பிரதான பாத்திரமாக அமைவதே வன்முறை, அதற்கெதிரா ஷோபாசத்தியின் எழுத்து சில எடுத்துக்காட்டுகளை இங்கு சொல்ல முடியும்.

- காட்டற்ற ஏசுராசனின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பொலிசுக்காரர்கள் நின்று பெற்றன் பொல்லுகளால் அவனின் முதுகுத்தோலில் இரத்தம் வர விளாசிக்கொண்டிருந்தார்கள்.
- தமது கொட்டிலினுள் அயர்ந்து கிடந்த குஞ்சனும் அவரின் பெண்சாதி செல்லியும் மாடுகளின் கதறலைக் கேட்டு விழித்து பதறியடித்து ஓடியபோது அவர்களின் குடிசையிலும் நெருப்பைப் பற்ற வைத்து விட்டு ஓடுவதைக் கண்டார்களாம். இறவாணத்தில் கொழுவியிருந்த இயனக்கூட்டுக்குள் இருந்த பாளைக்கத்தியை உருவி எடுத்துக்கொண்டு குஞ்சன் ஓடுபவர்களை கலைத்துக்கொண்டு போனாராம். அவர் திரும்பி வரும்போது செல்லி காலும் கையும் முகமும் கருகிக்கிடந்தார். (பக் 39)
- அவன் உதடுகள் "இயேசுவே இரட்சியும்" என்று சொன்னதும் அவளின் மார்பில் பொருத்தப்பட்டிருந்த குண்டுகள் வெடித்ததும் ஒரே கணத்தில் நிகழ்ந்தன. (பக் 45)
- நடராசா உதயசூரியன் (1966 - 1991) நீண்டநாட்களாக விசாரணைகள் ஏதுமின்றி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (D.O) கீழ் மாற சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்து Schizophernia மனநோய் முற்றியநிலையில் சிறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.
- விநாயக மூர்த்தி தயாபரமூர்த்தி (1968 - 1985) : இயக்கத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்ட போது சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு சில நாட்களிலேயே மரணம்(பக் 69)
- குஞ்சன் வயல் கடற்கரையே ரெத்த வெடில் பிச்சுது. ஒவ்வொரு வாகனமாக ஓடி ஓடி ரொக்கிராஜ் பிரேதங்களைப் பார்த்தான். அவனாக நிலத்தில் நிக்கக் கூட ஏலாமலுக்குத் தலைசுத்தி அப்படியே ரோட்டில் இருந்திற்றான். குழந்தை, குஞ்சு, குருமான், ஆம்பிளையள், பொம்பிளையள் எண்டு எல்லாமாய் ஐம்பத்து சொச்ச பிரேதங்கள். எல்லாரையும் வெட்டித்தான் கொலை செய்திருக்கிறாங்கள். (பக் 90)
- ரவி (சின்னாண்டி திருக்கேதீஸ்வரன் (1970 - 1990) இங்கிலாந்துக்குப் புலம்பெயர்ந்த சில தமிழ் இளைஞர்களுக்கு இடையே நடந்து வரும் குழுமோதல்களின் காரணமாக லண்டன் திரையரங்கினுள் வைத்து மூன்று தமிழ் இளைஞர்களால் வாளால் வெட்டி கொலை செய்யப்பட்டார்.
- ஒவ்வொரு நாளும் நான் கையெழுத்திடப் போகும் போதெல்லாம் அங்கிருக்கும் பொலிசார் என்னைப் பிடித்து அடிப்பார்கள். சட்டையைக் கழற்றி வருவோர் போவோருக்கெல்லாம் எனது காயங் களைக் காட்டி "கொட்டியா" எனக்கூறி பரிகசிப்பார்கள் (பக் 22)
- தம்பி இரண்டு கண்களும் அழுகி விழுமளவிற்கு கொலைகளைப் பார்த்துப் போயிருக்கும் ஒரு நாட்டிலிருந்து வந்த அகதிகளா நீங்கள்? உன்னைச்சுடு என்னைச்சுடு என்று என்ன நீங்கள் பேசுவது?

மேற்காட்டியவை சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே. நாவலில் வன்முறையின் பாத்திரமும் அதன் பயணமும் மிக முக்கியமானது.

குஞ்சனில் தொடங்கிய வன்முறை குஞ்சன் வயலில் கொரில்லாவி னூடாக அனைத்துத் தரப்பிடமிருந்தும் வெளிப்படும் தன்மையை ஷோபா நுணுக்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

இங்கு மிக முக்கியமாகவும் தனித்துவமாகவும் நோக்கத்தக்கது?, "லொக்கா" எனப்படும் பாத்திரம்,

கொள்கையளவிலும், கருத்தளவிலும் வன்முறைக்கு எதிரானவராக காட்டிக் கொள்ளுகின்ற அவரின் உள்மனதில் குந்தியிருக்கிற வன்முறை ஜீவராணியிடம் வெளிப்படுத்தப்படுகிறது.

"கருத்தை கருத்தால் தான் எதிர்கொள்ள வேண்டும்" என்று லொக்கா குறிப்பிட,

"எது லொக்கா கருத்து? நான் உங்களைப் பார்த்து எனக்கு உங்களின் மனைவிக்கு ஒக்க ஆசையாக இருக்கிறது என்று சொன்னால் கருத்தா? என அந்தோணி கேட்க

ஆம் அதுவும் கருத்து தான் என்கிறார்,

ஆனால்,

"சடசட வென கத்திரிக்கோலால் மூர்க்கத்துடன் ஜீவராணியின் மார்பு, முகம், குரல்வளை, அடிவயிறு, பெண்குறி எங்கும் குத்துகிறார் லொக்க. ஜீவராணி நிலத்தில் துடித்து விழுகிறார். அழைப்புமணி விடாமல் ஒலித்துக் கொண்டிருக்க லொக்கா ஜீவராணிக்கு அருகில் அமர்ந்து ஜீவராணியின் தலைமுடியை கொஞ்சம்கொஞ்சமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திரித்துக் கொண்டிருக்கிறார்"

ஒரு யுத்த பூமியின் வன்முறையும் அது தருகின்ற மனப்பிறழ்வும் தொடர்ந்து துரத்துகின்ற அவலத்தை கொரில்லா கட்டி நிற்கிறது.

**5. உண்மைத் தகவல்களால் போடப்படும் கீழ்க்குறிப்பு**

நாவலில் ஆங்காங்கே வரலாற்றுஉண்மைத் தகவல்களாய் விரியும் நட்சத்திரக் குறியிடப்பட்ட தகவல்கள் "கொரில்லாவுக்கான" ஒரு உத்தி முறையாக காணப்படுகிறது. அதுவே ஒரு வகையில் வரலாற்று உருவாக்க மயக்கத்தை தருவதாகவும் அமைகிறது.

- இந்திராகாந்திதொடர்பான குறிப்பு
- ஞானப்பிரகாசம் கொன்சிலாஸ் ஏசராசன் (1933 - 1984), ஆனைக் கோட்டையிலுள்ள அவரது வீட்டில் வைத்து ஆயுதந்தாங்கிய இரு இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- டாவிட் 60 சீனர்களை கனரக வாகனத்தில் வைத்து கடத்தியதற்கான குறிப்பு
- குஞ்சன் தொடர்பான தகவல்
- சுந்தரம் சபாரத்தினம் மறுபெயர் பெரிய சிறீ 06.05.1986 அன்று யாழ்ப்பாணம் கிராமமான கோண்டாவிலில் புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்டார்.
- ஜெனோவா ராசேஸ்வரி (1949 1990) இரண்டாம் ஈழப்போரின் ஆரம்ப நாட்களில் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியிருந்த யாழ் டச்சுக் கோட்டை இராணுவத்தினரை மீட்பதற்காக 22.08.1990 அன்று வடக்குப் பெரு வீதியால் முன்னேறிய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அன்றைய நாளில் மட்டும் குஞ்சன் வயலில் முப்பத்தியிரண்டு பேர்கள் சிங்கள இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இவ்வாறு "கொரில்லா" நட்சத்திரக்குறியிட்ட, நான்குறிப்பிடப்பட்ட தகவல்களால் செறிந்துள்ளது.

இதுஒருவகையில் குஞ்சன் வயல் கிராமத்தின் சிதைவுக்கு இராணுவத்தின் மற்றும் புலிகளின் பிரசன்னத்தை அடையாளப்படுத்துவதாக அமைகிறது. அனைத்து தரப்பினரினதும் தகவல்கள் ஆங்காங்கே தரப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கொரில்லா நாவல் பேசுகின்ற அரசியலுக்கான புள்ளிகளை இந்த ஐந்து தளங்களினூடாகவும் எடுத்துக்காட்ட முனைந்திருக்கிறேன்.

ஒரு வன்முறையான மனவடுவுள்ள சமூகத்தை உற்பத்தி செய்கின்ற அதன் தொடர்ச்சியை உள் மன அடுக்குகளில் பதைத்து வைத்திருக்கிறமைக் கான சான்றாதாரங்களை கொரில்லா தருகிறது.

இந்த மனவடுவும் வன்முறையும் எங்குபோனாலும் எவ்வளவு காலங் கடந்தாலும் ஏதொவொரு கணத்தில் உடைப்பெடுத்துச் சிதைத்துப் போகும் என்பதை கொரில்லா குறித்து நிற்பதாகச் சொல்லலாம்.

ஆயினும் கொரில்லா பேசும் அரசியல் என்பது; ஒரு எதிர்நிலை யெடுத்தல் அரசியலைப் பேசுகிறது. அதாவது அமைப்பாகச் செயற்படும் தளங்களில் கருத்துகளில் நம்பிக்கையில்லாமல் விலகிச் சென்ற ஒருவரான ஷோபாசக்தி, தான் நம்பிக்கைவைத்து செயற்பட்டு பின் விலகிய அமைப்பு களை கடுமையாக விமர்சிக்கிறான். புலிகள் அமைப்பும், ட்ரொஸ்கிய செயற்பாட்டுக் குழுவும் இதற்கு எடுத்துக்காட்டு.

அதேபோல் வன்முறையை அடுக்கிச் செல்லும் ஷோபாசக்தி அதனை வெறுமனே தகவல்களாக, நம்பகத்தன்மையை உருவாக்கும் தகவல்களாக அடுக்கிச் செய்கிறார். இது "கொரில்லா" இனுடைய மைய இழையை வாசகர் கண்டடைவதற் கான குழப்பத்தை ஏற்படுத்தி விடுகிறது. புலிகள், வேறு குழுக்கள், அரசு, இராணுவம், ட்ரொட்ஸ்கிய அமைப்பு, உடனிருப்பவர்கள், உறவினர்கள் எனப் பரந்துபோகும் அடுக்குகளில் மைய அரசியல் ஒளிந்து கொள்கிறது எனவே எண்ணைத்தோன்றுகிறது. குறிப்பாக தனி மனிதர்களை, தனி ஒரு அமைப்பினை குற்றஞ் சுமத்தாத போக்கு இங்கு காணப்பட்டாலும் ஒரு கருத்துருவமான, வன்முறை எதிர்ப்பு( கொலையெதிர்ப்பு, பழிவாங்கும் உணர்வு எதிர்ப்பு, யுத்த எதிர்ப்பு) என்ற உலகளாவிய கொள்கையின் அடிப்படைகளை கொரில்லாவின் மைய இழையாக வெளித்தெரிய விட்டிருக்கிறார்.

2001ம் ஆண்டில் சமகாலத்தில் நிலவிய ஜனரஞ்சக அரசியலுக்கு எதிரான மனநிலையை கொண்டுவரும் உத்தியாக கொரில்லாத அமைந் திருக்கிறது.

குறித்தகாலப்பகுதியின அரசியலும், நம்பும் அரசியலை சிதைத்தலும் கொரில்லாவின் இயக்கமாக அமைந்திருப்பது மிக முக்கியமானது. அதுவே இதன் அடிப்படையுமாகும்.

அது ஒருவகையில் கொரில்லாவுக்கான விளம்பரமாகவும் அமைந்து விட்டிருந்தது. சமகால வரலாற்றைப் புனைவுகளில் கொண்டுவருதல் என்பது அரசியல் பன்முகத் தன்மை கொண்டது. அது தான் நம்பும் அரசியலை எப்போதும் முன்நிறுத்தவே விளையும். அதேபோல், வரலாற்றிலிருந்து புனைவைக் கொண்டு வருவதற்கும், புனைவிலிருந்து வரலாற்றை உருவாக்கு வதற்கும் வேறுபாடுண்டு, அது பல்வேறு சந்தேகங்களையும் கொண்டு வரவல்லது.

கொரில்லா அரசியல் என்பது, ஷோபாசக்தியின் மீது சந்தேகங்களை உருவாக்கியிருந்தது. இது அரசியல் புனைவுகளுக்கும் எழுத்தாளர்களுக்கும் நிகழ்வது. அதே நேரத்தில் நாவலில் காலப்பகுதி மற்றும் நட்சத்திர அடிக்குறிப்புகளுடன் வரலாற்றை இணைத்திருத்தல் என்பது மிகவும் கவனத்திற்குரியது. சந்தேகங்களைத் தக்க வைக்கக் கூடியவை. தமிழர்கள், தமது சக மனிதர்கள்மீது சந்தேகங்களை எப்போதும் உருவாக்கிக் கொண்டே இருக்கிறார்கள்.

ஷோபாசக்தியின் புனைவும்அவ்வாறே சந்தேகங்களை தொடர்ந்து உருவாக்கி உலவவிட்டுக் கொண்டிருக்கிறது.

•

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி வெளியீடுகள்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org